கதை சொல்லுகிறார்

கி.வா.ஜ.

கதை சொல்லுகிறார்

கி. வா. ஜ.

அல்லயன்ஸ் கம்பெனி
244, ராமகிருஷ்ணா மடம் சாலை
தபாற் பெட்டி எண் 617
மயிலாப்பூர் :: சென்னை-600 004.

உரிமை பதிவு

முதற் பதிப்பு : டிசம்பர், 1993

விலை : ரூ. 20-00

தாய்க்குலம் பிரிண்டிங் யூனிட்,
சென்னை-600 005.

நூற்றாண்டை நோக்கி...

"தமிழில் நல்ல நூல்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸ் ஸ்தாபகர் ஸ்ரீ. வி. குப்புசாமி ஐயரை நான் பாராட்டுகின்றேன்."

— மகாத்மா காந்தி

"நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளையும், பல நாடகங்களையும், பல மொழி பெயர்ப்புக்களையும், இன்னும் பல விஷயங்களையும் எளிய அழகிய நடையில் வெளியிட்டு வரும் அல்லயன்ஸாரை நான் பாராட்டு கின்றேன்."

— மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்

"Books published by Alliance Company are highly popular Books."

— Rt. Hon'ble V. S. Srinivasa Sastri

"தமிழில் அழகிய புத்தகங்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸாருக்கு நன்றி செலுத்தி அவர்களைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டுகிறேன்."

— ராஜாஜி

"அல்லயன்ஸ் கம்பெனியார் நல்ல நூல்களை வெளி யிடுவதில் தேர்ந்தவர்கள். அவர்களுக்குத் தமிழ் நாட்டார் தக்க ஊக்கம் தர வேண்டும் என விரும்பு கிறேன்."

— சத்தியமூர்த்தி

"மயிலை அல்லயன்ஸ் கம்பெனியாரின் வெளியீட்டுத் திறத்தை ஈண்டு விரித்துக் கூற வேண்டியதில்லை, அதை நாடறியும். அல்லயன்ஸ் கம்பெனியாரால் வெளியிடப் பெற்ற நூல்கள் யாவும் தமிழ்நாட்டுக்குப் பலவழி களிலும் பயன் விளைத்து வருவது கண்கூடு. நாட்டு நலங் கருதி ஒழுங்கு முறையில் உழைக்கும் அவர்களுக்கு நாடு கடமைப் படுவதாக."

— திரு. வி. க.

ரஸிகருக்கு

அன்புள்ள ஐயா,

இந்தப் புஸ்தகத்திலுள்ள பதினாறு கதைகளையும் உங்களுக்கு ஸமர்ப்பிக்கிறேன். சமீப காலமாகத் தமிழ் நாட்டில் சிறுகதைக் கொடி முளைத்துப் படர்ந்து பூத்துப் பொலிவு பெற்று வருவதை நீங்கள் உணர்ந்தவர்கள் ஆயிற்றே. எத்தனையோ வகையான எழுத்தாளர்கள் இப்போது சிறுகதை எழுதுகிறார்கள். மனிதன் நினைப்பதையெல்லாம், சொல்லவேண்டியதையெல்லாம் சிறு கதையிலே எழுதிவிடலாமென்ற நிலைக்கு வளர்ந்து இருக்கிறது சிறுகதைச் சிருஷ்டி.

நீதிமார்க்க உபதேசம், அரசியல் பிரசாரம், மனஸ் தத்துவ ஆராய்ச்சி, ஹாஸ்ய உணர்ச்சி, வாழ்க்கைச் சித்திரம், கற்பனையென்ற பல பல கதைகளிலே சிறுகதை தனக்கு உரிய கருவைப் பெற்றுக் கொள்கிறது.

இந்தப் பதினாறு கதைகளில் 1932-ஆம் வருஷம் எழுதின கதை 'அவலக்ஷணத்தின் விலை' என்பது. அது முதல் 1942-ஆம் வருஷம் வரையில் அவ்வப்போது எழுதின கதைகளை இதில் காணலாம். பத்து வருஷ காலத்தில், கதையை எழுதினவனுடைய அறிவோ, எழுத்துத் திறமையோ, நடையோ, முட்டாள்தனமோ எவ்வளவு தூரம் விருத்தியாயிருக்கின்றனவென்பதை அளப்பதற்கு இந்தப் புஸ்தகத்தை ஓர் அளவுகோல் என்று நீங்கள் கொள்ளமாட்டீர்களென்றே நம்புகிறேன். ஏனென்றால், 'ஒரு வரையறையில்லாமல் மனம் போன போக்கிலே சிந்தனையைத் தூண்டிவிட்டுச் சில சமயங்களில் அலை

களின் மேல்தளத்திலும், சில்சமயங்களில் ஆழ்நீரின் அடித் தளத்திலும் சஞ்சரித்தபோது எழுதியவை இவை. மனம் பறவை போலப் பறந்த காலத்தும், நிர்ப்பந்தத்தால் இரண்டு நாட்களுக்குள் எழுதவேண்டுமென்ற குறட்டின் வாய்க்குள்ளும் எழுதிய கதைகள் இதில் இருக்கின்றன. ஆகவே இதிலே பஞ்சும் இருக்கும்; இரும்பும் இருக்கும்; பழமும் இருக்கும்; கோதும் இருக்கும். பழமும் கோதும் சேர்ந்த உருவத்திலேதான் கனி இயற்கையிலே கனிகிறது. இந்தத் தொகுதி அப்படிக் கனிந்ததென்று உங்களுடைய நல்ல மனசு நினைக்க இடமுண்டென்றால். அது என் பாக்கியம்! 'இல்லை, நான் அப்படி எண்ணமாட்டேன்' என்று சொல்லிக் 'கொண்டித்தனம்' செய்ய நீங்கள் நிச்சயம் செய்து விட்டால்-, ''ரஸிக சுவாமி! உங்களுக்கு ஒரு நமஸ்காரம்! இந்த ஜனநாயக யுகத்திலே நீங்கள் அப்படி நினைக்கவும் சொல்லவும் உங்களுக்குப் பூர்ண சுதந்தரம் உண்டு. குஷாலாக உங்கள் கண்டனத்தையும், நக்கீரர் வாதத்தையும் வெளியிடுங்கள்'' என்று சொல்வதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

ஆனால் ஒன்றை மட்டும் உங்கள் திருச்செவியில் ஓத விரும்புகிறேன். 'இந்தக் கதைகளில் திருட்டு இல்லை. எல்லாம் அன்போடு எழுதியவை. எழுதினோமென்ற திருப்தியை இறுதியிலே எனக்கு அளித்தவை' என்பதை மட்டும் சொல்ல வேண்டுமென்பது என் ஆசை.

இக்கதைகளில் 'ஹாஸ்யம்' என்ற சரக்கைத் தாங்குவன சில இருக்கின்றன. அவற்றில் ஆழம் இல்லை என்று நானே முந்திக் கொள்கிறேன். 'கர்த்தப விஜயத்'தை மாத்திரம் இதற்கு விலக்காகக் கொள்ள வேண்டும். ''கருணையின் வேகம்' தெலுங்கு நாட்டுக் கதையைக்கேட்டு மெருகிட்ட உருவம். 'சிற்பியின் கனவு' என்பதில் உள்ள பாடல் என் சொந்தப் பாடல் அன்று. உண்மையாக அது ஒரு புராணத்தில் உள்ள பாட்டு. அதைப் படித்தபோது என் மனம் கண்ட பகற்கனவுதான் இப்போதுள்ள என் கதை.

'அஹிம்சை', 'கர்த்தப விஜயம்' என்ற இரண்டும் ஆனந்த விகடன் தீபாவளி மலர்களிலும், 'உயர்ந்த சித்திரம்' என்பது தினமணி ஆண்டு மலரிலும் வெளியானவை. 'பிராயச்சித்தம்' எந்தப் பத்திரிகையிலும் ஏறாதது. மற்றவை யாவும் கலைமகளில் மலர்ந்தவை. இவை வெளியாவதற்குக் காரணமான யாவர்பாலும் நன்றி பாராட்டுகிறேன்.

இது, என் சிறுகதைத் தொகுதிகளில் இரண்டாவது. ஆயினும் நான் முதலில் எழுதிய கதைகள் பல இதில் உள்ளன. இனியும் பல கதைகள் எழுதத்தான் போகிறேன். ரஸிகராகிய உங்களுக்குத் தொல்லை கொடுக்கத்தான் போகிறேன். எல்லாத் தொல்லைகளையும் பொறுத்து இன்பமாகக் காணும் இயல்பு உங்களுக்கு உண்டென்பதை நான் நிச்சயமாக உணர்வேன். தமிழ் நாட்டின் இலக்கிய சிருஷ்டியிலே உங்களுக்குள்ள ஆர்வத்தையும் பற்றையும் அறிவேன். எந்தச் சிறு முயற்சியானாலும் மிகவும் ஆசையோடு பார்த்து அநுபவித்துப் பாராட்டும் உங்களை எண்ணித்தான் கதைகளை எழுத்தாளர்களாகிய நாங்கள் எழுதுகிறோம்.

இது, உங்களைத் 'தட்டிக் கொடுக்க' சொல்வதல்ல. உண்மையைத்தான் சொல்கிறேன். இந்தக் கல்யாண குணங்கள் நிரம்பின மூர்த்திதானே 'ரஸிகர்' என்ற திருநாமத்துக்கு ஏற்றவர்?

இந்தப் புஸ்தகத்தை அழகாக அச்சிட்டு, 'தமிழ் நாட்டுச் சிறுகதைகள்' என்ற வரிசையிலே சேர்த்து வெளியாக்கின அல்லயன்ஸ் கம்பெனியாருடைய அன்பைப்பற்றித் தனியே நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. என் நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
அன்பன்
கி. வா. ஜகந்நாதன்

பொருளடக்கம்

		பக்கம்
1.	நீலமணி	9
2.	கருணையின் வேகம்	14
3.	ஜகத் மித்யை !	20
4.	விடுதலை	26
5.	சிற்பியின் கனவு	52
6.	துப்பறிபவன்	61
7.	பரிவர்த்தனை	64
8.	அஹிம்சை	73
9.	தபால் மூலம்	78
10.	சாதித் தடை	85
11.	பிராயச்சித்தம்	97
12.	ஆபீஸ் மானேஜர்	115
13.	உயர்ந்த சித்திரம்	119
14.	கர்த்தப விஜயம்	122
15.	அவலக்ஷணத்தின் விலை	140
16.	ருசி கண்ட பூனை	149

கி. வா. ஜ. வின் பிற நூல்கள்

1) பெரிய புராண விளக்கம்
(பாகம் 1 முதல் 10 வரை)

2) வழிகாட்டி

3) கி. வா. ஜ. பேசுகிறார்

4) பதிலளிக்கிறார் கி. வா. ஜ.
மூன்று பாகங்கள்

5) சிரிக்க வைக்கிறார் கி. வா. ஜ.

6) நவக்கிரகங்கள்

7) திகைக்க வைக்கிறார் கி. வா. ஜ.

8) அபிராமி அந்தாதி
(மூலமும் உரையும்)

8) தமிழ்ப் பழமொழிகள்

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 600 004.

நீலமணி

1

அன்று நவராத்திரி ஆரம்பம். ராஜராஜேசுவர தீட்சிதர் விடியற்காலையில் இரண்டு மணிக்கே எழுந்து விட்டார். முதல் நாள் இரவு முழுவதும் தூக்கம் இல்லை. அவருடைய மனத்தில் உண்டான துக்கம் அவர் முகத்தின் சோபையை உறிஞ்சி விட்டது. "தரித்திரம், தரித்திரம்!" என்று எதையோ திட்டிக் கொண்டு பெருமூச்சு விட்டார். வாஸ்தவத்தில் அவர் சாட்சாத் தரித்திரத்தையே திட்டினார். வறுமைப் பிணியை திட்டுவதற்கு அவருக்கு வேறு சிறந்த பதம் கிடைக்கவில்லை. "இப்படியா இந்த வீடு நாசமாய்ப் போக வேண்டும்? நம்முடைய பரம்பரைக்கே ஜீவகளை தருவது நவராத்திரிப் பூஜை அல்லவா? அட தரித்திரமே!" - மறுபடியும் பெருமூச்சு.

விடிந்து விட்டது! இரவுதான் விடிந்தது; ராஜ ராஜேசுவரருடைய தரித்திரம் அல்ல. காலங்கண்ட தாமிரச் செம்பும், பஞ்சபாத்திரமும், வால் ஒடிந்த உத்தரணியும் தீட்சிதருக்கு முன்னே இருந்தன. பெயருக்கு மான் தோல் என்ற ஒன்று அவருடைய ஆசனமாக இருந்தது. அதன் மேல் இருந்த ரோமமெல்லாம் போய் விட்டன. வற்றின ஆற்று மணலிலே அங்கும் இங்கும் இரண்டு சதுர அங்குலத்திற்கு முளைத்திருக்கும் புல்லைப்போலச் சில சில இடங்களில் மான் தோலுக்கு அடையாளமாகச் சில ரோமங்கள் இருந்தன. மாங்காய் வற்றலைப்போல

ஓரங்களெல்லாம் பிய்ந்து கொஞ்சநஞ்சம் ஒட்டிக் கொண்டு இருந்தன.

ஜபம் பண்ணுகிறார் தீட்சிதரென்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். கண்ணை மூடியபடியே அவர் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். என்ன தியானம்? அவருடைய உள்ளமாகிய ஓடம் தரித்திர சாகரத்தின் கரையைக் காண முடியாமல் தத்தளித்தது.

மணி ஒன்பது. ராஜராஜேசுவரி பூஜை ஆரம்பிக்கப் பட்டது. ஆடம்பரம் ஒன்றும் இல்லாமல் அரை மணியில் முடிந்தது. அந்தக் காலத்தில் நவராத்திரி என்றால் அவர்கள் வீடு பெரிய கோவிலாக இருக்குமாம். ஊர் முழுதும் பூஜையைத் தரிசிக்க வருவார்களாம். ராஜ ராஜேசுவருடைய பிதாமகருக்குத் தகப்பனாராகிய அம்பிகாபதி தீட்சிதர் பெரிய மகானாம். ராஜாக்களெல்லாம் நவராத்திரிப் பூஜைக்கு வேண்டிய திரவியங்களை அனுப்பு வார்களாம். ஒவ்வொரு நாளும் பிராம்மண சந்தர்ப்பணை நடக்குமாம். ஹூம்! இந்தப் புராணமெல்லாம் இப்பொழுது எதற்கு? இந்த நவராத்திரி மாமுண்டியா பிள்ளை வாக்கு அளித்த ஒரு சீப்புப் பழத்திலும் இரண்டணாக் கற்பூரத்திலும் நடக்க வேண்டியிருந்தது. ஐந்து சம்புடங்கள் நிறைய உள்ள சாளக்ராமாதிகளுக்கும், பத்துப் பன்னிரண்டு செப்பு விக்கிரகங்களுக்கும், இருபது செப்புத் தகடுகளுக்கும் அவைகளை அந்தக் காலத்தில் யந்திரங்களென்று சொல்லி வந்தார்கள் - ஸ்ரீராஜராஜேசுவரிக்கும் இவை எம்மாத்திரம்? தீட்சிதருக்குத்தான் திருப்தியுண்டாகப் போகிறதா?

ஸ்ரீ ராஜராஜேசுவரி ஒரு பழைய சுண்ணந் தீற்றிய விக்கிரகம். அந்தக் காலத்தில் அந்தத் தேவிக்குத்தான் மகிமை அதிகம். தேவியினுடைய திருமேனி வண்ணங்கள் எல்லாம் இப்பொழுது மங்கி விட்டாலும், திருவிழிகளிலுள்ள ஒளி மங்கவில்லை. அந்த விழிகளில் விலைவரம்பற்ற நீல மணிகள் புதைக்கப்பட்டிருந்தன. ராத்திரி வேளையில் ஒரு சிறிய விளக்கு வெளிச்சத்தில் கூட அவ்விழிகளில் உண் டாகும் ஜோதி அந்த வீட்டிற்கே விளக்கத்தை அளித்தது.

2

தீபாவளி நெருங்கி விட்டது. கையில் பைசாவுக்கு வழியில்லை. கால்கஞ்சிக்குக் கொடுத்துக் கொண்டிருந்த பூமி, வெள்ளத்தால் மேடிட்டு விட்டது. பழைய பூமியைக் காண்பதானால் ஐந்தடி மணலை வெட்டிப் பார்க்க வேண்டும். வெட்டினால் புதையலைப் போல பூமியைக் காணலாம். மிச்சம் இருக்கிற புன்செய்யில் என்ன வரப் போகிறது? ராஜராஜேசுவர தீட்சிதர் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு சிந்தையில் ஆழ்ந்திருந்தார்.

அந்த வழியே ரத்தின வியாபாரி சோடாதாஸ் சென்றார். எங்கேயோ அவசரமாகப் போகிறவர் தீட்சிதரைப் பார்த்து விட்டு நின்றார்; ''என்ன, தீட்சிதர்? யோசனை பண்ணுகிறீரா?'' என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்தார்.

தீட்சிதர், ''அதுவா?'' என்று சொல்லிக் கொண்டே மேலே பேச முயன்றார். அவருக்கு வார்த்தை வரவில்லை. அவர் உள்ளத்துள் ஒரு போராட்டம் நிகழ்ந்தது. சிறிது நேரம் சென்றது. ''அந்த விக்கிரகத்தையே நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் சொல்லுகிறபடி ஏன் செய்ய வேண்டும்?'' என்றார் தீட்சிதர்.

''ஓய்! நீர் பரம்பரையைக் காப்பாற்ற வேண்டாமா? விக்கிரகம் எனக்கு எதற்கு? பேசாமல் நான் சொன்னபடி செய்யும். இரண்டாயிரமென்றால் லேசான காரியமா?''

''அது சரிதான். என் மனசு என்னவோ அப்படிச் செய்யத் துணியவில்லை. தவிர, யாராவது பார்த்தாலும்''

''யார் ஐயா உம்மைத் தடுப்பவர்? உம்முடைய சொத்துக்கு நீர் உரியவர் அல்லவா? அந்த இரண்டுக்கும் பதிலாக வேறு வைத்து விடலாம். இன்னும் பிரகாசமான மணிகள் தருகிறேன்.''

''பார்க்கிறேன்.''

சோடாதாஸ் திருப்தியோடு சென்றார்.

3

இரவு சரியாகப் பன்னிரண்டு மணி. தீட்சிதர் தூங்க வில்லை. முணுக்கு முணுக்கென்று சிறிதாக எரிந்து கொண்டிருக்கும் கைவிளக்கின் ஒளியில் ராஜராஜேசுவரியின் விழிமணிகளின் ஜோதி அலையோடிக் கொண்டிருந்தது. தீட்சிதருடைய மனத்திலும் எண்ண அலைகள் மேலும் கீழும் புரண்டு ஒன்றை ஒன்று அமிழ்த்தியும் எழுந்தும் குமுறிக் கொண்டிருந்தன. வியனுலகு முழுவதும் சாந்தி மயம். தீட்சிதர் மனத்தில் மட்டும் அந்த வஸ்துவைக் காணவில்லை.

''தேவி! நீயே கதி. பரதேவதே! மன்னிக்க வேண்டும்'' என்றது ஓர் அலை.

''சீ தரித்திரமே! ஓடு. நீ தேவியின் திருவருளுக்கு முன் எம்மாத்திரம்?'' என்றது அதை அமுத்திய அலை.

''மணலின் கீழே புதையுண்ட நிலத்தில் மணல் தான் கிடைக்கும். மணலைச் சமைக்கலாம்?'' - இது அடுத்த அலை.

''சரி; துணியத்தான் வேண்டும். தாயே! ரக்ஷி, ரக்ஷி; க்ஷமி, க்ஷமி, க்ஷமி; காப்பாற்று, காப்பாற்று, காப்பாற்று.'' - இந்த ஜபம் தீட்சிதரைக் கிளப்பி விட்டது. அப்புறம் அவருடைய செய்கை மனோவேகத்தில் நிகழ்ந்தது. ஓர் ஆவேசத்தில் அவர் தாம் எண்ணிய காரியத்தை முடித்தார். தம் கந்தைத் துணியில் முடிந்து கொண்ட மணிகளோடு வெளியே வந்து ஓடினார். பாதி ராத்திரி என்று கூடப் பார்க்கவில்லை.

சோடாதாஸ் வீட்டிற்குச் சென்று தடதடவென்று கதவைத் தட்டினார். உள்ளே படுத்திருந்தவர்கள் பயந்து போனார்கள். அவர்களுக்குச் சமாதானம் சொல்வதற்குள் முதலாளியே வந்து விட்டார். அவருக்கு விஷயம் விளங்கி விட்டது. தீட்சிதரைக் காட்டிலும் அவருக்கு ஆயிரம் மடங்கு அதிகமான வேகம் உண்டாயிற்று.

''மேலே போகலாம்'' என்றார் சோடாதாஸ். ஒரே

தாவல்தான். "இதோ, உங்கள் விருப்பப்படியே செய்து விட்டேன். நான் ஏழை; எங்கள் பரம்பரைச் சொத்து இது. துணிந்து செய்து விட்டேன். கொஞ்சம் தயவு வைக்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே தம் துணியில் முடிந்திருந்த வஸ்துவைத் தீட்சிதர் கொடுத்தார்.

ரத்தின வியாபாரி அந்த இரண்டு மணிகளையும் எழுந்து நின்று வாங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

"தீட்சிதர்வாள்! சந்தோஷம்! நான் இரண்டாயிரம் என்று சொன்னாலும், மூவாயிரம் தருவதாகவே எண்ணி வைத்திருக்கிறேன். இதோ தருகிறேன்" என்று சொல்லிப் பெட்டியைத் திறந்து மூன்று கட்டு நோட்டுக்களை எடுத்துப் போட்டார்: முப்பது நூறு ரூபாய் நோட்டுக்கள்!

கூட இரண்டு துணையாட்களோடு தீட்சிதர் வீட்டிற்கு விரைந்து வந்தார். அவருடைய இருதயம் என்றும் இல்லாத வேகத்தில் அடித்தது. வந்து கைப்பெட்டியில் பணத்தை வைத்துப் பூட்டினார் வேகம் அடங்கவில்லை. மங்கி எரிந்த வெளிச்சத்தைத் தூண்டினார். ராஜராஜேசுவரி விக்கிரத்தைப் பார்த்தார். அங்கே என்ன இருக்கிறது? ஜோதி போய் விட்டது; ஜீவன் மறைந்தது!

"ஹா!" என்று ஒரு முறை வீரிட்டுக் கத்தினார் தீட்சிதர். எல்லோரும் திடுக்கிட்டு எழுந்தார்கள். தீட்சிதர் மூர்ச்சை போட்டுக் கிடக்கிறார். விசிறிக் குளிர்ந்த நீரைத் தெளித்துப் பரிகாரங்களைச் செய்து தெளிவிக்கையில் சரியாகச் சூரியோதய காலம்.

கண்ணைத் திறந்தார் தீட்சிதர். வாசலுக்கு நேரே உதய சூரியனுடைய பொன்னிறமான ஜோதியைப் பார்த்தார். திடீரென்று துள்ளி எழுந்தார்; "அதோ! அதோ! நீலம் ரத்தினமாக மாறிவிட்டது!" என்று ஓடினார். பாவம்! அவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது!

கருணையின் வேகம்

1

"ஒரே உற்சாகத்திலே பாடிவிட்டேன். எனக்கே சந்தோஷம் தாங்க முடியவில்லை. யாரிடமாவது படித்துக் காட்டா விட்டால் எனக்குப் பைத்தியம் பிடித்து விடும்போல் இருந்தது. இருப்புக் கொள்ளவில்லை. பாகவதத்தில் எவ்வளவோ கட்டங்கள் அழகாகப் பாடி இருக்கிறேன். இனியும் பல அருமையான சந்தர்ப்பங்கள் வருகின்றன. ஆனாலும் இந்தக் கஜேந்திர மோட்சத்தில் என் மனம் ஒன்றிப்போய் விட்டது. வாக் தேவியின் பிரசாதம் தங்கு தடையின்றிக் கிடைத்தது. இதோ படிக்கிறேன், கேளுங்கள்" என்று போத்தன்னா சுவடிக் கட்டை அவிழ்த்துத் தம் மைத்துனருக்கு முன் அமர்ந்தார்.

"என்ன, அப்படிப் பிரமாதமாகப் பாடிவிட்டாய்? வியாஸபகவான் மழைபோலப் பொழிந்து தள்ளி இருக்கிறார். அதை வைத்துக் கொண்டு வாக்கியத்துக்கு வாக்கியம், வார்த்தைக்கு வார்த்தை அப்படியே எடுத்து வைப்பது தானா பிரமாதம்? தெலுங்கு பாஷை எப்படி இழுத்தாலும் வளைகிறது. அதுவும் சமஸ்கிருதத்தில் இருக்கிறதைத் தெலுங்கில் கொண்டு வருவது பெரிய காரியமோ?" என்று புன்னகை பூத்தபடியே கூறினார் ஸ்ரீநாதர்.

இருவரும் தெலுங்கில் பெயர் பெற்ற கவிஞர்கள். பாகவதத்தை இயற்றித் தெலுங்கு மொழியை வளம் படுத்தியவர் போத்தன்னா என்னும் புலவர் பெருமான். அவருடைய மனைவியின் சகோதரர் ஸ்ரீநாதர். கவிஞர்களாகிய இருவரும் மைத்துனக் கேண்மையினாலே ஒருவரை ஒருவர் ஏசிக் கொள்வதும் கிண்டல் பண்ணுவதும் உண்டு; அதனால் அவர்கள் நட்பும் பழக்கமும் பின்னும் ருசியுடையவை ஆயின.

"உங்கள் பரிகாசம் இருக்கட்டும். இதை உங்களுக்குச் சொல்லிக் காட்டி விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பதாக

வந்திருக்கிறேன். என்னுடைய கவிதா ரசத்தை அறிந்து அனுபவிப்பதற்கு உங்களைவிடத் தகுதியானவர்கள் வேறு யார் இருக்கிறார்கள்?'' என்றார் போத்தன்னா.

''ஸ்தோத்திரம் இருக்கட்டும். உன்னுடைய காவியத்தை ஆரம்பி, பார்க்கலாம்.''

கவிஞர் ஆரம்பித்தார். கஜேந்திர மோட்சத்தை முதலில் இருந்து தொடங்கி வாசித்து வந்தார். அப்படி வாசிக்கும் போது அவருடைய கை அசைப்புகளும் உடம்புக் குலுக்கும் நிறுத்தி நிறுத்திச் செய்யும் வியாக்கியானமும் அவருடைய உள்ளத்தே பொங்கிய உத்சாகத்துக்கு அடையாளங்களாக இருந்தன. ஸ்ரீநாதர் அப்பொழுது அப்பொழுது 'சபாஷ்' போட்டுக் கொண்டிருந்தார். சில இடங்களில், ''அவ்வளவு ரசமாக இல்லை'' என்று கூசாமல் சொல்லி விடுவார்; ''இங்கே பிராசம் இன்னும் போட்டிருக்கலாம்'' என்று குறிப்பிடுவார்.

கஜேந்திரன் மடுவில் இறங்கியதும், முதலை அவனைப் பற்றிக் கொண்டதும், யானையரசன், ''ஆதிமூலமே!'' என்று கதறியதும் விரிவாக வருணிக்கப் பெற்றிருந்தன. அடிக்கடி கவிஞர், ''கவனித்தீர்களா? கவனித்தீர்களா?'' என்று மைத்துனரைக் கேட்டுக் கொண்டே வந்தார். ''இனி மேல் கொஞ்சம் நன்றாகக் கவனியுங்கள்'' என்று கூறி விட்டுப் போத்தன்னா வாசித்தார்.

''ஆதிமூலமே!'' என்று அலறிய யானையின் முழக்கம் ஸ்ரீவைகுந்தத்தில் திருமகளோடு அளவளாவிக் கொண்டு இருந்த திருமாலின் காதில் விழுகிறது; அவர் திடுக்கிட்டு விளையாட்டை நிறுத்தி உடனே யானையைக் காப்பாற்றப் புறப்பட்டு விடுகிறார்.

இந்தக் கட்டத்தில் கவிஞர் தாம் எழுதிய கவிதையை வாசிக்கலானார் :

> ''திருமகளிடத்தும் சொல்லவில்லை; சங்கு சக்கரங்கள் இரண்டையும் திருக்கரங்களில் கொள்ள வில்லை; ஏவலர் யாரையும் அழைக்க வில்லை; பக்ஷி ராஜனையும் கூட்டிக்கொள்ளவில்லை. இருகாதடியிலும்

தவழ்ந்து படிந்து கிடந்த மயிர்ச் சுருளையும் ஒதுக்க வில்லை. இன்ப மயமான பேச்சினிடையே திருமகளின் மேலாக்கு, தன் மேல் கிடந்ததையும் கவனிக்கவில்லை. யானையின் உயிரைக் காப்பதில் ஒரே நோக்கம் உடையவனாகி ஓடி வந்தான்.''

பாட்டு இன்னும் முடியவில்லை ; ''அடே பாவி ! என்ன காரியமடா பண்ணி விட்டாய் ?'' என்று அடித் தொண்டையிலிருந்து எழுந்த தொனியில், ஆவேசம் வந்தவரைப்போலக் கத்தினார் ஸ்ரீநாதர். எந்தச் செய்யுளைக் கேட்டால் ஸ்ரீநாதர் ஆனந்தத்தினால் குதித்துக் கூத்தாடுவாரென்று போத்தன்னா நினைத்தாரோ அந்தச் செய்யுளைக் கேட்டு அவர் கர்ஜித்த கர்ஜனை கவிஞரைக் கலங்க வைத்து விட்டது.

''அடே, என்னடா பாட்டுப் பாடுகிறாய் ? சம்பிரதாய விரோதமாகச் செய்திருக்கிறாயே ! வியாஸ பகவான் இப்படியா சொல்லி யிருக்கிறார் ?''

''இல்லை ; தீனசரண்யனான எம்பெருமான் பக்தர் களைக் காப்பாற்றும் விஷயத்தில் எவ்வளவு வேகமாக இருக்கிறானென்பதைக் காட்ட நான் கற்பனை செய்து இவ்வாறு அமைத்தேன்.''

''என்ன கற்பனை இது ! மகா பாவமல்லவா ? ஸ்வாமி திருக்கரத்தில் சங்கு சக்கரம் இல்லாமல் வரலாமா? கருடா ரூடராக வந்து சேவை சாதிப்பதுதானே சம்பிரதாயம்? லக்ஷ்மீதேவியின் முன்றானைத் தலைப்பைக்கூட எடுக்காமல் அப்படியே ஓடி வந்ததாகச் சொல்லியிருக்கிறாயே ; அது பெரிய அபசாரமல்லவா ? உன்னுடைய சிருங்கார ரசத்தைக் காட்ட இதுவா சமயம் ? அந்த மாதிரி நடக்குமா ?'' என்று சரமாரியாகக் கேள்வி கேட்கத் தொடங்கி விட்டார் ஸ்ரீநாதர்.

கவிதையின் ரசத்தை வினாவிடையால் அனுபவித்துவிட முடியுமா ? போத்தன்னா மனம் ஒன்றி அமைத்த காட்சியிலே ஸ்ரீநாதர் ஈடுபடவில்லை. அவர் எம்பெருமானின் திருக்கோலத்திலே உள்ள குறைவைத்தான் கண்டார்.

''இதை உடனே மாற்றிவிடு; இல்லாவிட்டால் லோகாபவாதம் சம்பவிக்கும்.''

''அப்படியே செய்கிறேன். ஆனாலும் இதை முழுவதும் ஒரு முறை கேட்டு விடுங்கள்.''

முழுவதும் படித்துக் காட்டி விட்டுப் போத்தன்னா தம் வீட்டுக்குப் போனார். வரும்போது அவருக்கு இருந்த உற்சாகமெல்லாம் மறைந்து விட்டது. முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு போனார். 'பகவானே, இவருக்கு உன் கருணைத் திறத்தைக் காட்டிலும் உன் படாடோபந்தானே பெரிதாகத் தோன்றுகிறது? இதை மாற்றிவிட வேண்டுமென்றல்லவா சொல்கிறார்? எனக்கு இதில்தான் ரசம் இருக்கிறதாகப் படுகிறது. மாற்ற மனசு வரவில்லையே! நான் மாற்ற மாட்டேன். அபவாதம் வந்தாலும் வரட்டும். பகவானது கருணை என்னைக் காப்பாற்றும்' என்று சிந்தித்துக் கொண்டே அவர் இரவு முழுதும் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டு இருந்தார். அவர் பாகவதத் தேர் மேல் நகராமல் நின்றது.

2

அன்று சனிக் கிழமை. காலை எட்டு நாழிகை இருக்கும். ஸ்ரீநாதர் தம்முடைய வீட்டில் அப்பியங்கன ஸ்நானம் செய்ய எண்ணித் தைலம் தேய்த்துக் கொண்டு இருந்தார். கௌபீனதாரியாக மணையின் மேல் உட்கார்ந்து எண்ணெயைத் தேய்த்துக் கொண்டார். தலைக்குத் தேய்த்துப் பிறகு உடம்பெல்லாம் தேய்த்துக் கொண்டார். சிறிது நேரம் ஊறலாமென்று உட்கார்ந்து இருந்தார்.

தடதடவென்று ஏதோ சத்தம் கேட்டது. போத்தன்னா வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு, ''ஐயையோ! உங்கள் குழந்தை வாசல் கிணற்றில் விழுந்து விட்டான்'' என்று கதறிக் கொண்டு உள்ளே ஓடி வந்தார். ''அட படுபாவி! எங்கேடா. எங்கேடா?'' என்று கதறியபடியே

ஸ்ரீநாதர் போத்தன்னாவைத் தொடர்ந்தார். அவர் முன்னே ஓடினார். ஓடினவர் வீதிக்கு நடுவிலே இருந்த ஒரு கிணற்றுக்கு அருகே போய் நின்று உள்ளே சுட்டிக் காட்டினார். ஸ்ரீநாதர் பதைக்க பதைக்க வந்து, மார்பு படபடக்கக் கால் தடுமாற உடம்பெல்லாம் நடுங்க உள்ளே எட்டிப் பார்த்தார். ''ஒன்றும் தெரியவில்லையேடா!'' என்று புலம்பினார்.

போத்தன்னாவின் முகத்தில் திடீரென்று ஒரு மாறுதல் உண்டாயிற்று. அதில் ஒரு அமைதியும் புன்சிரிப்பும் தோன்றின; கொஞ்சம் உங்களையே பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

''அட பாவி! என்னடா விளையாடுகிறார்? குழந்தை எங்கே?''

ஸ்ரீநாதர் கௌபீனதாரியாக உடம்பில் எண்ணெய் வழிய, அதன் மேலே வேர்வை வழிய, நடு வீதியில் நின்று கொண்டிருந்தார். போத்தன்னா அவரை ஏற இறங்கப் பார்த்துச் சிரித்து விட்டு, ''உங்கள் பிள்ளை பத்திரமாக இருக்கிறான். வாருங்கள் வீட்டுக்கு. யாராவது கண்டால் சிரிக்கப் போகிறார்கள்!'' என்று சொல்லியபடியே ஸ்ரீநாதரையும் அழைத்துக் கொண்டு அவரது வீட்டுக்குப் போனார். ஒன்றும் விளங்காத கலக்கத்தோடு ஸ்ரீநாதர் பின் தொடர்ந்து தம் வீடு சென்றார்.

''என்னை மன்னிக்க வேண்டும். உங்கள் குழந்தை சௌக்கியமாக இருக்கிறான். பகவானது கருணை எப்படி இருக்கும் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்வதற்காக இந்தப் பொய் சொன்னேன். நான் இந்த விஷயத்தைச் சொன்னவுடன் நீங்கள் நிஜமா பொய்யா என்று கூடக் கேட்கவில்லை. கௌபீனதாரியாக இருக்கிறோமே என்றும் எண்ணவில்லை. வீதியில் இருப்பவர்கள் சிரிப்பார்களே என்று யோசிக்கவும் இல்லை. குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடு எல்லாவற்றையும் உதறி விட்டு ஓடி வந்தீர்களே. உங்களுக்குள்ள வாத்சல்யத்திற்குப் பரம கருணாநிதியாகிய பகவானுடைய கருணை எந்த விதத்தில் குறைந்து போயிற்று? கஜேந்திரன் முதலை

வாயில் அகப்பட்டான் என்றவுடன் அந்தப் பெருமானுக்கு இருந்த வேகத்தில் கருட வாகனத்தில் ஏறாமல் வந்தான் என்பது தவறா? சங்கு சக்கரத்தைத் தரிக்கவில்லை என்றால் அபசாரமா? அவைகள் எல்லாம் இல்லாமல் உடனே ஓடி வந்தான் என்றால், அப்படிச் சொல்வது தீனர்களை ரட்சிப்பதில் அவனுக்கு இருக்கும் தீவிரத்தைக் காட்டவில்லையா? நான் அப்படிச் சொல்லி யிருப்பது தவறு என்றீர்களே. இப்பொழுது யோசித்துப் பாருங்கள்; உங்கள் பிள்ளையைக் காப்பாற்றுவதற்காக விழுந்தடித்துக் கொண்டு ஓடினீர்களே. சாதாரணமான நிலையில் 'ஸ்ரீநாதர் வஸ்திரம் தரிக்காமல் குண்டலங்கள் அணியாமல் கௌபீனதாரியாக ஓடினார்' என்று சொன்னால் பொருத்தமாக இராதுதான். ஆனால் தம் குழந்தையைக் காப்பாற்றுவதற்காக அவர் அப்படி ஓடினாரென்றால் அது தானே இயற்கையாகப் படும்?... என்ன பேசவில்லை.

எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டு வந்தார். ஸ்ரீநாதர் அவர் மனக்கண்முன் கஜேந்திரனது பரிதாபமான காட்சி தோன்றியது. காதில் ஆதிமூலமே என்ற ஓசை கேட்டது பகவான் ஓட்டமும் நடையுமாகத் தன் மேலிருந்த திருமகளின் மேலாக்கு நுனி வேகத்திலே கொடிபோல பறக்க, வரும் கோலம் தென்பட்டது. "போத்தன்னா, நீதான் கவி; உனக்கு வாஸ்தவத்திலே வாக்தேவியின் அருள் இருக்கிறது. நான் குறை கூறியது தப்பு. இப்போதுதான் அந்த வேகத்தை நான் உணர முடிகிறது. வியாஸபகவான் இங்கே இருந்தால் உன்னை மிகவும் பாராட்டுவார். நீ சிரஞ்சீவியாக இருக்க வேண்டும்" என்று வாழ்த்திக் கொண்டே அந்தக் கவிஞரைத் தழுவப் போனார்.

"மறுபடியும் உங்களை மறந்து விட்டீர்களே; உங்கள் உடம்பிலுள்ள எண்ணெயை என்மேலே பூசிவிடுவீர்கள் போல் இருக்கிறதே!" என்று நகர்ந்து கொண்டார் போத்தன்னா.

ஜகத் மித்யை!

என்னுடைய மாமா கதை எழுதுவதில் கைகாரர். அவருடைய கதை இயற்கையைச் சித்திரிப்பது; உள்ளத்திலே பொங்கியெழும் உணர்ச்சியைச் சொற்கோவைகளிலே அடக்கிக் காட்டுவது. அவர் கதைகள் காவிய கதியை உடையவை.

போன வருஷம் அவர் 'கமல ஜோதி' என்னும் பத்திரிகையின் வருஷ மலருக்கு ஒரு கதை எழுதியிருந்தார். அடடா! அதற்குத்தான் எத்தனை புகழ் மாலைகள்! "ஏன் சார். அந்தக் 'குருட்டுத் தேவி' யை எப்படிச் சிருஷ்டித்தீர்கள்? உங்களுக்கென்று தனியாக ஒரு கற்பனை தோன்றுகிறதே" என்று ஒரு நண்பர் புகழ்கிறார். "என்ன கதை வேண்டியிருக்கிறது சார்? உங்கள் 'குருட்டுத் தேவி'க்கு அப்புறம் தமிழில் கதையே இல்லை சார்" என்பது ஒரு நண்பரின் மதிப்புரை.

'குருட்டுத் தேவி' வந்தாலும் வந்தது; எங்கள் மாமாவுக்கு ராத்திரியும் பகலும் கதை எழுதுவதே வேலையாகி விட்டது. வருஷ மலர், ஆண்டு மடல், அந்த பூர்த்தி பத்ரம், தீபாவளி இகழ், பொங்கற்பூ, சங்கராந்தி மஞ்சரி, கார்த்திகைச் சுடர், மங்கள வெளியீடு - இப்படி ஊர்ப்பட்ட அநுபந்தங்களுக்கும் விசேஷ மலர்களுக்கும் எழுதும் நிர்ப்பந்தத்தில் அவர் சிக்கிக்கொண்டார்.

'அவரே கதை எழுத வேண்டும் என்பதென்ன? நாமும் ஏன் எழுதக் கூடாது?' என்று எனக்கு அடிக்கடித் தோன்றும். எங்கள் மாமா கதை ஒரு பத்திரிகையிலே வெளி வந்தால், அதை வாசித்த மறுகணமே நானும் கதை எழுத உட்காருவேன். அவர், 'ரோஜாப் பூவின் மணம்' என்று கதை எழுதி இருப்பார்; நான் அதே மாதிரி 'எருக்கம் பூவின் நாற்றம்' என்று எழுத ஆரம்பிப்பேன். எழுதுவதற்கு முன் இரண்டு மணி நேரம் தீர்க்காலோசனை செய்வேன். கதை எழுதிவிட்ட மாதிரியும், அது பத்திரிகையில் வந்த மாதிரியும், எனக்கும் கதையுலகில் ஒரு தனி

ஸ்தானம் கிடைத்து விட்ட மாதிரியும் கனவு காண்பேன். சாப்பிடும் போதும் அந்தக் கற்பனைதான்; கத்தரிக்காய் கறி வீட்டில் பண்ணியிருப்பார்கள்; சாப்பிடும் போது கற்பனையில் என் உள்ளம் ஊறியிருப்பதனால், "அந்த எருக்கம்பூக் கறி போடு" என்று சொல்லி விடுவேன். எங்கள் அம்மாமி இடி இடியென்று சிரிப்பாள். காலேஜுக்குப் போகும் போதும் படிக்கும் போதும் எல்லாம் இதுவே ஞாபகம். ராத்திரி சரியாக ஏழு மணிக்கே சாப்பிட்டுவிட்டு எழுதுவேன்; இரண்டு வரிகள்: மூன்று வரிகள்கூட எழுதி விடுவேன். அப்புறம் தூக்கம் வந்துவிடும். அன்றோடு 'எருக்கம் பூவின் நாற்றம்' மறைந்து விடும்.

எங்கள் மாமா எழுதிய 'காமுவின் கல்யாணம்' என்ற கதை பத்திரிகையில் வந்த அன்று என்னுடைய கற்பனா சக்தி மறுபடியும் பொத்துக்கொண்டு கிளம்பியது; 'கோமுவின் கல்யாணம்' என்று எழுத எண்ணினேன். 'சீ சீ! மாமா ஒரு பெண்ணின் கல்யாணத்தைப் பற்றி எழுதினால் நாமும் அதையே காப்பி அடிக்கக் கூடாது. நாம் 'சீனுவின் கல்யாணம்' என்று எழுத வேண்டும். சீனுவைப் புருஷனாக வைக்க வேண்டும். (பின்னே சீனு பெண்ணா?) கல்யாணம் எதற்கு? கார்த்திகை, தீபாவளி, ஆறு மாத க்ஷவரக் கல்யாணம் ஏதாவது வைக்கலாம், இப்படியே என்னுடைய சிந்தனா ரதம் பரந்த வான வெளியிலே ஒரு லட்சியம் இல்லாமல் பறந்தது. கடைசியிலே 'பாட்டியின் அழுகை' என்று ஒரு கதை எழுதுவதாகத் தீர்மானித்தேன். எதிர் வீட்டிலே உள்ள குப்பிச்சிப் பாட்டியின் அழுகையைக் கேட்டு அனுபவித்தவன் நான். ஆதலால் அதைத் தத்ரூபமாக வர்ணித்து கதைக்கு 'ஜீவகளை' உண்டாக்கிவிட வேண்டுமென்று எண்ணினேன். பாட்டி அழுதது என்னவோ அவள் பேரனுடைய 'பிணக் களை'யைப் பார்த்துத்தான்!

அப்பாடா! ஒரு நாள் 'பெருங்காய விளம்பரம் அல்லது குமாரசாமியின் கோலாகலம்' என்று ஒரு கதையை ஒரு விதமாக எழுதி முடித்தேன். அன்றைக்கு எனக்கு இருந்த

ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. 'ஏன், நாமும் பத்திரிகைக்கு எழுதிப் பணம் சம்பாதித்து வீடு கட்டிக் கொண்டு கார் வாங்கி உல்லாசமாக இருக்கும் நிலையை அடையக் கூடாது? நாமும் ஒரு கதாசிரியன்தானே?'' என்ற வீறாப்பு என் உச்சந் தலைக்கு ஏறியது. என் மார்பை ஒரு முறைப் பார்த்துக் கொண்டேன். என் கதையைப் படிக்கப் படிக்க அதில் அபூர்வ ரசனைகள் இருப்பதாகக் கண்டேன்.

எங்கள் மாமாவுக்குத் தெரிந்த பத்திரிகைக்காரர்கள் யாவரும் எனக்கும் தெரிந்தவர்கள். எங்கள் வீட்டில் வாரந்தோறும், ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும் யாராவது வருவதுண்டு. மாமாவின் கதையைப் பற்றிய விமர்சனப் பேச்சிலே அவருடைய பொழுது போய் விடும். சில சமயங்களில் நாலைந்து பேர்கள் கூடிவிடுவார்கள். அப்புறம் அவர்களுடைய கொம்மாளத்திற்குக் கேட்க வேண்டுமா?

என்னுடைய 'பெருங்காய விளம்பர'க் கதையை 'அபூர்வ விகடன்' ஆசிரியரிடம் கொண்டு போய்க் காட்டினேன். அவர், நான் கதையை எழுதினேனென்பதைக் கேட்டவுடன், ''அப்படியா! சபாஷ்! அப்படித்தான் எழுதிப் பழக வேண்டும்'' என்று அதை வாங்கிப் படித்துப் பார்த்தார். ''அடுத்த பத்திரிகையிலேயே வெளியிட்டு விடுகிறேன்; இனிமேல் ஒவ்வொரு பத்திரிகைக்கும் தவறாமல் கதை எழுதி வரவேண்டும்'' என்று சொல்லப் போகிறாரென்றே எதிர்பார்த்தேன். ''சரி; இருக்கட்டும். இன்னும் வேறு பல கதைகள் எழுது. இது அவ்வளவு நன்றாக இல்லை'' என்று அவர் சொன்னார்.

நான் எவ்வளவு உயரமாக மனக்கோட்டை கட்டினேனோ அவ்வளவும் இடிந்து விட்டது. அஸ்திவாரங்கூட வானத்திலே தூள் தூளாய்ப் பறந்து விட்டது. ஆசிரியரைத் துப்பாக்கியால் சுட்டு விடலாம் போல ஆத்திரம் வந்தது; 'சீ! இவரும் மனிதரா? மரியாதை தெரியவில்லை! அவ்வளவு நன்றாக இல்லையாம்! எவ்வளவு? மரக்காலில்

கதையின் ரசத்தை அளந்து பார்த்தாரோ' என்று திட்டிக் கொண்டே வீடு வந்து சேர்ந்தேன். அப்புறம் ஒரு வாரம் பேசாமல் இருந்து விட்டேன்.

அடுத்த வாரம் 'முருங்கைக்காய் சாம்பார்' என்ற கதையொன்றை எழுதி முடித்தேன். அது என்னுடைய இரண்டாவது கதையாக இருந்தாலும் முதல் தரமாக இருந்தது. முன்பு எழுதின கதை மட்டமென்று இந்தக் கதையை எழுதின பிறகுதான் எனக்குப் பட்டது. ஆனால் இந்தக் கதையோ? 'உலகத்தில் சிறந்த கதைகளில் ஒன்றாக எண்ணப்பட வேண்டும்! ஒவ்வொரு பத்திரிகையிலும் மதிப்புரையைப் பெறக் கூடியது. வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவது!' - இந்த மாதிரி என் எண்ணங்கள் வளர்ந்தன.

அதை எடுத்துக்கொண்டு, 'கோமாளி' ஆசிரியரிடம் போனேன். அவர் படித்துப் பார்த்தார் ''அப்பனே! இது எங்கள் பத்திரிகைக்கு லாயக்கில்லை. இதிலே என்ன ரசம் இருக்கிறது?'' என்று அவர் சொன்னார்.

எனக்குக் கோபம் வந்தது; அடக்கிக் கொண்டேன். வெறுமனே அந்தக் கர்வம் பிடித்த ஆசிரியருடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு போக என் மனம் சம்மதிக்கவில்லை. ''இதிலே என்ன இல்லை?'' என்று ஒரு கேள்வி போட்டேன்.

''இதிலேயா? கதைக்குப் 'ப்ளாட்' இல்லை. பாவம் இல்லை. முடிவு நன்றாக இல்லை. ஏதோ முருங்கை மரம் வைத்ததும், காய் பறித்ததும், சாம்பார் சாப்பிட்டதும் இருக்கின்றனவே ஒழிய, கதைப் போக்காக ஒன்றும் இல்லை'' என்றார்.

''நீ நாசமாய்ப் போக!'' என்று மனத்துக்குள் திட்டி விட்டு நான் வீட்டுக்குப் போனேன். எனக்கு இருந்த உற்சாகமெல்லாம் போய் விட்டது. அன்று ராத்திரி சாப்பிடக் கூட மனம் பிடிக்கவில்லை. 'இந்த உலகம் பொய்யுலகம். நல்ல வஸ்துவுக்கு மதிப்பில்லை' என்று எண்ணினேன்.

மாமா வந்தார்; ''ஏன் சாப்பிடவில்லை?'' என்று

கேட்டார். நான் மழுப்பினேன். அவர் மிகவும் அடுத்தடுத்து வற்புறுத்திக் கேட்டார். நான் உள்ளதைச் சொன்னேன்.

''இதுதானா? அசடே! பேசாமல் சாப்பிடு. அந்தக் கதையைக் கொண்டு வா. நான் ஒரு வேடிக்கை செய்கிறேன், பார்'' என்று சொல்லி அவர் என் கதையை வாங்கி வைத்துக் கொண்டார்.

மறுநாள் காலையில் பழையபடி என்னுடைய மனம் ஆறுதல் அடைந்து விட்டது; 'நாம் கதை எழுதத் தொடங்குவது முட்டாள்தனம். அதற்கு எவ்வளவோ அநுபவமும் ரசிகத்தன்மையும் எழுத்து லாவகமும் வேண்டும்' என்று எண்ணிக் கதை எழுதும் முயற்சியை நிறுத்திக் கொண்டேன்.

*

ஒரு மாதம் ஆயிற்று. ஆறு மாத காலம் பிரமாதமாக விளம்பரப் படுத்தியிருந்த 'கதாவளி'ப் பத்திரிகையின் வருஷ மலர் வந்தது. வாஸ்தவத்தில் நிரம்பப் பணம் செலவழித்து அதை வெளியிட்டிருந்தார்கள். அதன் மேலட்டைப் படத்திலேயே யாரும் சொக்கிப் போவார்கள்; அவ்வளவு அழகாக இருந்தது.

எந்தப் பத்திரிகை வந்தாலும் நான்தான் முதலில் பார்ப்பேன். அப்புறந்தான் எங்கள் மாமா பார்ப்பார். எனக்கு அவ்வளவு சுதந்தரம் உண்டு.

'கதாவளி' மலரைத் திறந்தேன். முகப்புப் படம் என் கண்ணைப் பறித்தது அப்பால் முதல் கதையைப் பார்த்தேன். ''முருங்கைக்காய் சாம்பார்'' என்றிருந்தது! எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அதை மாமா எழுதி இருந்தார்!

அவசர அவசரமாகப் படித்தேன்; உண்மையில் எனக்கு நம்பிக்கையே இல்லை; மறுபடியும் படித்தேன்; மூன்றாவது முறையும் படித்தேன். அது, நான் எழுதின அதே 'முருங்கைக்காய் சாம்பார்'தான்; சாட்சாத் அதுவே. எங்கள் மாமா செய்த 'வேடிக்கை' இன்னதென்று அன்றைக்குத்

தான் புரிந்தது. அந்தக் கதையில் எத்தனை படங்கள்! எத்தனை ஜோடனைகள்! பிரசித்த எழுத்தாளராகிய கோபாலமணி அதை எழுதியிருக்கும் போது அலங்காரங்கள் இல்லாமலா போகும்?

முன்னுரையிலே பத்திரிகாசிரியர், ''இந்த மலரை எவ்வளவோ பிரயாசைப்பட்டுத் தயாரித்தோம். எங்கள் முயற்சி நல்ல பயனை அடைந்ததென்பதில் சந்தேகமே இல்லை தமிழ்நாட்டுக் கதாசிரியர்கள் யாவரும் இதில் எழுதியிருக்கிறார்கள். கதாசிரிய மணியாகிய நம் கோபால மணி சாதாரண முருங்கை மரத்தைக் கற்பனா உலகத்தில் நட்டு வைத்து அதன் காய்களைப் பறித்து நமக்குத் தருகிறார். அந்தக் காயினால் சாம்பார் செய்கிறார். முருங்கைக்காய் சாம்பாரின் மணம் எத்தனை யுகமானாலும் மாறாது. கனவிலும் மணக்கும்......'' என்று எழுதி இருந்தார்.

இதைப் படிக்கும் போதே எனக்கு மயிர்க் கூச்சல் உண்டாயிற்று.

''என்ன மாமா! பெரிய வேடிக்கை பண்ணி விட்டீர்கள்!'' என்று குதித்தோடிப் போய் அதை மாமாவிடம் காட்டினேன்.

''இன்னும் பொறுத்துப் பார்'' என்று சாவதானமாக அவர் சொன்னார்.

மறுநாள் வந்த தினசரிப் பத்திரிகையாகிய 'உதய சூரிய'னில் 'கதாவளி', மலரைப் பற்றிப் பின்வரும் மதிப்புரை இருந்தது:—

''...கதாவளி மலரில் நம் உள்ளத்தை முதலிலேயே பறி கொடுத்து விடுகிறோம். கோபால மணியவர்கள் எழுதிய முருங்கைக்காய் சாம்பார் நம்மைப் பிடித்து அழுத்தி மயக்கி விடுகிறது. அதில் ஸ்வபாவோக்தி ததும்புகிறது. அது கதையல்ல; கவிதா சித்திரம்......''

மறுநாள் வந்த 'தேச நண்பன்' பத்திரிகை எழுதியது பின் வருமாறு:—

"...தமிழ்க் கதை உலகில் ஜீவகளை ததும்பும் கதைகளில் இதற்கு நிகர் ஒன்றும் இல்லை..."

வேறு சில மதிப்புரைகளைக் கீழே காட்டுகிறேன்:—

"இது குடும்ப வாழ்க்கையில் சமையலறையில் நிகழும் நிகழ்ச்சியைப் படம் பிடித்துக் காட்டுகிறது..."

"...வெறும் முருங்கைக் காய் சாம்பாரிலே வேதாந்தக் கருத்தை வஸ்திரகாயம் செய்து கதாசிரியர் சேர்த்து நமக்குப் பரிமாறுகிறார்......"

"...நல்ல கதை; நிரம்ப நல்ல கதை; மிகவும் உயர்ந்த கதை!"

"...கதையின் சரித்திரத்தில் இது ஓர் உன்னத சிகரம்..."

அந்தக் கதையை வேண்டாமென்று திருப்பித் தந்த அதே கோமாளிப் பத்திரிகை என்ன எழுதியது தெரியுமா?

"...ஆஹா! என்ன ரசம்! என்ன கதையமைப்பு! கதையை முடித்திருக்கும் தோரணை ஒன்றே போதும்! இதிலே அமைந்த பாவச்சித்திரம் ஆயிரத்தில் ஒன்றுக்குத்தான் அமையும்."

அந்த மதிப்புரையைப் பார்த்த பிறகுதான் பின் வரும் சித்தாந்தத்துக்கு வந்தேன்:

"உலகம் முழு மோசமானது! ஜகத் மித்யை!!"

விடுதலை

1

ஆசிரமத்தில் சதானந்தரைக் காணவில்லை. பூஜை அறையிலே பார்த்தேன்; மருந்து வைக்கும் அறையில்

பார்த்தேன்; இல்லை. சாயங்கால வேளையில் கோயில் பக்கம் போயிருப்பாரோ என்றால் ஆசிரமத்தை திறந்து போட்டு விட்டுப் போக மாட்டார். தவிர, அவருக்கு கோயிலில்தான் தெய்வம் இருக்கிறது என்ற குறுகிய எண்ணம் இல்லை. எந்த இடத்திலும் அவர் தியானத்தில் அமர்வார்; தேவார திருவாசகங்களைப் பாட ஆரம்பித்து விடுவார் இன்றைக்கெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கலாம்.

'காணவில்லையே! எங்கே போயிருப்பார்?' என்று புறக்கடைப் பக்கம் போனேன். மூலிகைகளும் புஷ்பச் செடிகளும் நிறைந்த சிறு நந்தவனம் அது. வைத்தியத் தொழிலைச் செய்து வந்த சதானந்தர், நல்ல மூலிகைகளைத் தம்முடைய ஆசிரமத்திலேயே பயிர் செய்து வளர்த்து வந்தார். பூஜைக்கு வேண்டிய பத்திர புஷ்பங்களுக்குப் போதுமான செடி கொடிகளும் இருந்தன.

நந்தவனத்தின் ஒரு மூலையில் ஏதோ புகை தெரிந்தது. அந்தப் பக்கத்தில் பார்த்தேன் சதானந்தர் சுள்ளிகளைக் கொண்டு அக்கினி மூட்டிக் கொண்டிருந்தார். அவர் கையில் ஏதோ காகிதம் போன்ற வஸ்து ஒன்று இருந்தது.

எந்தச் சமயத்திலும் யாதொரு தடையும் இல்லாமல் அவரை அணுகும் உரிமை எனக்கு இருந்தது. நான் மெல்ல அடி மேல் அடி வைத்து அவர் இருக்கும் இடத்துக்குச் சென்றேன். நான் அவர் பின் பக்கமாக நடந்தமையால் அவர் என்னைக் கவனிக்கவில்லை. நான் அருகிலே சென்று, "என்ன, இந்த வேளையில் இங்கே என்னவோ செய்கிறீர்களே. ஏதாவது ரசவாதம் செய்கிறீர்களோ!" என்று சிரித்துக் கொண்டே கேட்டேன்.

அவர் திடுக்கிட்டு என்னைத் திரும்பிப் பார்த்தார். இயல்பாகவே அவர் முகத்தில் ஒரு புன்முறுவல் தவழும். ஆனால் அந்தச் சமயத்தில் அந்த நகையைத் தாமே வருவித்துக் கொண்டவரைப் போலத் தோற்றினார். "ஆமாம், ரசவாதந்தான் செய்கிறேன்" என்று சொல்லிய படியே தம் கையிலிருந்த ஒரு பழைய காகிதத்தைத் தீயில் இட்டார்.

"என்னவோ காகிதத்தை அல்லவா கொளுத்துகிறீர்கள்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டேன்.

"இல்லை; ரசவாதம் தான் செய்கிறேன். ரசவாதமென்றால் உங்களுக்கு இன்னதென்று தெரியுமோ? என்று அவர் கேட்டார்.

"தெரியாமல் என்ன? செம்பைப் பொன்னாக்குவது தானே?"

"அது சரி தான். ஏன் மற்ற லோகத்தைப் பொன்னாக்கக் கூடாது? பொன்னாவதற்குச் செம்பில் மாத்திரம் என்ன விசேஷம் இருக்கிறது?" என்று பள்ளிக்கூட உபாத்தியாயரைப் போல அவர் கேள்வி கேட்கத் தொடங்கினார்.

"எனக்கு அந்த வியவகாரமெல்லாம் தெரியாது. நீங்கள் அடிக்கடி சொல்லும் தாயுமானவர் பாட்டைக் கேட்டு ரசவாத வித்தை என்று ஒன்று இருக்கிறதாகத் தெரிந்து கொண்டேன். 'அம்பொன்மிக வைத்த பேரும் நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர்' என்று ஒரு பாட்டு வருகிறதல்லவா?" என்று நான் பாடம் ஒப்பித்தேன்.

"மற்றொரு பாட்டைக் கேட்டதில்லையோ?" என்று அவர் கேட்டார்.

"கேட்டதாக ஞாபகம் இல்லையே?"

"சொல்கிறேன்; கேளுங்கள்" என்று சொல்லி அந்த இடத்திலே அப்படியே சப்பளங் கூட்டி உட்கார்ந்து தம்முடைய மதுர இசையைத் தொடங்கி விட்டார்.

"கருமருவு குகையனைய காயத்தி னடுவுட்
களிம்புதோய் செம்பனையயான்
காண்டக இருத்தியே ஞானவனல் மூட்டியே
கனிவுபெற உள்ளுருக்கிப்
பருவமறிந்துநின் அருளான குளிகைகொடு
பரிசித்து வேதிசெய்து
பத்துமாற் றுத்தங்க மாக்கியே பணிகொண்ட
பக்ஷத்தை யென்சொல்லுகேன்."

அவர் பாடத் தொடங்கியது முதல் வழக்கம் போல நான் அப்பாட்டில் ஈடுபட்டேன். அவர் மனம் ஒன்றிப் பாடினார்; மெல்ல மெல்லச் சொற்களைச் சுவைத்து இசையினிமைஅற்றுப் போகாமல் இணைத்து இணைத்துப் பாடினார். அவர் பாடுகையில் தம்மை மறந்திருந்தார். அங்கே நின்று கேட்ட நானும் என்னை மறந்திருந்தேன். பாட்டை அவர் நிறுத்திச் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பாட்டு நின்றது எனக்குத் தெரியாது. கண்ணை மூடியபடியே கேட்டு வந்த எனக்குப் பாட்டு இன்னும் ஒலித்துக் கொண்டுதான் இருந்தது. பாட்டின் இனிமையைப் பூரணமாக அனுபவிக்க அந்த மௌன நிலையும் அவசியமென்றே தோன்றியது.

''என்ன சொன்னேன்?'' என்று அவர் ஒரு கேள்வியைப் போட்ட போதுதான் கண்ணைத் திறந்து பார்த்தேன். சதானந்தர் கண்களில் நீர்த்துளிகள் மல்கியிருந்தன. அவர் உள்ளத்திலே பொங்கி எழுந்த இன்பத்தின் திவலைகள் அவை. அப்போது அவர் முகத்திலே தோன்றும் களையே தனியாக இருக்கும்; தாமரை மலர்ந்தது போல இருக்கும். அது பக்தியா, ஞானமா, ஆனந்த பரவசமா இன்னதென்று சொல்லத் தெரியவில்லை. அவர் அனுபவிக்கும் அந்த ஆனந்தத்தில் ஒரு துளி நானும் சுவைத்துப் பார்த்தேன். தம்மை மறந்த மனோலயத்தில் அவர் ஆழ்ந்திருந்தார். என்னையும் ஒரு கணம் ஆழ்த்தி விட்டார். அதைத் தேடிக் கொண்டுதான் நான் அடிக்கடி அவரிடம் வருவது. வேதாந்த தத்துவங்களைச் சொல்லி உண்மை இன்னதென்று நிரூபிக்க அவருக்குச் சக்தி உண்டோ இல்லையோ, மந்திரோபதேசம் செய்யும் தகுதியை அவர் பெற்றிருந்தாரா இல்லையோ எனக்குத் தெரியாது. அவரிடம் அந்த விஷயங்களைப் பற்றி நான் பேசியது இல்லை; அவரும் தாமாகப் பேசுவதில்லை. கர்ம மார்க்கம், ஞான மார்க்கம், யோக நெறிகள் இவற்றைப்பற்றி உபநிஷத்துக்கள் முதல் சித்தர் பாட்டு வரையில் மேற்கோள் காட்டி வாதாடும் பண்டித சந்நியாசிகளைப் போன்றவரல்லர் அவர். அவருக்கு வைத்தியம் தெரியும். தேவார திருவாச

கங்களிலும் தாயுமானவர் பாடல்களிலும் அருட்பாவிலும் அவர் உருகி ஒரே பைத்தியமாக இருந்தார். அவற்றைப் பாடிப் பாடி அவர் மனம் கரைந்து போய் விட்டது.

அவர் சங்கீதம் மிக விசித்திரமானது. அதற்குச் சுருதி இல்லை; தாளமில்லை. முதலில்லை; முடிவில்லை. ஆனாலும் அது இணையற்ற சங்கீதமாக விளங்கியது. அவர் பாடல் சொல்லும்போது அவருடைய வாக்கும் உடம்பும் மனமும் ஒன்றுபட்டு நிற்கும். பாட்டிலே இசையும் பொருளும் சேர்ந்து இணைந்து உள்ளத்தைக் கவ்வும். கானத்திலே மோனத்தை உண்டாக்குவார்; மோனத்திலே கானத்தைக் காட்டுவார். அவருடைய கானம் தேவகானம்; நேரே உள்ளத்தைத் தொடும் இசையமுதம்.

''என்ன பேசாமல் இருக்கிறீர்கள்? நாம என்ன பேசிக் கொண்டிருந்தோம்?'' என்று மீண்டும் கேட்டார்.

அவருடைய இசை வழியே மிக மிக உயர்ந்த வெளியிலே உடல் பாரம் தெரியாமல் மிதந்து கொண்டிருந்த நான் இந்த உலகத்திற்கு வந்தேன். அவர் கேள்வியைக் காது கேட்டும் அதன் பொருளை மனம் தெரிந்து கொண்டு பதில் சொல்லச் சிறிது நிதானம் வேண்டியிருந்தது. அதுவும் ஒரு ரஸவாதம்தானோ?

''வந்து விட்டேன். நாமா? நாம் ரஸவாதத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்'' என்று நான் சொன்னதைக் கேட்டு அவர் கலகலவென்று தமக்கு இயல்பான வெண்கலச் சிரிப்புச் சிரித்தார்; ''வந்து விட்டேன் என்கிறீர்களே; எங்கே போயிருந்தீர்கள்?'' என்று கேட்டு மீண்டும் சிரித்தார்.

''எங்கேயா! நீங்கள் அழைத்துச் சென்ற ஆனந்த லோகத்திற்கு'' என்று சொல்லி நானும் சேர்ந்து சிரித்தேன்.

''சரி, விஷயத்துக்கு வருவோம். இப்போதுதான் எனக்கு நன்றாக ஞாபகத்துக்கு வருகிறது. மறந்து போனதை ஞாபகப் படுத்திக் கொள்வது சிரமமாகத்தான் இருக்கிறது. ஆனாலும் ஞாபகப் படுத்திக் கொண்டு

சொல்கிறேன். ரஸவாதம் செய்பவர்கள் செம்பைத்தானே பொன்னாக்குகிறார்கள்?''

''அப்படித்தான் நீங்கள் சொன்னீர்கள்.''

''செம்பும் பொன்னும் ஒரே மாதிரியான இனம். செம்பிலே உள்ள களிம்பு போய்விட்டால் அது பொன்னாகி விடும். செம்பிற்கு இயல்பாக உள்ள களிம்பைப் போக்கும் வித்தைதான் ரஸவாத வித்தை. அந்த வித்தையைப் பற்றி இப்போது சொன்ன தாயுமானவர் பாட்டு விரிவாகத் தெரிவிக்கிறது. இதில் சொல்லப்பட்ட ரஸவாதத்தைத் தான் நான் செய்கிறேன்.''

''இதிலே என்னவோ வேதாந்தபரமாக அல்லவா விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்? இந்த ரஸவாதத்தை நீங்கள் செய்வதென்றால் எனக்கு ஒன்றும் புரியவில்லையே!''

''செம்பிலிருந்து களிம்பைப் போக்கினால் ரசவாதம் சித்தியாகிவிடும். நான் இந்தச் சிறு தீயில் சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு பெரிய பந்தமாகிற களிம்பை எரித்து விட்டேன். இனிமேல் நான் பத்தரைமாற்றுத் தங்கம். இதை உருக்கி ஓடச் செய்ய வேண்டியது தான்.''

''நீங்கள் எப்போதும் பத்தரைமாற்றுத் தங்கந்தான்'' என்று சொல்ல எண்ணினேன்; வாய் வரவில்லை. வெறும் முகஸ்துதிக்கும் எங்கள் நட்புக்கும் வெகு தூரம். ''இன்னும் விளங்காத உலகத்திலேதான் இருக்கிறேன்'' என்றேன்.

''இதுவரையில் எனக்கு ஒரு பந்தம் இருந்தது; அந்தப் பந்தம் இந்தக் கணத்தில் நீங்கிவிட்டது. நான் இது வரையில் போலித் துறவியாக இருந்தேன்; இனிமேல் தான் மெய்த் துறவியாகப் போகிறேன். இதுவரையில் நான் பந்தத்துள்ளே சிக்கிச் சிறைப்பட்டிருந்தேன்; இப்போது விடுதலை பெற்று விட்டேன். இதுகாறும் என் கால்களில் ஒரு விலங்கு மாட்டி இருந்தது; இன்று அது தறிபட்டது. இத்தனை காலம் நான் சம்சாரியாக இருந்தேன்; இப்போதுதான் சந்நியாசியானேன். இன்று வரையில் நான் ஓர் அடிமையாய் உத்தியோகம் பார்த்தேன்; இதுமுதல் நான் சுதந்தரம் பெற்றேன்.''

உபநிஷத்து வாக்கியங்களின் மொழிபெயர்ப்பை ஒப்பிக்கிறவர்போல அவர் பேசினார்; ஆனால் அந்தப் பேச்சிலே வீரம் இருந்தது. ஆவேசம் வந்தவரைப் போல அவர் பேசினார்.

''இன்னும் சந்தேகம் தெளிந்தபாடில்லை'' என்று அவர் வீரவாசகத்தினிடையே மெல்லிய தொனியிலே கூறினேன். அது அவர் காதில் விழுந்திருக்கும் என்பது சந்தேகந்தான்.

''இனிமேல் இந்தச் சரீரம் ஓர் இடத்தில் இராது; ஒரு வேலையைச் செய்யாது. இந்த ஆத்மா அகண்டத்தை நாடிப் போய்க் கொண்டே இருக்கும். முடிவற்ற பிரயாணத்தைத் தொடங்கப் போகிறது. ஆம். முடியவில்லை; முடிவே இல்லை. முடிவு வந்தால் முடிந்த முடிவுதான்......''

'இன்றைக்கு இவர் ஏதாவது கஞ்சா கிஞ்சா சாப்பிட்டு இருப்பாரா!'' என்ற பைத்தியக்கார எண்ணம் என் மனத்தில் எழுந்தது. அடுத்த கணமே, 'என்ன பாதகமான நினைவு!' என்று கன்னத்திற் போட்டுக் கொண்டேன்.

அப்போதுதான் அவர் சிறிது தம் பேச்சை நிறுத்தினார். ''எனக்கு ஆவேசம் வந்துவிட்டதாக எண்ணிக் கன்னத்திலே போட்டுக் கொள்கிறீர்களா? அப்படியானால் கற்பூரம் கொண்டு வாருங்கள்'' என்று சொல்லிப் பழையபடி சிரித்தார். சிறிது நேரத்திற்குமுன் இருந்த மாற்றம் அந்தச் சிரிப்பிலே இல்லை.

''என்ன இது! இன்று என்ன ஒருவிதமாக இருக்கிறீர்களே! புரியாத பாஷையில், இதுவரையில் நீங்கள் சொல்லாத வார்த்தைகளைச் சொல்கிறீர்களே! விஷயம் என்ன?'' என்றேன்.

''சரி; சொல்கிறேன், வாருங்கள்; உள்ளே போகலாம். பொழுது மறைந்து விட்டது'' என்று சொல்லி உள்ளே சென்று தீபத்தை ஏற்றினார். நானும் அவரைத் தொடர்ந்து உள்ளே சென்றேன்.

2

சதானந்தர் ஒரு துறவி; காவி வஸ்திரம் கட்டா விட்டாலும் உண்மையான துறவி. எனக்கு அன்பர். எல்லோருக்குமே அன்பர். எங்கள் ஊருக்கு அவர் வந்து பதினைந்து வருஷங்கள் ஆயின. வந்த புதிதில் அவரைப் பற்றி ஒருவருக்கும் ஒன்றும் தெரியாது. அவர் கையில் சிறிது பணம் வைத்திருந்தார். அதைக் கொண்டு அங்கே ஒரு சிறிய குடில் கட்டிக் கொண்டார். அதைத்தான் எங்கள் ஊரினரும் சுற்று வட்டாரத்தில் உள்ளவர்களும் ஆசிரமம் என்று சொல்வார்கள். அங்கே தூய்மை நிலவும். குப்பை என்பது சிறிதும் இராது. அவ்வளவு சுத்தமாக சதானந்தர் அதை வைத்திருந்தார்.

காலையில் ஸ்நானம் செய்து பூஜை செய்வார்; சிறிது நேரம் தியானத்தில் அமர்வார். பிறகு தேவாரம், திருவாசகம் முதலிய பாடல்களைப் பாட ஆரம்பித்து விடுவார். அவர் செய்யும் பூஜைக்கும் தியானத்துக்கும் காலவரையறை உண்டு. ஆனால் அவர் பாடுவதற்குக் கணக்கே இல்லை. ஒரு மணி காலம் பாடுவார்; இரண்டு மணியும் பாடுவார்; சில நாள் தம்மையே மறந்து மணிக் கணக்காகப் பாடிக் கொண்டே இருப்பார். பகல் ஒரு மணிக்கு ஒரு வீட்டில் இருந்து சாப்பாடு வரும்; உண்பார் பிறகு பரோபகாரமாக மருந்து செய்வதைக் கவனிப்பார்.

அவர் சித்த வைத்தியத்தில் நல்ல தேர்ச்சி உள்ளவர். தினந்தோறும் அவரிடம் நோயாளிகள் மாலை வேளையில் வருவார்கள். அவசரமான சந்தர்ப்பங்களில் அபாயகரமான நோய்க்கு உட்பட்டவர்களைப் பார்க்க வேண்டுமானால் காலை வேளையில் போய்ப் பார்த்து வருவார். பிறகுதான் பூஜை முதலியன நடைபெறும்.

அவருடைய அன்பு ததும்பும் வார்த்தைகளே நோயை ஒரு பாதி குணமாக்கி விடும். மருந்தின் குணமும் சேர்ந்து கொள்ளும்; மருந்து இல்லாமலே ஸ்நான பானங்களாலும் உணவுப் பக்குவத்தாலும் நோயைத் தீர்ப்பதில் அவருக்கு

அதிக ஞாபகம். அந்தப் பக்கத்து ஊர்களில் அந்த சாமியாரைக் குழந்தை முதல் கிழவர் வரையில் யாவருக்கும் தெரியும். எல்லோரும் அவரைத் தெய்வம் போலப் பாராட்டுவார்கள்.

மருந்து செலவுக்காகவும் ஏதோ ஒரு தர்மத்துக்காகவும் அவர் பணம் வாங்குவார்; அதாவது நோய் குணமடைந்தவர்கள் மனமுவந்து தானாகவலிந்து கொடுக்கும் பணத்தைப் பெற்றுக் கொள்வார்; அவராகக் கேட்டு வாங்க மாட்டார். ஏழை எளியவர்களுக்கு எவ்வளவு விலையுயர்ந்த சரக்கானாலும் வாங்கி மருந்து செய்து தர்மத்துக்குக் கொடுப்பார்.

ஒரே ஒரு கட்டுப்பாடு அவர் வைத்திருந்தார். வைத்திய சம்பந்தமாகப் பணம் தந்தால் பெற்றுக் கொள்வதைத் தவிர வேறு ஏதாவது வஸ்துவை யாரேனும் அவருக்குக் கொடுத்தால் பெற்றுக் கொள்ள மாட்டார்; திராட்சைப் பழமானாலும் சரி, கற்பூரமானாலும் சரி, தாமாகவே பணம் கொடுத்து வாங்குவாரேயல்லாமல் பிறரிடமிருந்து வாங்க மாட்டார். யாரேனும் பார்க்க வருபவர்கள் கையுறையாகப் பழங்கள் கொணர்ந்தால் அவற்றை அருகிலுள்ள குழந்தைகளுக்குக் கொடுத்து விடுவார்.

தமக்குச் சாப்பாடு அனுப்பி வந்த வீட்டிற்கு அவர் மாதந் தோறும் பணம் கொடுத்து வருவதாகக் கேள்வி. ஆனால் அதைத் தெரிந்து கொள்ளும் அக்கறை யாருக்கும் இல்லை. அந்த வீட்டுக்காரர் சைவர்; ஏழை; ஏதோ ஒரு பலசரக்குக் கடையிலே குமாஸ்தாவாக இருக்கிறார். குடும்பம் பெரியது. அவர்கள் வீட்டிலிருந்து சாப்பாடு வருவித்து உண்பதென்றால் நிச்சயமாக சதானந்தர் பணம் கொடுத்து விடுவாரென்பதில் என்ன சந்தேகம்?

அவருக்கு வைத்தியத்தினால் வரும் பணம் சாமான்யமாக ஒரு பெரிய குடும்ப ஸம்ரக்ஷணை செய்வதற்கு ஏற்றதாக இருக்குமென்பது என் மதிப்பு. 'அந்தப் பணத்தை அவர் சேர்த்து வைக்கிறாரா? எதற்காகச் சேர்க்கிறார்? ஏதாவது தர்மத்திற்கு அனுப்புகிறாரா? அப்படி அனுப்பினால் அதை அனுப்பும் சந்தர்ப்

பத்தைக்கூட நான் அறிந்ததில்லையே' என்ற சந்தேகங்களுக்கு முடிவு காண்பது அரிதாக இருந்தது.

அவர் யாருடைய உதவியையும் ஏற்றுக் கொள்வது இல்லை; அதற்கு விதி விலக்காக இருந்தவன் நான் ஒருவனே. பொருளுதவி செய்வதல்ல; அவர் மருந்து ஸித்தம் செய்யும்போது நான் உடனிருந்து உதவுவேன். கலுவத்தில் மருந்து அரைப்பேன்; அடுப்பு ஊதுவேன், இந்த மாதிரிக் காரியங்களைப் பிரமாதமான உதவிகள் என்று சொல்வதற்கு எனக்கே வெட்கமாக இருக்கிறது. அவரோடு அதிகமாகப் பழகும் சந்தர்ப்பம் இந்த வகையில் எனக்கு ஏற்பட்டது.

முன்பே சொன்னேனே: அவர் பழக்கத்தினால் எனக்கு உண்டான பெரிய லாபம் அவர் சொல்லும் பாடல்களைக் கேட்டு மெய் மறந்து போகும் ஆனந்தத்தை அனுபவிப்பது தான். மற்ற இடங்களில் அது கிடைப்பதில்லை. ஸ்தல யாத்திரை செய்தாலும், மலைக் குகைக்குச் சென்றாலும் அது கிடைப்பது சந்தேகந்தான். நான் அவர் இசைக்கு அடிமையாகி விட்டேன்; இசையோடு கலந்த பாடல் பொருளில் மயங்கி நின்றேன். அதற்குப் பிறகுதான் அவருடைய மற்ற குணங்கள் என்னை வசீகரித்தன.

ஒருநாள் அவரைப் பார்த்து, "சாமி நீங்கள் எங்கே பிறந்தீர்கள்? உங்கள் பூர்வ வரலாறு என்ன?" என்று கேட்டேன் திடீரென்று கேட்கவில்லை. கேட்க வேண்டும் கேட்க வேண்டும் என்று பல நாட்கள் நினைத்து நினைத்துக் கொஞ்சம் கொஞ்சமாகத் துணிவைத் வருவித்துக் கொண்டு கேட்ட கேள்வி அது.

"அதைப் பற்றி உங்களுக்கு எதற்காகக் கவலை?" என்று புன்னகையோடு அவர் சொன்ன பிறகு மீண்டும் அந்தக் கேள்வி கேட்பதையே மறந்து விட்டேன்.

"வைத்தியத் தொழிலிலே எவ்வளவோ பாதகங்கள் செய்ய நேருமே; அந்தத் தொழிலை ஏன் மேற்கொண்டீர்கள்?" என்று கேட்டேன்.

''அந்தத் தொழிலைப் பாதகம் இல்லாமல் செய்யவும் முடியும். மூலிகைகளையும் லோஹங்களையும் வேறு சரக்கு களையும் கொண்டு செய்யலாம்'' என்றார்.

எனக்கு வைத்திய விஷயத்தில் சிரத்தையோ பரிசயமோ இல்லை. ஆகையால் அவரோடு பழகினாலும் மருந்து செய்வதைப் பற்றியோ, இன்ன நோய்க்கு இன்ன பரிகாரம் என்பதைப் பற்றியோ நான் தெரிந்து கொள்ள முடியவில்லை. அவரும் தெரிவிக்கவில்லை. கலுவத்தில் மருந்து அரைக்கும் போது மருந்தரைக்கும் குழவிக்கு அடுத்தபடியாகவே நான் இருந்தேன். எனக்கு வேண்டியது அவர் பாட்டு. அந்தப் பாட்டிலே நான் என் மனோவிகாரங்களையும் கலக்கங்களையும் போக்கிக் கொள்ளும் மருந்தைக் கண்டேன்.

இப்படிப் பன்னிரண்டு வருஷங்களாக அவரோடு நான் பழகி வருகிறேன். என் உடல் வளர்ந்தது. அவர் தாடி வளர்ந்தது. ஆனால் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் அவருடைய பூர்வ சரித்திரத்தில் எவ்வளவு தெரிந் திருந்ததோ அவ்வளவுதான் இன்றும் தெரிந்தது. அவர் வாழ்க்கையில் ஒரு மாறுதலும் இல்லை. சூரியன் உதிக் கிறான். அஸ்தமிக்கிறான்; சந்திரன் தேய்கிறான், வளர் கிறான்; பல ஆயிர வருஷங்களாக ஒரே மாதிரி நடந்து வரும் இந்த நிகழ்ச்சிகளிலே என்ன மாறுபாடு இருக்கிறது? ஒன்றும் இல்லை. அந்த இயற்கை நியதியோடு ஒன்று பட்டவரைப் போலவே சதானந்தரும் இருந்தார். அன்று கண்ட கோலம், அன்று செய்த தொழில், அன்று பாடிய பாட்டு, அன்று மெய்ம்மறந்து நின்ற நிலை - எல்லாம் இன்றும் உள்ளன.

இப்படிச் சென்று கொண்டிருந்த போது அன்றைக்குத் தான் அந்தப் புதிய மாறுதலைக் கண்டேன்; அவரது புதிய பேச்சைக் கேட்டேன்; சிறை, விலங்கு, பந்தம், விடுதலை, சுதந்திரம் என்ற வார்த்தைகளைத் தம்மோடு இணைத்துச் சொன்னார். இவ்வளவு வருஷங்களாக அடக்கி வைத்திருந்த உணர்ச்சி பீறிக்கொண்டு வந்திருக்க

வேண்டும். மற்றவர்களானால் அது வெடிகுண்டு போல வெடித்திருக்கும். சாந்தமே உருவான அவரிடம் அந்த அளவில் உற்சாகம் வெளிப் பட்டதே பெரிது. அதனால் நான் பிரமித்துப் போனேன். ''சொல்கிறேன் வாருங்கள்'' என்று உள்ளே அழைத்துப் போகையில் நான் அளவற்ற ஆர்வத்தோடு அவரைத் தொடர்ந்து சென்று, அவர் அமர நானும் அவரருகில் உட்கார்ந்தேன்.

அவர் ஏற்றிய தீபம் பிரகாசித்தது; அதன் எதிரே அவர் கண்களிலும் ஒரு புதிய ஒளி திகழ்ந்தது. கண்ணை நன்றாக விழித்தார். அவர் வெளியிலே ஒன்றையும் பார்க்கவில்லை. தம் உள்ளத்தே எதையோ பார்த்தார் போலும்! ஒரு பெருமூச்சு; சிறிது நேரம் மௌனம். அப்பால் ஒரு புன்னகை; பிறகு ஆரம்பித்து விட்டார் பேச.

3

''கொல்லிமலை அடிவாரத்திலே இருக்கிறது புதுப் பட்டி என்னும் கிராமம். எவ்வளவோ காலமாக ஜனங்கள் வாழ்ந்து வந்த பழைய ஊரானாலும் அது என் றைக்கும் புதுப்பட்டிதான். திருவாசகத்தில் சிவபெரு மானை மாணிக்கவாசகர் அப்படித்தானே சொல்கிறார்? அப்பெருமான் பழைய பொருள்களுக்கெல்லாம் பழமை யுடையவராம்; புத்தம் புதிய பொருளைக் காட்டிலும் புதுமை பெற்றவராம்.

''முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்
பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே'

என்று மாணிக்கவாசகர் பாடுகிறாரே. என்ன அழகான பாட்டு!''

''நீங்கள் புதுப்பட்டியைப் பற்றிச் சொல்ல ஆரம் பித்தீர்கள்'' என்று நான் ஞாபகமூட்ட வேண்டி இருந்தது.

ஃ ஃ ஃ

அந்தப் புதுப்பட்டியிலே வைத்தியர் வீடு என்றால் எல்லோருக்கும் தெரியும். பரம்பரையாக அந்த வட்டாரங்களில், போன உயிரை எமன் வாயிலிருந்து மீட்டுக் கொடுக்கும் சாமர்த்தியம் அந்த வீட்டுக்காரர்களுக்கு இருந்து வந்தது. நூற்றுக் கணக்கான ஏட்டுச் சுவடிகள் அந்த வீட்டில் குவிந்து கிடந்தன. அகஸ்தியர், புலிப்பாணி, தேரயர் முதலியவர்கள் இயற்றிய வைத்திய நூல்களில் ஒன்று பாக்கி இராது.

அந்தக் குடும்பத்தில் வைத்தியநாதம் பிள்ளை என்பவர் காலத்தில் யாரோ ஒரு பெரியவர் அவர்கள் வீட்டுக்கு வந்து சிலகாலம் இருந்தாராம். அதற்கப்புறம் வைத்தியநாதம் பிள்ளை சில புதிய மூலிகைகளைக் கண்டு பிடித்து மிகவும் அபூர்வமான மருந்துகள் சிலவற்றைச் செய்தார். பெரிய பெரிய டாக்டர்களாலும், ஆயுர்வேத வைத்தியர்களாலும் தீராத க்ஷயம், குஷ்டம், குன்மம் முதலிய அசாத்திய வியாதிகளைத் தீர்க்கத் தொடங்கி மிகவும் பிரஸித்தியை அடைந்தார். தாம் செய்யும் வைத்தியத்தில் அவர் தாமாகப் பணம் கேட்பதில்லை. வியாதி தீர்ந்தவர்கள் கொடுப்பதை வாங்கிக் கொள்வார். இப்படி இருந்தும் அவருக்கு அளவற்ற செல்வம் குவிந்தது. ஊரில் சிலர் "சாமியார் ரஸவாதம் செய்யச் சொல்லிக் கொடுத்துப் போயிருக்கிறார். அதனால் பணம் சம்பாதிக்கிறார். அதை மறைக்க இப்படிச் சில மருந்துகளைச் செய்து வியாதியைப் போக்கிப்பணம் வாங்குவதாகக் காட்டிக் கொள்கிறார். இல்லாவிட்டால் தம் வாய் திறந்து பணம் கேட்காத இவருக்கு எங்கிருந்து இவ்வளவு பணம் கிடைக்கும்?" என்றும் பேசிக் கொண்டார்கள்.

வைத்தியநாதம் பிள்ளைக்கு அவர்கள் பேசிக் கொண்டது காதில் விழுந்தது. அவர் வாஸ்தவத்தில் வைத்தியம்தான் செய்து வந்தார். ரஸவாதம் என்பதைப் பற்றி அவர் சிந்தனை செய்ததே இல்லை. ஆனால் ஜனங்கள் அவரை ரஸவாதம் செய்பவராக எண்ணத் தொடங்கியது முதல் அவருக்கு அந்தப் பேச்சை உண்மை

யாக்கிவிட வேண்டுமென்ற சபலம் தட்டியது. தம் வீட்டில் இருந்த பழைய சுவடிகளையெல்லாம் துருவித் துருவி ஆராயத் தொடங்கினார். ரஸவாதப் பித்து அவரை மெல்லப் பிடித்துக் கொண்டது.

மழையில்லை, வெயிலில்லை. காடில்லை, மேடில்லை; இப்படி அவர் மூலிகைகளைத் தேடிப் புறப்பட்டார், நூற்றுக் கணக்கான ரூபாய்களுக்கு ரஸம் வாங்கினார். வைத்தியம் செய்வதில் அவருக்கு இருந்த சிரத்தை மங்கியது. மூலிகைகளைப் பிழிந்து ரஸத்தைக் கட்ட முயல்வதும் பச்சிலைச் சாற்றால் செம்பைக் குளிப்பாட்டிப் புடம் போட்டு பார்ப்பதுமாகவே தம் காலத்தைக் கழிக்கலானார்.

அவருக்குச் சாப்பாட்டுக்குக் குறைவொன்றும் இல்லா விட்டாலும் மேலும் மேலும் வரும்படி வருவது குறைந்து போயிற்று. வைத்தியத் தொழிலை அவர் அடியோடு நிறுத்திக் கொண்டார். ரசவாதப் பித்துப் பிடித்த வைத்திய நாதம் பிள்ளை, பைத்தியநாதம் பிள்ளையென்று ஜனங்கள் சொல்லும்படி ஆகிவிட்டார்.

வைத்தியநாதம் பிள்ளையின் தம்பி வேறு ஒரு கிராமத்தில் இருந்தார். சின்னசாமி பிள்ளை என்பது அவர் பெயர். நல்ல மனிதர். வைத்தியத் தொழிலை ஒழுங்காகவும் அடக்கமாகவும் செய்து கொண்டு வாழ்ந்து வந்தார். அவருக்குச் சகாயமாக அவருடைய மகன் முத்துசாமி இருந்து வந்தான்.

வைத்தியநாதம் பிள்ளைக்கும் ஒரு மகன் உண்டு. சதாசிவம் என்பது அவன் பெயர். அப்பாவுக்கு ரசவாதப் பைத்தியமென்றால் அவனுக்குச் சங்கீதத்திலே பைத்தியம். தகப்பனாருடைய வைத்தியத் தொழில் பிரபலமாக நடந்து வந்தபோது சதாசிவமும் கூட இருந்து எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வான். அவர் வைத்தியத் தொழிலை விட்ட பிறகு அவனுக்கும் வைத்திய சம்பந்தம் அற்றுப் போயிற்று. வைத்திய நாதம் பிள்ளை அடிக்கடி யாராவது சாமியாரை அழைத்து வந்து உபசாரம் செய்து வீட்டில்

சில நாட்கள் வைத்திருப்பார். அந்தச் சாமியார்கள் பண்ணும் அட்டகாசங்களுக்குக் கணக்கு வழக்கே இராது. ஒரு சாமியார் ஐந்து நிமிஷத்துக்கு ஒரு தரம் கஞ்சாக் குடித்துப் புகைவிடுவார். இன்னும் ஒரு சாமியார் ஒரு நாளைக்குப் பத்து படி பசும்பால் மாத்திரம் சாப்பிடுவார். வேறொருவர் வெண்டைக்காய்ப் பச்சடி பண்ணச் சொல்லி அதை மாத்திரம் உட்கொள்வார். அவலைத் தவிர வேறு ஒன்றையும் தீண்டுவதில்லை என்று ஒருவர் சொல்லுவார். அவருக்கு அவலைக்கொண்டே பலவகை உணவுகள் தயார் செய்ய வேண்டும்; நெய், சர்க்கரை, தேங்காய், ஏலம் முதலியவற்றோடுதான் !

இப்படி வரும் சாமியார்களுக்குள் ஒருவர் இருவர் சாதுவாக இருப்பார்கள். ஒரு நாளுக்கு மேல் அவர்கள் தங்கமாட்டார்கள்.

கண்ணிலே பட்ட சாமியார்களை எல்லாம் அழைத்து வந்து ராஜோபசாரம் செய்து அவர்களிடமிருந்து ரசவாத ரகசியத்தைத் தெரிந்து கொள்ள வைத்தியநாதம் பிள்ளை முயன்றார். வந்த சாமியார்களுக்குத் தெரிந்திருந்தால் அல்லவோ அவருக்குச் சொல்ல முடியும்! இலவு காத்த கிளிபோல் அவர் ஏமாந்து போனார். வீண் செலவால் அவர் திரவியம் கரைந்து கொண்டு வந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அவருடைய ஒரே தங்கை விதவைக் கோலத்துடன் வேறு புகலின்றித் தன் தமையனார் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். அவள் வரும்போது கொண்டு வந்த ஆஸ்தி அவள் பழம் புடைவைகளும் காது மூக்கில் இருந்த நகைகளும் பதினாலு வயதுள்ள பெண்ணுந்தான். அந்தப் பெண் தங்கம்மாள் என்ற பெயருடையவள்.

வைத்தியநாதம் பிள்ளை வீட்டில் ரஸவாதத்தால் தங்கம் வராவிட்டாலும் அந்தத் தங்கம் வந்து சேர்ந்தாள். தங்கமென்ற பெயர் அவளுக்கு எவ்வகையிலும் தகும். அழகான மேனி, அடக்கமான குணம், தன் நிலையை அறிந்து கொண்டு அதற்கு ஏற்றபடி நடந்து கொள்ளும்

சாமர்த்தியம், கஷ்டத்தை வெளிக்காட்டாமல் சகித்துக் கொள்ளும் பொறுமை எல்லாவற்றிலும் அவள் முன் நின்றாள்.

''அண்ணா, என் தங்கத்தை உன்னிடம் ஒப்பித்து விட்டேன்; நீ குடிக்கிற கஞ்சியோ, கூழோ எனக்குப் போதும். இவளை மாத்திரம் கண்ணைக் கசக்காத ஓர் இடத்தில் சேர்த்துவிடு'' என்று தங்கத்தின் தாய் அழுது கொண்டே அடைக்கலம் புகுந்தாள்.

''நீ எதற்காக அழுகிறாய் அம்மா? நீ எனக்கு ஒரு பாரமா? தங்கந்தான் பாரமா? அசடே! அவளுக்கென்ன குறைச்சல்? நான் இருக்கிறேன், உன்னைக் கவனித்துக் கொள்ள, தம்பி இருக்கிறான்; தங்கத்தைக் கவனித்துக் கொள்வான்'' என்று அபயமளித்தார் வைத்தியநாதம் பிள்ளை.

அவர், 'தம்பி இருக்கிறான்; தங்கத்தைக் கவனித்துக் கொள்வான்' என்ற பேச்சிலே பொடி வைத்துப் பேசினார். அவரும் சரி, தங்கத்தின் தாயும் சரி, அந்தப் பேச்சுக்கு ஒரே விதமான பொருளைத்தான் எண்ணினார்கள்; சதாசிவம் தங்கத்தை மணம் செய்து கொண்டு காப்பாற்று வானென்றுதான், குல வழக்கத்திலே ஊறிப்போன அந்த இரண்டு உள்ளங்களும் நினைத்திருக்கும். ஆனால் அவர் அதைச் சொன்ன மாதிரி நன்றாக இல்லை; நல்ல சூசக மாகப்படவில்லை. அவர் தம் தங்கையைக் கவனித்துக் கொள்வதற்கும் சதாசிவம் தங்கத்தைக் கவனிப்பதற்கும் வித்தியாசம் இல்லையா? இரண்டையும் ஒன்றுக்கொன்று உபமானமாக வைத்துப் பேசுவது போலச் சொன்னாரே; இது எப்படிப் பொருத்தமாக இருக்கும்? அவர் அவளைச் சகோதரி என்ற உறவு பற்றிக் கவனிப்பார். சதாசிவம் தங்கத்தைக் காப்பாற்றுவதற்குக் காரணமான உறவும் அதுதானா? நிச்சயமாக அப்படி ஒருவரும் எண்ணியிருக்க மாட்டார்கள்.

ஃ ஃ ஃ

சதாசிவமும் தங்கமும் மிகவும் அன்போடு பழகி வந்தனர். மாசு மறுவற்ற அன்பு அது. அவன் நன்றாகப் பாடுவான். அவர்கள் வீட்டுக்கு வரும் சாமியார்களுள் சில பேர் அவனுக்குத் தேவார திருவாசகங்களைச் சொல்லிக் கொடுத்தார்கள். அவற்றை அவன் இனிமையாகப் பாடுவான். தங்கம் கேட்டுக் கேட்டு மகிழ்வாள். அவனை அவள் அத்தான் முறை வைத்து அழைத்து வந்தாள். ''அத்தான், நீ பாடும்போது எனக்கு என் ஞாபகமே இருக்கிறதில்லை. எனக்கு நீ சொல்லும் பாட்டுக்கு அர்த்தம் தெரியாது. ஆனாலும் நீ பாடுகிறபோது ஏதோ மலையின் உச்சிக்குப் போகிற மாதிரி இருக்கிறது'' என்று அவள் பாராட்டுவாள். அந்தப் பாராட்டு சதாசிவத்தின் உள்ளத்தைக் குளிர்விக்கும். ''அதைப் பாடு, இதைப் பாடு'' என்று அடிக்கடி அவள் கேட்பாள். சதாசிவமும் பாடிக் காட்டுவான். இந்த உறவு முற்றித் தாங்கள் எதிர் பார்த்தபடி அவர்கள் வாழ்வார்களென்று அண்ணனும் தங்கையும் எண்ணி எண்ணி இன்புற்றார்கள். தங்கத்தின் மனசிலும் அந்த எண்ணம் முளைத்தது. ஆனால் அந்த அப்பாவி சதாசிவம் இருக்கிறானே, அவனுடைய போக்கே தனியாக இருந்தது. தன் தந்தை, அத்தை, தங்கம் என்னும் மூவருடைய உள்ளத்திலும் தான் ஒரு நம்பிக்கையை வளர்த்து வந்ததை அவன் சிறிதும் உணரவில்லை.

அவனுக்கு வயசாகி வந்ததே யொழிய அதற்கேற்ற லௌகீக ஞானம் ஏற்படவில்லை. தன்னை நோக்கி வளரும் தங்கத்தை அவன் கண்கள் நன்றாக கவனிக்கவில்லை. அவள் உள்ளத்தே வளரும் காதற் போக்கையும் அவன் ஊகித்தறியாத முட்டாளாக இருந்தான். தாயுமானவர் பாட்டும், தேவாரதிருவாசகமுமே அவனுக்கு இன்பமளிக்கப் போதியனவாக இருந்தன. போதாக் குறைக்குச் சாமியார்களுடைய பழக்கம் வேறு ஏற்பட்டது.

ஏதோ ஒரு நாள் அவனுடைய முன்னிலையிலே அவன் அத்தை தன் கருத்தை வெளிப்படையாகச் சொல்லி

விட்டாள்; "சதாசிவத்துக்கும் தங்கத்துக்கும் சீக்கிரம் முடிச்சுப் போட்டு விட்டால் நான் சந்தோஷமாகச் செத்துப் போவேன்" என்று அவள் சொன்னாள். அந்தக் கல்யாணப் பேச்சிலே கூட அபசகுனம் போல அவள் தான் செத்துப் போவதையும் சேர்த்துச் சொன்னாள்.

அவள் அன்றைக்குச் சொன்ன வார்த்தைகள் சதாசிவத்தின் மனத்திலே உறைத்தன; யாவருடைய உள்ளத்திலும் இருந்த யோசனை அன்றுதான் முதல் முதலாக அவனுக்குத் தெரிந்தது. அதைப் பற்றி யோசிக்கும் மன நிலை முன் இருக்கவில்லை; அதைப் பிறர் கூறவும் இல்லை. அன்றுதான் அவனுக்கு தங்கத்தின் உண்மையான ஸ்வரூபம் தெரிந்தது. பெண்ணென்பது மாயப் பிசாசமென்று சாமியார்கள் மூலமாகத் தெரிந்து கொண்டிருந்த அவனுக்குத் தன் அருகே ஒரு பிசாசு வளருகின்றதென்ற விஷயம் அப்போதுதான் தெரிந்தது. அன்று முதல் அவன் பட்டினத்துப் பிள்ளையின் பாடல்களை அதிகமாகப் பாடலானான். மாதர்களைப் பழிக்கும் பாடல்களைப் பாடிப் பாடித் தன் மனத்திலே ஒரு வெறுப்பை உண்டாக்கிக் கொண்டான். தங்கத்தோடு சகஜமாகப் பழகுவது போய் அவளைக் கண்டால் வெறுத்து ஒதுக்கும் பழக்கம் அவன்பால் குடிகொண்டது.

தங்கம் எதிர்பாராத இந்த மாறுதலைக் கவனித்தாள். அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனாலும் அவளுடைய தாயும் சதாசிவத்தின் தந்தையும் சீக்கிரத்தில் கல்யாணத்தை முடித்து விட வேண்டுமென்று எண்ணி ஏற்பாடு செய்யத் தொடங்கினர். சதாசிவம் அதை அறிந்தான். "நான் இந்த வீட்டில் இருக்க வேண்டுமானால் கல்யாணத்தைப் பற்றின பேச்சை என்னிடம் எடுக்க வேண்டாம்" என்று வெட்டொன்று துண்டிரண்டாகச் சொல்லிவிட்டான். அப்போது வந்திருந்த சாமியார் ஒருவர் "இப்படி மனோ விகாரம் இல்லாத ஒரு பிள்ளையை வற்புறுத்துவது பிசகு" என்று வைத்தியநாதம் பிள்ளையிடம் சொல்லவே, அவர் மேலே தம் குமாரனைத் தொந்தரவு செய்யவில்லை.

பெண்ணைப் பெற்ற செல்லம்மாள் அடைந்த வருத்தம் சொல்லி முடியாது. அவளுடைய ஜீவாதாரமாக இருந்த நம்பிக்கையே குலைந்து போவதென்றால் அந்தப் பெண் பேதை சகிப்பாளா? சதாசிவத்தினிடம் தனியே கெஞ்சிப் பார்த்தாள்; ''தம்பி, உன்னை நம்பித்தானே நான் உயிர் வைத்திருக்கிறேன்? என் தங்கத்தை நான் எங்கே கட்டிக் கொடுப்பேன்!'' என்று அழுதாள்.

தங்கம் இந்த இடியைக் கேட்டுக்கதிகலங்கிப் போனாள். சதாசிவத்தைப் பார்க்கும் போதெல்லாம் அவள் கண்களில் ஒரு சோகப் பார்வை தோன்றும். ஆழமறியாத அந்தச் சோகத்தை அவள் வாயால் சொல்ல வலியற்றிருந்தாள், ஆனாலும் அந்தப் பார்வையிலே கொந்தளித்த சோகத்தை கண்ணுடையவர்கள் தெரிந்து கொள்ளலாம். சதாசிவத்திற்குதான் அந்தக் கண் இல்லையே! ''முகத்திற் கண் கொண்டு பார்க்கின்ற மூடர்காள், அகத்திற் கண் கொண்டு பார்ப்பதே ஆனந்தம்'' என்று திருமந்திரத்தை உருப் போடும் அவனுக்குக் காதலும், அதனை இழப்பதனால் உண்டாகும் சோகமும் எப்படித் தெரியப் போகின்றன!

நாட்கள் கடந்தன. நம்பிக்கை குலைந்தது. ''இனி அடுத்தபடி செய்ய வேண்டியது என்ன?'' என்ற கேள்வி வைத்தியநாதம் பிள்ளையின் கருத்திலே எழுந்தது. தாயும் மகளும் படும் அவஸ்தையைப் பார்த்து அவர் உள்ளம் உருகினார். கடைசித் தடவை பிரயத்தனம் செய்து பார்ப்போமென்று எண்ணிச் சதாசிவத்தினிடம் வந்தார்; ''தம்பி, உன் அத்தைக்கு வேறு ஆதரவு இல்லை. இதுவரையில் உனக்கே தங்கத்தைக் கட்டிக் கொடுப்பதாகத் தீர்மானமாக எண்ணியிருந்தோம்; ஆகையால் வேறு இடங்களில் முயற்சி பண்ணவில்லை. இப்போது திடீரென்று நீ மறுத்து விட்டாய். நான் உன் அத்தைக்கு முன்பே வாக்குறுதி அளித்திருக்கிறேன். அதைக் காப்பாற்ற வேண்டாமா?'' என்றார்.

''என்ன வாக்குறுதி?''

''நான் செல்லம்மாளைப் பாதுகாப்பதாகவும் நீ

தங்கத்தைப் பாதுகாப்பாயென்றும் சொல்லி விட்டேன். இப்போது நீ இப்படி மறுத்துப் பேசுவது நியாயமாக இல்லை.''

''நீங்கள் என் விஷயத்தில் என்னைக் கேளாமல் வாக்குறுதி அளித்தது நியாயமாகுமா? போகட்டும். இப்போது நீங்கள் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்று வதில் ஆட்சேபணையே இல்லை. நீங்கள் உங்கள் தங்கை யாகிய என் அத்தையைப் பாதுகாப்பது போலவே நானும் என் தங்கையாகிய தங்கத்தைப் பாதுகாப்பேன்.''

இந்த வியாக்கியானத்தைக் கேட்டு வைத்தியநாதம் பிள்ளை ஸ்தம்பித்துப் போனார். சதாசிவத்தின் பேச்சைக் கேட்டு வந்த செல்லம்மாள், ''அட பாவி!'' என்று மனத்துள் சொல்லிக் கொண்டாள். மறைவில் நின்றிருந்த தங்கத்திற்கு ஒரு முறை உயிர் போய் வந்தது.

கடைசியில் வேறு வழியில்லாமல் தங்கத்தை வைத்திய நாதம் பிள்ளை தம் தம்பி மகனாகிய முத்துசாமிக்குக் கல்யாணம் செய்து வைத்தார். ஆசை அழிந்து சோகம் மலிந்த தங்கம் முத்துசாமிக்கு மனைவியாக வாழலானாள், அவள் தாயும் அவளோடு போய் இருந்தாள். இருக்க வாவது! தங்கத்தின் அழுத கண்ணையும், சிந்திய மூக்கை யும் கண்டு கண்டு அவள் அடுத்த மாசமே உயிரை விட்டு விட்டாள். அநேகமாக தங்கத்தின் கல்யாணமும் செல்லம்மாள் சாவும் அடுத்தடுத்தே நிகழ்ந்தன என்றுதான் சொல்ல வேண்டும்.

தங்கம் பஸ்மமாகிக் கொண்டிருந்தாள். வாழ்க்கையில் அவளுக்கு இன்பமே இல்லாமல் போயிற்று. அவள் கணவன் அபினும், கஞ்சாவும் குடித்துக் குடித்து அவளை அடிப் பதும் வருஷத்துக்குப் பத்து மாசம் நாடோடியாகத் திரிவதுமாக இருந்தான். அவன் தகப்பனாரும் காலமாகி விட்டார். தங்கம் பல மாசங்கள் தனியாகவே அந்த வீட்டில் காலங் கழித்தாள். அவள் துக்கத்துக்குத் தூண்டு கோலாக ஒரு பெண் குழந்தை வேறு பிறந்திருந்தது.

இவ்வளவு கஷ்டத்திலும் அவள் வைத்தியநாதம் பிள்ளை வீட்டிற்கு வரவில்லை. வைத்தியநாதம் பிள்ளை

ரஸவாதப் பைத்தியத்தால் உடைமை இழந்தார்; உள்ளம் இழந்தார்; கடைசியில் உடலும் இழந்தார். சதாசிவம் தனியே இருந்தான். அந்தத் தனிமை அவனுக்குப் பிடிக்கவில்லை. இந்தப் பாரத பூமி முழுவதும் சுற்றிவர வேண்டும் என்ற சங்கற்பம் எழுந்தது.

முன்பே அவன் துறவிதான்; ஓர் ஊரிலே ஒரு வீட்டிலே சிறைப்பட்டுக் கிடக்க அவன் மனம் இடம் கொடுக்கவில்லை. தன் வீட்டை விற்று அந்தப் பணத்தை ஏழை எளியவர்களிடம் வீசிவிட்டுக் கையைத் தட்டிக் கொண்டு வானவெளியே கூரையாக உள்ள வியனுலக வீட்டிற் குடியேற எண்ணியிருந்தான். இந்த எண்ணம் வளர்ந்து முற்றுப் பெறுந் தருணத்தில் தங்கத்தினிடமிருந்து ஒரு ஆள் வந்தான்.

''தங்கம்மா படுத்த படுக்கையாக் கிடக்குது. உங்ககிட்டே ஒரு வார்த்தை சொல்லணுமாம். உயிர் போறவங்க ஆசையை நிறைவேத்தாமப் போனா அது பெரிய பாவம்னு சொல்லச் சொல்லித்து'' என்று அவன் கூறிய செய்தி சதாசிவத்தின் சிந்தையைக் கலக்கி விட்டது. தங்கமென்ற ஒருத்தி இருக்கிறாளென்பதை அவன் மறந்திருந்தான். இப்போது அவள் மரணாவஸ்தையில் இருக்கிறாளென்பதைக் கேட்டபோது அவன் உள்ளே புதைந்து இருந்த ஏதோ ஓர் உணர்ச்சி கிளர்ந்தெழுந்தது.

'போகலாமா, வேண்டாமா' என்று ஒரு கணம் யோசித்தான். தங்கத்தின் பொறுமையும் உத்தமமான குணங்களும் நினைவிலே மிதந்து வந்தன. ஒரு முடிவுக்கு வந்தவனைப் போல் தங்கம் இருந்த கிராமத்தை அடைந்தான்.

அவள் படுத்த படுக்கையாகக் கிடந்தாள். போய்ப் பார்த்தான். அவனுக்கு அடையாளமே தெரியவில்லை. உடம்பு வெறும் எலும்பும் தோலுமா இருந்தது. அவள் ஸம்பூர்ண எழிலோடு விளங்கின போதும் அவளை அவன் பார்த்திருக்கிறான். ஆனால் அப்போது அந்த எழிலைப் பருகும் தாகம் அவன் கண்களுக்கு இல்லை. அவை

அவளிடம் குலுங்கிய அழகைக் காண மறுத்தன. இப்போதோ அவன் கண்கள் தங்கத்தின் உடம்பை நோக்கின. அவளுடைய உடலில் ஒவ்வோரங்குலமும் வேதனையால் வெம்பி கருகிக் கிடந்தது. வயசினால் வந்ததல்ல அந்த விகாரம்.

சதாசிவத்துக்கும் இருதயம் உண்டு, உணர்ச்சி உண்டு, முகத்திலே கண்கள் உண்டு என்று அப்போது தான் தெரிய வந்தது. அவள் அழகுருவத்தைக் கண்டு ஸ்தம்பித்துப் போகாத அவன் உள்ளம் அவள் விகார உருவத்தைக் கண்டு உணர்வற்று நின்றது. அவள் தன்னோடு நெருங்கிப் பழகியபோது ஒதுங்கி நின்ற அவன் மனம் அவள் விலகி நின்றபோது அவளை அணுகியது. முன்பு அவள் கண்களிலே தோற்றிய உல்லாச லாகிரியை அவன் ஏறிட்டும் பார்க்கவில்லை. இன்று அந்த லாகிரியெல்லாம் போய் வேதனைகளெல்லாம் தேங்கி நின்ற குழிகளாக இருந்தன அந்த விழிகள். அவை அவன் மனத்தை உருக்கின; உலுக்கின; முன்பு செய்த பராமுகத்துக்குத் தண்டனை கொடுப்பதுபோல அவன் உயிரையே வாட்டின!

அவனுக்கு அப்போதுதான் காதல் என்பது உடலுக்கும், உலகுக்கும், உள்ளத்துக்கும் புறம்பே உயிரில் ஊடுருவி நிற்கும் நுண்பொருள் என்ற உண்மை புலப்பட்டது.

''தங்கம், என்னை அழைத்தாயாமே'' என்று அவன் நடுங்கியபடியே கூறினான். அவளுடைய உள்ளக் கோயிலில் எழுந்தருளியிருந்த அன்புத் தெய்வத்தின் முன் அவன் நடுங்கத்தான் வேண்டியிருந்தது.

''அத்தான்! வந்து விட்டீர்களா! நான் உய்ந்தேன்! என் வாழ்வு பழுத்தது. இந்த அபாக்கியவதியின் கடைசி வேண்டுகோளுக்குச் செவி கொடுத்து வந்தீர்களே!......'' அவளுக்குப் பேச முடியவில்லை; மேல் மூச்சு வாங்கியது; உள்ளத்திலே குமுறிக் கொண்டிருந்த துக்கமோ, அவனைக் கண்டதிலே உண்டான ஆனந்தமோ அவள் கண்களில் நீர் வெள்ளத்தைப் பெருக்கியது. அன்புதான் கரைந்து ஊற்றாக வெளிப்பட்டதோ? யார் அறிவார்கள்!

''என்ன தங்கம்! இப்படி ஆகிவிட்டாய்!'' என்று அவன் கேட்டான்; இப்போது அவன் பேச்சிலும் துக்கம் தொனித்தது. ''நீங்களே காரணம்!'' என்று அவள் பதில் சொல்லி யிருந்தால் அவன் ஆச்சரியப்பட்டிருக்க மாட்டான். அவன் எதிர்பார்த்த விடை அதுதான்.

ஆனால் அவள், ''இந்த உடம்பு எப்படிப் போனால் என்ன? என் உடம்பு என்னதல்லவே! உயிருக்கு அழிவு ஏது?'' என்று சொல்லும்போது சதாசிவம் விம்மினான். அவன் வேதாந்தம் பேசுவது போய் இப்போது அவளல்லவா பேசுகிறாள்? ஆனால் அவள் வேதாந்தத்தில் எவ்வளவு உண்மை அடங்கியிருந்தது!

''ஆமாம்; இனிப் பேசப் போவதில்லை; நான் வந்த வேலை முடிந்து விட்டது. இந்த ஒரு நிமிஷமாவது உங்களோடு வெளிப்படையாகப் பேசுகிறேன். உங்களை நம்பி நான் என் உடம்பைத் தாங்கினேன். என் ஆசை நிறைவேறவில்லை. பிறகு நான் உடம்பை மறந்து போனேன். உள்ளத்திலே என் காதல் சஞ்சரித்தது. உங்களை அங்கே வைத்துப் பூசித்தேன். எனக்குக் கணவராக வந்தவர் இந்தக் குழந்தை வயிற்றில் இருந்தபோது போனவர் தாம். இன்னும் வரவில்லை. வந்தால்தான் என்ன செய்யப் போகிறார்? இந்தக் குழந்தை பிறந்து இரண்டு வருஷ காலமாகிறது. இவ்வளவு நாள் நான் எப்படியோ உயிரைத் தாங்கி வந்தேன். உங்களைப் பார்த்துப் பேச எனக்கு ஆசைதான். நீங்கள் என் உள்ளத்திலே தான் இருக்கிறீர்களே. அதனால் அழைக்க வில்லை. இப்போது அவசியம் வந்து விட்டது. அழைத்தேன். நான் போய் வருகிறேன். இந்த ஜன்மத்திலேதான் நான் தங்களோடு வாழக் கொடுத்து வைக்க வில்லை. அடுத்த ஜன்மத்திலாவது......'' வாக்கியத்தை முடிப்பதற்கு முன் அவளுக்கு மூர்ச்சை போட்டு விட்டது. அவனுக்குத் துக்கம் பொங்கி வந்தது. கோவென்று அழுது விட்டான். அவன் கண்ணீர் அவள் முகத்தில் விழுந்தது. அவளுக்குச் சிறிது தெளிவு வந்தது.

''அத்தான், என் ஆத்மாவுக்குச் சிறையாக இருக்கும்

இந்த உடலை உதறி விட்டால் பிறகு ஆத்மா உங்களோடே தான் சுற்றிக் கொண்டிருக்கும். ஆகையால் எனக்குத் துக்கம் சிறிது கூட இல்லை. என் ஆத்மா இருக்குமிடத்தில் என் குழந்தையும் இருக்க வேண்டும். ஆகையால் இந்தக் குழந்தையை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று சொல்லிக் கையைக் காட்டினபடியே மீண்டும் சோர்வடைந்தாள். அவ்வளவு தான். பிறகு சில மணி நேரங்களில் உயிர் போய் விட்டது.

தங்கத்தின் ஆத்மா உண்மையிலேயே தன்னைச் சுற்றிக் கொண்டிருப்பதாகச் சதாசிவம் உணர்ந்தான். அந்த வீட்டின் மூலையிலே தங்கத்தின் படம் ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அது அவன் கண்ணிற் பட்டபோது அவன் ஆவலாக அதை எடுத்து வைத்துக் கொண்டான். குழந்தையையும் எடுத்துக் கொண்டான்.

ஃ ஃ ஃ

சதாசிவம் வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டான். குடும்பம் ஒன்றும் இல்லாமல் தனித்திருந்தபோது புறப்பட முடியவில்லை. விதியின் விளையாட்டு நேர்மாறாக நடந்து சிரித்தது. தங்கத்தின் படம், அவள் குழந்தை, அவள் நினைப்புப்படி அவள் ஆத்மா - இந்தக் குடும்பத்தை ஏற்றுக் கொண்டு குடும்பியான போது அவன் எல்லாவற்றையும் துறந்து புறப்பட்டு விட்டான்.

4

''கதை முடிந்து விட்டதா?'' என்று கேட்டேன்.

''ஆம். முடிந்து விட்டது'' என்றார் சதானந்தர்.

''உங்கள் கதையைச் சொல்ல வந்தீர்கள்: அதை ஆரம்பிக்கவே இல்லை. சதாசிவத்தின் கதையை ஆரம்பித்தீர்கள்; அதை முடிக்கவே இல்லை.''

''இரண்டும் ஒன்றுதான்.''

நான் எதிர்பார்த்ததுதான் இது; ஆனாலும் அவர் வாய் மூலமாகக் கேட்கும்போது என் உடம்பு ஒரு குலுங்கு குலுங்கியது.

''நான் இந்த ஊருக்குப் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் வரும்போது இந்த இடம் எனக்குப் பிடித்திருந்தது. நான் ஒரு நாள் அஸ்தமன காலத்திலே இங்கே வந்தேன். எனக்கு இப்போது உணவு அனுப்பி வருகிறார்களே, அந்த வீட்டிலே தங்கினேன். அந்த ஏழைகளிடம் குழந்தையை ஒப்புவித்துவிட்டுக் குழந்தைக்கும் எனக்கும் உள்ள சம்பந்தத்தை யாரிடமும் கூறக் கூடாதென்று சத்தியம் வாங்கிக் கொண்டேன். அந்த வீட்டுக்காரர், தம் தங்கை குழந்தையை விட்டு இறந்து போனதாகவும், அநாதையான அந்தக் குழந்தையை வளர்த்து வருவதாகவும் சொல்லிக் கொண்டார்.

''அன்பினால் ஏற்பட்ட இந்தப் பந்தத்தில் நான் அகப்பட்டுக் கொண்டேன். குழந்தையைக் காப்பாற்றி ஒப்பிக்க வேண்டியவர்களிடத்தில் ஒப்பிப்பது என் கடமையென்று எனக்குத் தோன்றியது. அந்தக் குழந்தைக்கு நானே தகப்பனாக இருந்தால் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யாவிட்டால் என் ஆத்மாவுக்கு விடுதலை இல்லையென்ற கருத்தினால் நான் இங்கே சிறைப்பட்டேன். வைத்தியத்தில் நான் சம்பாதித்த பணமெல்லாம் அந்த அன்புத் தர்மத்துக்காகத்தான். குழந்தை வளர்ந்து விட்டாள். அவள் செலவுக்கு வேண்டிய பணம் அந்தக் குடும்பத்தாருக்குக் கிடைத்தது. அவர்களுக்கும் உபகாரமாக இருந்தது. கல்யாண ஏற்பாட்டுக்கு வேண்டிய செலவுக்குக் கூட நிறையப் பணம் இருக்கிறது. அந்த உத்தம ஜனங்கள் என்னைக் காட்டிக் கொடுக்காமல் பாரத்தை வகித்துக் கொண்டார்கள். ஒரு நல்ல இடத்தில் பிள்ளைக்கு ஏற்பாடு செய்து இன்றுதான் கல்யாணம் நடைபெற்றது.''

''ஆமாம், எனக்குத் தெரியுமே'' என்றேன் நான்?

''என் உள்ளத்துள்ளே குடும்பியாக வாழ்ந்து வந்த நான் இன்று அந்தப் பெண் குழந்தைக்குச் செய்ய வேண்டிய

கடமைகளில் இருந்து விடுபட்டேன். இனிமேல் கவலையில்லை. பறவை போல் திரிந்து வாழ விரும்பிய எனக்கு இருந்த பந்தம் இப்போது விலகி விட்டது. தங்கம்மாளின் ஆத்மா இப்போது பூர்ண திருப்தியை அடைந்திருக்கும். அவள் சாகும் தருணத்தில் என்னிடம் ஒப்பித்தக் குழந்தையை அக்கினி பகவானுக்கு முன்னே என் பிரதிநிதியான அந்தச் சைவர் மூலமாக ஒருவருக்கு ஒப்பித்து விட்டேன்; நானாக எடுத்து வந்தேனே அந்த படத்தையும் இன்று அக்கினி பகவானிடத்திலேயே ஒப்பித்து விட்டேன்.''

''அதைத்தான் நான் வரும்போது கொளுத்தினீர்களோ?''

''இப்போது களிம்பு போய் விட்டது. நான் தங்கமாகி விட்டேன்! என்னை இறுகப் பிணித்தருந்த பந்தத்தின் கடைசிப் புரி தங்கத்தின் படத்தைக் கொளுத்திய போது எரிந்து போய் விட்டது. இனிமேல் நான் விடுதலை பெற்றேன். அப்பா! என்ன பலமான விலங்கப்பா! அன்பினால் இடப்பட்ட விலங்கை லேசிலே தறிக்க முடியவில்லையே! பன்னிரண்டு வருஷம் தவமிருந்து காத்து அல்லவா விடுதலை பெற வேண்டியிருந்தது! இப்போது நான் உண்மைத் துறவி. விடுதலையின்பத்தைப் பெற்ற ஜயகோசத்தை எட்டுத் திக்கிலும் என்னுடைய தேவார திருவாசக இசையினால் முழக்கிக்கொண்டு நான் புறப்படப் போகிறேன்.''

மறுநாள் காலையில் ஆசிரமத்திற்கு வந்தேன். ஆம் அவர் போய் விட்டார். வெறிச் சென்றிருந்தது ஆசிரமம். அதுவரையில் அவருடைய சம்பந்தத்தால் அமைதி நிலவிய இடத்தில் தெய்வீக சோபையோடு திகழ்ந்த ஒவ்வோர் இலையும் ஒவ்வொரு பண்டமும் அவர் பிரிவுக்கு ஆற்றாமல் 'ஹோ' என்று கதறும் ஒலியை என் உள்ளம் உணர்ந்தது.

சிற்பியின் கனவு

[ஒரு ஸ்தல புராணத்தை வாசித்துக் கொண்டிருந்தேன். அதிலிருந்த வரலாறொன்று இந்தப் பகற்கனவைக் கிளப்பி விட்டது.]

கையிலே ஒரு சிற்றுளி; இடையிடையே என்னவோ முணுமுணுப்பு. இந்தக் கோலத்தில் காட்சியளித்தான் சிற்பி. அவனுடைய தேகத்தில் முறுக்கு இல்லை. ஆனால் தளர்ச்சியும் இல்லை. தான் மேற்கொண்ட காரியத்தைக் கண்ணும் கருத்துமாக இருந்து முடித்துவிடும் தைரியம் அவனுக்கு இருந்தது. ஒரு சிறு குடிசையிலே இரவெல்லாம் படுத்துச் சிந்தனை செய்வதும் பகல் முழுவதும் கல்லைக் கொத்திச் செப்பஞ் செய்வதுமாகிய வேலையில் ஈடுபட்டு இருந்தான். அவனுடைய வீட்டுக்குப் பக்கத்திலுள்ள தோப்பிலே இருந்தது அந்தக் குடிசை. புற உலகத்தின் குழப்பம் அணுகாமல் தனியே இருந்து தனது சிற்ப சிருஷ்டியை அவன் செய்து வந்தான்.

அவனது இளமைக் காலத்தில் அவன் கை செய்த வேலைகளுக்குக் கணக்கு இல்லை. சிற்பத் தொழிலில் அவன் கைமட்டுமா வேலை செய்தது? அறிவும் வேலை செய்தது. அவனுக்குச் சம்ஸ்கிருதம் தெரியும். ஆகம சாஸ்திரங்களைப் படித்திருக்கிறான். கோயில் நிர்மாணத்தில் அவன்தான் அக்காலத்தில் உரையாணியாக இருந்தான். விக்கிரக லட்சணங்களின் சம்பந்தமாக உள்ள ஏட்டுச் சுவடிகளெல்லாம் அந்தக் குடிசையிலே அவனுக்குத் துணையாக இருந்தன. ஏதேனும் ஒரு மூர்த்தியைப் பற்றி அவனிடம் யாராவது பேசத் தொடங்கினால், உடனே கடகடவென்று அந்த மூர்த்தியின் தியான சுலோகத்தை ஒப்பிப்பான். தமிழ் நாட்டுக் கோயில்களில் அவன் சிருஷ்டித்த மூர்த்தி கரம் மிக்க விக்கிரகங்கள் பல. அவன் கை ராசியை எல்லோரும் புகழ்ந்தார்கள். பணம் சம்பாதித்தான். புகழும் சம்பாதித்தான்.

இப்பொழுது அவனைத் தேடுவாரில்லை. 'சிறு பசங்கள்' கிளம்பி விட்டார்கள்; மந்திரமில்லை; மாயம் இல்லை; கண்ணுக்கு அழகாக இருந்தால் போதும் - இப்படி ஆகிவிட்டது காலம். இவ்வளவு நாள் பணத்துக்காக அந்தச் சிற்பி விக்கிரகங்களை அமைத்தான். இப்போது ஆத்மார்த்தமாக ஒன்றை இயற்ற எண்ணினான்.

அவனுடைய சொந்த ஊரிலே காலையில் எழுந்து இருந்தால் கண்ணுக்கு முன்னே நிற்கும் குன்றின் முகத்திலே விழிக்க வேண்டும். அந்தக் குன்றை அவன் அறிவு வந்தது முதல் தினந்தோறும் பார்த்துக்கொண்டு தான் இருந்தான். அப்பொழுதெல்லாம் அவன் கண்கள் அந்தக் குன்றைப் பார்த்தன, கருத்து, பார்க்கவில்லை,

பணத்துக்கு வேலை செய்யும் காலம் போய் ஓய்வாக இளைப்பாறிக் கொண்டிருந்த அவனது முதுமைப் பருவத்தில் ஒரு நாள் அந்தக் குன்றைப் பார்த்தான். சதா சிற்றுளியால் நுண்ணிய சிற்ப சிருஷ்டியைச் செய்து வந்த தன் கை இப்போது வேலை ஒன்றும் இல்லாமல் துருப்பிடித்துப் போவதை அவன் விரும்பவில்லை. அன்று பார்த்த அந்தக் குன்றின் காட்சியிலே ஒரு குறை அவன் கண்ணுக்குப் புலப்பட்டது. 'இது எவ்வளவு அழகான குன்று! இருந்தும் என்ன பயன்? இதை யார் போற்றுகிறார்கள்? திலகம் இல்லாத நெற்றி போலவும் மதியில்லாத வானம் போலவும் இது சூன்யமாக இருக்கிறது. இதன் மேல் ஒரு கோயில் இருந்தால் எவ்வளவு அழகாக இருக்கும்!' என்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்றோ இல்லையோ, அவன் தன் முதுமையையும் மறந்து துள்ளிக் குதித்தான். "வேலை இல்லாமல் மரத்துப்போன என் கையின் சூன்யத்தையும் இந்தக் குன்றின் சூன்யத்தையும் போக்க முயல்வேன்" என்று உடனே சங்கற்பம் செய்து கொண்டான். தனிக் குடிசை கட்டினான். சுவடிகளைக் கொண்டு போய் வைத்தான். நல்ல கல்லாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு

சென்றான். முருகக் கடவுளின் விக்கிரகம் ஒன்றை அமைக்க ஆரம்பித்து விட்டான்.

ஃ ஃ ஃ

லட்சணம் பிசகாமல் ஆற அமர அவன் அந்த விக்கிரகத்தை அமைத்தான். வித விதமாக நூறு உளிகளை வைத்துக்கொண்டு வேலை செய்தான். அந்த உளிகளால் அவன் கொத்தினானென்று சொல்வது பிழை; உளிகளின் ரூபத்தில் இருந்த எழுதுகோலால் அந்தத் திவ்ய மூர்த்தியை எழுதினான் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

துணையில்லாமல் தனியே இந்த வேலையை அவன் செய்து வந்தாலும் ஒவ்வொரு நாளும் மாலைக் காலத்தில் அவனோடு பேசிப் பொழுதுபோக்க ஒரு கிழவர் வருவார். அவர் ஒரு கவிஞர். கலைஞனும் கவிஞரும் முதுமை ஒன்றினால் மட்டும் சமானமானவரென்று சொல்வதற்கு இல்லை; அறிவிலும் புகழிலும் தெய்வ பக்தியிலும் கலைத் திறமையிலும் இருவரும் துணைவர்கள். சிற்பி பல கோயிலில் மூர்த்திகளை அமைத்தான்; கவி பல புராணங்களை இயற்றினார். கண்ணுக்கு இன்பந்தரும் சிற்ப வித்தகத்தால் சிற்பி சிறப்படைந்தான்; கருத்துக்கு இன்பம் தரும் கவிதைத் திறமையால் கவிஞர் சிறப்பெய்தினார்.

இரண்டு பேரும் பேசிக்கொண்டே இருப்பார்கள். தெய்வ லட்சணங்களைச் சிற்பி சொல்வான்; தெய்வத் திருவிளையாடல்களைக் கவிஞர் பேசுவார்.

இரண்டு கிழவர்களும் ஒருவருக்கு ஒருவர் இன்றியமையாதவராக விளங்கினார்கள். காலம் இன்பமுடையதாகச் சென்று கொண்டிருந்தது. சிற்பி குடிசையிற் கொணர்ந்த கல் உருப் பெற்று அங்கம் படைத்து வந்தது.

எல்லாம் முடிந்து விட்டது. கிழட்டுச் சிற்பி கூலிக்கு வேலை செய்யாமல் இருதய பூர்வமான ஆர்வத்தினால் செய்தது அந்த விக்கிரகம். ஆதலால் அது மாசுமறுவற்ற மூர்த்தியாக விளங்கியது. பல காலம் ஆராய்ந்து

ஆராய்ந்து சிறுகச் சிறுக அமைத்த அதில் அவன் தன் கைத் திறமையையும் கற்பனைத் திறமையையும் ஆகம சாஸ்திர அறிவுத் திறமையையும் காட்டியிருந்தான். விக்கிரகம் தத்ரூபமாக எழுந்து பேசுவது போல் இருந்தது. அதன் முகத்திலே என்ன அழகு! கல்லை இரும்பினால் செதுக்கி உயிர் மூட்டி விட்டான் கலைஞன்.

கண் திறக்க வேண்டியதுதான் பாக்கி. குன்றின் மேல் கோயில் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியதுதான். அந்தக் கோயில் பெரிதாக இருக்க வேண்டுமென்று அவன் விரும்பவில்லை.

''இப்போது நிலைக்க ஒரு பீடமும் நிழலுக்கு ஒரு கூரையும் இருந்தால் போதும். பிறகு இந்த மூர்த்திக்கு எல்லாம் தானே வந்து விடும். இந்த மாதிரி விக்கிரகத்தை யாரும் எங்கும் பார்த்திருக்க மாட்டார்கள். பாருங்கள் இது என்ன வேலை செய்யப் போகிறதென்று. எவ்வளவு கோலாகலத்தோடு இது விளங்கப் போகிறதென்பதை நாம் பார்க்கக் கொடுத்து வைத்திருக்கிறோமா இல்லையோ!''-இப்படிக் கவிஞரிடம் சொல்லிக் கொண்டே ஒரு பெருமூச்சு விட்டான் அவன்.

''சிறு குடிசையிலே உண்டான இந்தச் சிருஷ்டி தமிழ் நாட்டையே ஒரு ஆட்டு ஆட்டப் போகிறது. அப்புறம் இந்தக் குன்று இப்படியா இருக்கும்! அடே அப்பா! கோபுரங்களென்ன, மதில்களென்ன, மண்டபங்களென்ன. குளங்களென்ன, தவச் சாலைகளென்ன, தர்ம சத்திரங்களென்ன — எல்லாம் இந்திர ஜாலத்தால் சிருஷ்டிக்கப் பட்டவை போல் இங்கே உண்டாகி விடப் போகின்றன. ஆம்! இந்திர ஜாலத்துக்கு மேற்பட்ட ஜாலம் இந்தச் சிற்பக் கலை — அவன் ஆவேசம் வந்தவனைப் போல் பேசினான்.

''நாளைக்கு இன்னும் இதை ஒரு முறை நன்றாகப் பார்த்து ஏதாவது கை வைக்க வேண்டிய வேலையிருந்தால் கவனித்து வெள்ளிக் கிழமையன்று கண்ணைத் திறக்கப் போகிறேன். உங்களுடைய ஆசீர்வாதம் வேண்டும்'' என்று தன் தீர்மானத்தைக் கவிஞரிடம் அவன் சொன்னான்.

''அப்படியே செய்யலாம். முருகக் கடவுளுக்கும் வெள்ளிக்கிழமைக்கும் பொருத்தந்தான்'' என்று ஆமோதித்தார் கவிஞர்.

மறுநாள் தான் அமைத்த விக்கிரகத்தின் அழகை அணு அணுவாகப் பார்த்துப் பார்த்து உள்ளம் பூரித்துக் கொண்டு இருந்தான் சிற்பி. எல்லா அங்கங்களும் தோஷம் சிறிதும் இல்லாமல் பரிபூரணமாக அமைந்திருந்தன. ஆனாலும் தொட்டுத் தொட்டுப் பார்த்தான். இன்னும் ஏதாவது செய்ய வேண்டுமா என்று கவனித்தான். அவன் லேசிலே திருப்தியடையும் சுபாவமுடையவனல்ல. திருப்பித் திருப்பிப் பார்த்து அடிக்கடி இழைத்து இழைத்துச் சிற்பங்களுக்கு ஒளியூட்டுபவன் அவன். அவனுடைய பொறுமை சகிக்க முடியாத பொறுமை.

பார்த்துக்கொண்டே வந்தபோது விக்கிரகத்தின் மார்பில் இன்னும் சிறிது நகாசு செய்யலாமோ என்ற சந்தேகம் தோன்றிற்று. தடவித் தடவிப் பார்த்தான்; நின்று பார்த்தான்; எழுந்திருந்து சிறிது தூரம் சென்று பார்த்தான். அங்கே கொஞ்சம் கை வைக்கத்தான் வேண்டுமென்று தோற்றியது.

வானம் சிறிது சிறிதாக இருண்டு வந்தது. மாலைக் காலமும் நெருங்கியது. பெரிய மழை வருவதற்குரிய அறிகுறிகள் உண்டாயின. 'நாளைக்குப் பார்த்துக் கொள்வோம்' என்று நினைத்தான். 'நாளைக்குத்தான் கண் திறக்கப் போகிறோம். இன்றே மற்ற வேலைகளை முடித்துக் கொள்ளலாம்' என்ற யோசனை பிறகு தோன்றியது. ஒரு விளக்கை ஏற்றிப் பக்கத்தில் வைத்துக் கொண்டான். உளியை எடுத்தான். 'கொஞ்சம் பொறுத்திரு' என்று ஏதோ ஒன்று அவன் மனத்துள்ளிருந்து சொல்லியது போல் இருந்தது. நெடுந் தூரம் நடந்து வந்தவனுக்குக் குறிப்பிட்ட இடத்தை அணுகும் போது தான் அவசரம் அதிகமாகும். அதைப் போல அவனுக்கும் அவசரம் தாங்க முடியவில்லை. 'எல்லாவற்றையும் இன்றே முடித்துவிட வேண்டும்' என்ற எண்ணம் தீவிரமாக எழுந்தது

அவசரத்தில் ஏதோ ஓர் உளியை எடுத்து இடது கையில் வைத்துக் கொண்டான். வலது கையில் சுத்தியை எடுத்து ஓங்கினான். "கடபுட தடபுட தடார்! கடகட தடார்! கடகட தடதட புடபுட தடார்" என்று வானம் இடித்தது. அந்த இடியோசையும் முன்பே உள்ளத்தில் எழுந்த ஒலியும் அவனது நிதானத்தை இழக்கச் செய்தன. சுத்தி வேகமாக உளியின் மேல் விழுந்தது. குறி பார்த்து வைத்தும் இடக்கையில் உண்டான நடுக்கம் உளியை வேறு போக்கிலே திருப்பி விட்டது. "சலக்" என்ற சப்தம்; ஒரு சில் மார்பிலிருந்து பெயர்ந்து சிற்பியின் முகத்திலே அடித்தது.

இடியோசையால் அவன் உடல் சிறிது நடுங்கியது; ஆனால் அந்தச் சில் பெயர்ந்த மெல்லோசையால் அவன் உயிரே நடுங்கியது. "ஹா!" என்று வீரிட்டுக் கத்திய படியே அவன் மூர்ச்சையாகி விழுந்து விட்டான்.

அதே சமயத்தில் மழையில் நனைந்து கொண்டு கவிஞர் உள்ளே புகுந்தார். அங்கே அவர் கண்ட காட்சி அவரைப் பிரமிக்கச் செய்தது. படர்ந்து எரியும் விளக்கு, மார்பிலே வடுப்பட்ட விக்கிரகம்; அதன் அருகே சிற்பி மூர்ச்சை போட்டுக்கிடக்கிறான். அவன் நெற்றியில் இருந்து இரத்தம் வழிகிறது!

"இதென்ன!" — அவருக்கு ஒன்றும் புரியவில்லை. தம் நண்பன் நெற்றியை ஜலத்தால் துடைத்தார். முகத்தில் குளிர்ந்த ஜலத்தைத் தெளித்தார். அவன் மெல்ல விழித்துப் பார்த்தான்.

"என்ன அப்பா சங்கதி? இப்படி விழுந்து கிடக்கிறாயே!" என்று வினவினார் கவிஞர்.

"எல்லாம் போச்சு!" என்று குரல் அடைக்க விம்மினான் சிற்பி. எழுந்து உட்கார்ந்தான்; பார்த்தான். தலை சுழன்றது. "இதற்காகவா என் உயிரைக் கொடுத்து இதைச் செய்தேன்! நான் பாவி. என்னை ஏன் பிழைப்பு மூட்டினீர்கள், அப்படியே இறந்து போக விட்டு விடுவது தானே!"

''என்னப்பா உளறுகிறாய்? உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா என்ன?''

''இங்கே பாருங்கள்: இந்த விக்கிரகத்தின் மார்பிலே பட்ட உளி என் இருதயத்திலும் பட்டு விட்டது. இது இனி மேல் எதற்கும் பிரயோஜனப்படாது; என் வாழ்விலும் உபயோகம் இல்லை. என்னையும் இதனையும் சேர்த்து எங்கேனும் புதைத்துவிடச் செய்யுங்கள்.''

''அட பைத்தியமே! இதற்குத்தானா இவ்வளவு அங்கலாய்க்கிறாய்? இந்த விக்கிரகம் பழுது பட்டதென்று நீ எண்ணாதே. நீ நாளைக்கு இதன் கண்ணைத் திறந்து விடு. உன் உளியால் செய்ய முடியாததை என் எழுத் தாணியால் செய்து விடுகிறேன்.''

''அப்படியென்றால்? எனக்கு ஒன்றும் புரிய வில்லையே!''

''இப்போது உன் மனம் குழம்பி யிருக்கிறது. பேசாமல் வீட்டிற்குப் போய்ச் சாப்பிட்டு விட்டுத் தூங்கு. நாளைக்குத் தெளிவிக்கிறேன்.''

அவன் எப்படித் தூங்குவான்? ''இனிமேல் மீண்டும் கண் விழிக்காத தூக்கந்தான் எனக்கு'' என்று அவன் நொந்து கொண்டான்.

ஃ ஃ ஃ

பத்து நாட்களில் சிற்பி அதே ஏக்கமாக இறந்து விட்டான். அவனுடைய உயிரன்பர் கவிஞர் அவனை எரிக்கக் கூடாதென்று தடுத்து விட்டார். அவனையும் அவனால் இயற்றப்பட்ட விக்கிரகத்தையும் ஓரிடத்தில் புதைத்தால்தான் அவனுடைய ஆத்மா சாந்தி அடையும் என்று அவர் சொன்னார். அப்படியே செய்தார்கள்.

புதைக்கும் போது கவிஞர் ஒரு மண் பானைக்குள் ஒரு சுவடியைப் போட்டுக் கொண்டு வந்து கொடுத்து, ''இதை யும் சேர்த்துப் புதையுங்கள்'' என்று சொல்லி விட்டு, ''உன்னோடு நான் பழகினேன். இணையற்ற உன் கலைத் திறமையை உணர்ந்து இன்புற்றேன். உன்னை உலகம் மறந்து விட்டது. நான் மறக்கவில்லை. உன்

சிருஷ்டியின் பெருமையை நீ உணரவில்லை. நான் உணர்கிறேன். நீ போய் விட்டாய். இப்போது புதைக்கப்படும் உன் உடல் மண்ணோடு மண்ணாக மக்கி விடும். ஆனால் நீ சிருஷ்டித்த இந்த அபூர்வ சிருஷ்டி ஒரு புதையலாகவே பூமி தேவியின் மடியிலே இருக்கும். நானும் மண்ணோடு மண்ணாய் மடிந்து விடுவேன். ஆனால் என்னுடைய சிருஷ்டியாகிய இந்தக் கவிதைத் தொகுதி உன்னுடைய சிருஷ்டியோடு சேர்ந்து புதையலாகவே இருக்கட்டும். நாம் சேர்ந்து வாழ்ந்தது போல் நம் சிருஷ்டிகள் இரண்டும் சேர்ந்து கிடக்கட்டும். ஆண்டவன் அருள் இருந்தால் இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று ஆதாரமாக உலகத்தார் உள்ளத்தைக் கவரும் காலம் வந்தாலும் வரலாம். அப்போது வானலோகத்தில் இருக்கும் நாம் இருவரும் கண்டு கை கோத்துக் களித்து இன்புறுவோம்!'' என்று புலம்பினார்.

அங்கிருந்த கூட்டத்தினர் அவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டதென்று எண்ணினார்கள்.

ஃ ஃ ஃ

முந்நூறு வருடங்கள் சென்றன. குன்றுக்கருகில் ஊர் மறைந்து காடாகப் போய் விட்டது. அகஸ்மாத்தாக ஒரு மறவன் பூமியை வெட்டும் போது ஒரு திவ்ய விக்கிரகமும், சுவடியுள்ள ஒரு பானையும் கிடைத்தன. அவன் இந்த அதிசயத்தை எங்கும் பரப்பினான். அரசன் காது வரைக்கும் அது சென்றது. அவன் தன் ஏவலாளர்களுடன் வந்து விக்கிரகத்தைப் பார்த்து வியப்பும் சந்தோஷமும் அடைந்தான். அந்தச் சுவடியை அறிஞர்களைக் கொண்டு ஆராய்ந்தான். அந்தக் கிரியின் மகாத்மியத்தை உரைக்கும் புராணம் அது. முருகக் கடவுள் அந்த ஸ்தலத்திற்கு எழுந்தருளிப் பல திருவிளையாடல்களைச் செய்ததாகப் புராணம் விரிவாகச் சொல்லியதைக் கண்ட பக்தர்கள் குதூகலித்தனர். அறிஞர்கள் உடனே விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்று அரசனைத் தூண்டினார்கள். புராணத்தில் ''திருமால் சக்கரம் பெற்ற படலம்'' என்பது ஒரு பாகம். அதில் இருந்த கதை வருமாறு:

நாரத முனிவர் பிரமதேவரிடம் முருகக் கடவுளைத் திருமால் வழிபட்ட வரலாற்றைச் சொல்ல வேண்டுமென்று விரும்ப அவர் கூறலாயினார் :

முன்பு தாரகாசுரனோடு திருமால் பொருத காலத்தில் அவ்வசுரன் அவரது சக்கராயுதத்தைக் கைக் கொண்டு தன் மார்பில் ஆபரணமாகத் தரித்திருந்தான். முருகக் கடவுள் அவ்வசுரனைச் சங்காரம் செய்த போது அவ் வாயுதத்தை எடுத்துக் கொண்டு தம் மார்பிற் பதக்கமாகத் தரித்தனர். அதனை உணர்ந்த திருமால் இந்த ஸ்தலத்தை அடைந்து முருகக் கடவுளை நோக்கித் தவம் புரியவே அக்கடவுள் எழுந்தருளி, ''நீ வேண்டிய வரம் யாது?'' என்று வினவினார். திருமால் பலபடியாகத் துதித்துச் சக்கராயுதத்தைப் பெற வேண்டுமென்ற தம் விருப்பத்தை உரைக்க முருகப் பெருமான் அதனைத் தம் மார்பில் இருந்து எடுத்து அளித்தனர். அதனைப் பெற்ற திருமால் அக்கடவுளைப் போற்றி வணங்கித் தம் இருப்பிடம் சென்றனர்.

முருகக் கடவுள் சக்கராயுதத்தைத் தம் மார்பில் இருந்து எடுத்தமையால் அவ்விடத்திற் சிறிது பள்ளம் அன்று முதல் உண்டாயிற்று.

''மார்பகங் குழிந்த திருவடை யாளம்
வயங்கிய திவ்வுல கத்தில்
ஏர்பெற அதனைத் தெரிசனம் செய்தோர்
இடரொழிந் தின்பவீ டடைவார்.''

ஃ ஃ ஃ

சிற்பியின் கனவு மெய்யாயிற்று; கவிஞரின் விருப்பம் நிறைவேறியது. இப்போது அந்தக் குன்றத்தில், 'அடே அப்பா! கோபுரங்களென்ன, மதில்களென்ன, மண்டபங் களென்ன, குளங்களென்ன, தவச்சாலைகளென்ன, தர்ம சத்திரங்களென்ன — எல்லாம் இந்திரஜாலத்தால் சிருஷ்டிக்கப் பட்டவை போல்' உண்டாகி விட்டன.

துப்பறிபவன்

கணபதி ஏதாவது ஒரு புஸ்தகத்தைப் படித்தால் அதே மயமாக ஆகி விடுவான். ஒரு வாரம் வரையில் அவனுடைய பேச்சில் அந்தப் புஸ்தகத்துச் சரக்கு அடிக்கடி வெளிவரும், கதையைப் படித்தால் அந்தக் கதா பாத்திரங் களுள் ஒருவரைப் போல நடந்து கொள்வான்.

துப்பறியும் நாவல்களில் அவனுக்கு ருசி தட்டத் தொடங்கியது; கானன்டாயில்எழுதியஷெர்லக்ஹோம்ஸைப் படித்தான். அவனே ஒரு ஷெர்லக் ஹோம்ஸ் ஆகிவிட்டான். இன்னும் பலர் எழுதிய கதைகளையும் படித்தான். அப்புறம் அவனுடைய ஊகங்கள் விரிய ஆரம்பித்தன. அவன் யாரைச் சந்தித்தாலும் அவனுடைய ஊக சக்தியைக் காட்டுவதில் தவறுவதில்லை.

"நீ ஏன் அவ்வளவு வேகமாக நடந்தாய்?" என்று நம்மை ஒரு கேள்வி கேட்பான்.

"நான் நடக்கவில்லை" என்று சொல்லிப் பாருங்கள்.

"நீ சொன்னாலும் நான் நம்புவேனா? அதோ பார்! உன் வேஷ்டித் தலைப்பு டாரென்று கிழிந்திருக்கிறது. நீ எங்கோ அவசரமாகப் போகிறாய். உன்னை அறியாமல் டாரென்று வேஷ்டி கிழிகிறது. வீட்டிற்கு வருகிறாய்; உன்னுடைய மனைவியோ அம்மாவோ பார்த்து, 'ஏன் இப்படிக் கிழித்துக் கொண்டாய்?' என்று கேட்கிறாள். அப்பொழுதுதான் உனக்கு வேகமாக நடந்தது ஞாபகத் துக்கு வருகிறது—" இப்படியே கதை சொல்ல ஆரம்பித்து விடுவான்.

ஃ ஃ ஃ

ஒரு நாள் ஒரு புது நண்பரை நான் என்னுடன் அழைத்துக் கொண்டு கணபதியின் வீட்டிற்குப் போனேன். என்னுடன் வந்த நண்பர் நெட்டையானவர்: சிறிது கூனலுடையவர். கணபதியின் வீட்டிற்குப் போனபோது

அவன் ஏதோ ஒரு துப்பறியும் நாவலைப் படித்து முடித்த சமயம். நாங்கள் போனவுடன் அவன் எங்களை வாருங் களென்று சொல்லக்கூட இல்லை.

''துப்பறிபவன் என்றாலே ஒரு தனி மனிதன்; அவன் மூளையே அபாரம்'' என்றான் அவன்.

என்னுடன் வந்த நண்பர் என்ன நினைத்தாரோ அறியேன். அப்புறம் உட்கார்ந்தோம்.

''இவர் உன்னுடைய நண்பர்; என்னுடைய நண்பரும் ஆகப் போகிறார்'' என்றான் கணபதி-

''ஆம்'' என்றேன் நான்.

தான் துப்பறியும் சாமர்த்தியத்தில் இந்த விஷயமும் ஒன்றென்று அவன் திருப்திப்பட்டுக் கொண்டான்.

''உங்களுடைய மனைவி மிகவும் குட்டையானவள் அல்லவா?'' என்று கேட்டான் கணபதி.

என்னுடைய நண்பர் ஒன்றும் சொல்லாமல் சிரித்தார்.

''ஆமாம். நெட்டையாக இருப்பவர்களுக்கு நெட்டையானவர்களே மனைவிகளாகக் கிடைக்கிறார்களா? உங்களுக்கு மிகவும் இளமையிலேயே கல்யாணம் ஆகியிருக்க வேண்டும்'' என்று மற்றொரு ஜோஸ்யத்தைச் சொன்னான். வந்தவர் அதற்கும் பதில் பேசவில்லை. சிரிப்பதோடே நின்று விட்டார்.

''உங்களுடைய உருவம் குட்டையும் தெட்டையுமாக இருந்தாலும் உங்கள் இருவர் மனமும் ஒத்து இருக்கும். உங்கள் மனைவியின் யோசனைகளை நீங்கள் அன்போடு ஏற்றுக் கொள்ளும் தன்மை உடையவர்கள்.''

நண்பர் சிரித்த வண்ணமாக இருந்தார். எனக்கும் ஆச்சரியமாக இருந்தது.

''இவையெல்லாம் எப்படித் தெரிந்தன?'' என்று கேட்டேன்.

''இதென்ன பிரமாதமா? ஊகத்தால் அறிந்ததுதான். துப்பறிபவர்கள் எவ்வளவோ சூட்சமமான விஷயங்களை எல்லாம் கண்டு பிடித்து விடுகிறார்கள்.''

"என்ன காரணங்களால் இந்த விஷயங்கள் உனக்குத் தெரிந்தன?"

"காரணம் சாதாரணந்தான். நான் சொல்லும்போது ஆச்சரியமாகவே இருக்கும்; கொஞ்சம் மூளையை உபயோகித்துப் பார்த்தால் சாதாரணமாக எல்லோருக்கும் தெரிய வரும்."

நான் மூளையில்லாதவனென்று அவன் நினைத்து அப்படிச் சொன்னானென்று நீங்கள் எண்ண வேண்டாம். தன்னுடைய மூளை அவ்வளவு சிறந்ததென்பதை வேறு வகையாக அவனால் தெரிவித்துக் கொள்ள முடியவில்லை!

"சொல்கிறேன் கேள்: இவரைப் பார்த்தவுடனே இவருடைய நெட்டையான ஆகிருதியில் ஒரு சிறு கூனல் தென்படுகிறது. இது உடம்பிலே உண்டானதல்ல. குனிந்து குனிந்து பழகியதால் இப்படியாகி யிருக்கிறது. குனிந்து குனிந்து பேசிக் கொண்டிருந்தால் இப்படித்தான் ஆகும். இவர் மிகவும் சுவாரஸ்யமாகத் தினந்தோறும் ஒருவரோடு பேச வேண்டுமென்றால் அவர் இவருடைய மனைவியாகத்தான் இருக்க வேண்டும். அவளோடு தினந்தோறும் குனிந்து குனிந்து பேசும்படி அவள் குட்டையாக இருப்பதனால்தான் இவருக்குக் கூனல் உண்டா யிருக்கிறது. கூனல் விழ வேண்டுமானால் பல வருஷங்கள் குனிந்து கொண்டு பேசிய வழக்கம் இருக்க வேண்டும்; அதனால் இவருக்கு இளைய வயசிலேயே அந்தக் குட்டையான மனைவி இவரோடு வாழத் தொடங்கி யிருக்க வேண்டும். இவ்வளவு சிரத்தையாக இவர் குனிந்து பேசுவதும் அவள் வார்த்தைகளைக் கேட்பதுமாக இருப்பதில் இவருடைய மனவொற்றுமையும் விளங்கவில்லையா? இதை முட்டாள் கூட ஊகித்து விடலாமே."

மறுபடி என்னை முட்டாளென்று அவன் திட்டுவதாகச் சந்தேகம் கொள்ளாதீர்கள்!

"உங்களுக்குக் குழந்தைகள் உண்டோ?" என்று கணபதி அவரை நோக்கிக் கேட்டான்.

"அதையும் நீயே சொல்லிவிடேன்" என்றேன் நான்.

''அது ஒரு பிரமாதமான காரியமல்ல. இவருக்குக் குழந்தையே இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். குழந்தை இருந்தால் இவர் இவ்வளவு சந்தோஷத்தை வெளியிடும் முகத்தோடு இருக்க மாட்டார்'' என்று சொல்லி விட்டு, ''ஏன்? நான் சொல்வது எப்படி?'' என்று வெற்றி கொண்ட தொனியில் கேட்டான்.

''நீங்கள் கடைசியில் சொன்னது பரம வாஸ்தவம். எனக்குக் குழந்தைகளே இல்லை.''

''சந்தோஷம், மற்ற விஷயங்களில்கூட அவ்வளவு அதிக வித்தியாசம்.....''

''வித்தியாசமென்ன? நான் பிரம்மசாரி! எனக்குப் பெண்டாட்டியும் இல்லை; பிள்ளைகளும் இல்லை.''

''பார்த்தீர்களா? அப்பொழுதே நினைத்தேன். இவர் முகத்தில் அதிகச் சுருக்கமில்லையே! என்ன இருந்தாலும் பெண்டாட்டி நகைக்கும் புடைவைக்கும் நச்சுப்பண்ணாமல் இருப்பாளா? இவர் பிரம்ம சாரியாகத்தான் இருக்க வேண்டும்'' என்று ஊகித்தேன். ஆனாலும் இப்போது தான் என்ன? இவருக்குப் பிள்ளைகள் இல்லையென்பது மட்டும் நிச்சயமாகிவிட்டது.''

அவனோடு மேலே என்ன பேசுவது?

பரிவர்த்தனை

''சித்தலவாய்! சித்தலவாய்!'' என்று போர்ட்டர் கத்தினான். அவன் அப்படி அறிவிக்கா விட்டால் அவ்வூரின் பெயரோ விசேஷமோ ரெயிலில் பிரயாணம் செய்பவர்களுக்குத் தெரிய நியாயம் இல்லை. ஸ்டேஷனில் வண்டி நின்றது. ஒருவர் இரண்டு பெண்மணிகளையும் ஒரு

குழந்தையையும் நான் இருந்த வண்டியில் ஏற்றி விட்டு, ''ஜாக்கிரதையாகப் போய் வா அம்மா !...... லக்ஷ்மீ, போய் வறயா ? மாப்பிள்ளையிடம் சொல், எனக்கு வேலை அதிகமென்று'' என்று சொல்லிக் கீழே நின்றார். ''ராஜா, போயிட்டு வறயா ?......குழந்தை ஜாக்கிரதை. அடிக்காதே . ராஜா, போயிட்டு வறயா ?'' என்று அந்தக் குழந்தையையும் அதை வைத்துக் கொண்டிருந்த தாயையும் மாறி மாறிப் பார்த்து விடைபெற்றுக் கொண்டார் அந்த மனுஷர்.

லக்ஷ்மி, குழந்தையின் தாய். குழந்தையின் கன்னத்தை மெல்லக் கிள்ளியபடியே, ''மாமாவைப் பாரு. ஊருக்கு வான்னு சொல்லு. சமுத்தா அழாமெ இருக்கேன்னு சொல்லு'' என்று அதன் மழலைப் பாஷையிலேயே பேசினாள்.

வண்டி ஊதிவிட்டது. புறப்படுவதற்குள் அந்த மனிதர் நூறு தரம் 'ஜாக்கிரதை' சொல்லி விட்டார்.

மூன்று பேரும் வண்டியில் அமர்ந்தார்கள் ; இரண்டு பேர் உட்கார்ந்தார்களென்பது தான் நியாயம் ; குழந்தை அம்மா மடியில் இருந்தது.

அவர்கள் உட்கார்ந்த பலகைக்கு எதிர்ப் பலகையில் யாரோ ஒரு குடியானவப் பெண் தன் குழந்தையுடன் உட்கார்ந்திருந்தாள். இந்த இரண்டு குழந்தைகளுக்கும் ஏறக்குறைய ஒரே வயசுதான் இருக்க வேண்டும்.

வண்டியில் அதிகக் கூட்டம் இல்லை. சின்ன வண்டி ; எல்லோரும் சேர்ந்து ஏழு பேர்களுக்குமேல் இல்லை.

அந்த ஸ்டேஷனில் ஏறின ஸ்திரீகளில் ஒருத்தி ஐம்பது வயசுள்ள அம்மாள். குழந்தையின் தாய்க்கு இருபது இருபத்திரண்டு பிராயம் இருக்கலாம்.

அவர்கள் உட்கார்ந்தவுடன் எல்லோருடை கண்களும் அந்தக் குழந்தையின்மேல் பாய்ந்தன. ராஜா என்ற பெயர் அந்தக் குழந்தைக்கு எல்லாவிதத்திலும் தகும் நல்ல களை சொட்டும் முகம். கவலையே அறியாமல் வேண்டிய பொருளை வேண்டிய சமயத்தில் பெற்று வளர்ந்

வளர்ச்சி, அழகான கண்கள் ஆகியவை அந்தக் கவர்ச்சிக்குக் காரணம். இவைகளுக்குமேல் அவன் அணிந்திருந்த கால் பூட்ஸு, அதன் வாய்க்கு விளிம்பு இட்டவைபோன்ற வெள்ளிக் காப்பும் கொலுசும், வெல்வெட்டு நிக்கர், மேலே நல்ல சட்டை-இந்த ஆடை வகைகளும் அந்தச் சின்னஞ் சிறு உருவத்தைப் பின்னும் அழகுடையதாகச் செய்தன.

அந்தக் குழந்தைக்குத் தாயாக இருக்கும் பாக்கியம் பெற்ற லக்ஷ்மியும் நல்ல அழகிதான். அவள் கழுத்திலும் காதிலும் கையிலும் இருந்த நகைகள் ஆடைகள் எல்லாம் அவள் செல்வம் நிறைந்த குடும்பத்தில் வாழ்க்கைப் பட்டவள் என்பதை எடுத்துக் காட்டின.

வண்டி நகர்ந்தவுடன் அந்தக் குழந்தை கீழே நின்றவரைத் தன் கையால் சுட்டிக்காட்டி, ''மாமா—... மாமா!'' என்று சொல்லிக் கேள்வி கேட்கும் பாவனையில் தன் அம்மாவின் முகத்தைப் பார்த்தான். 'மாமா ஏன் வரவில்லை?' என்ற அர்த்தம் அந்தப் பார்வைக்கு இருக்கலாம். ''மாமா நாளைக்கு வருவார்'' என்று லக்ஷ்மி பதில் சொல்லிக் குழந்தையை ஒரு முத்தமிட்டாள்.

குழந்தையும் தாயும் சேர்ந்து அளித்த காட்சி அழகாக இருந்தது. அந்த வண்டியில் அமர்ந்திருந்த நான் குழந்தையைப் பார்த்துக் கொண்டே இருந்தேன்.

''ஏம்மா, ஆம்புளைத் துணை யாரும் இல்லையா?'' என்று ஒரு கேள்வி புறப்பட்டது. அவர்களுக்கு எதிரே குழந்தையோடு உட்கார்ந்திருந்த பெண்தான் அந்தக் கேள்வியைக் கேட்டாள்.

''நாலு ஸ்டேஷனுக்கு அப்புறம் எறங்கப் போறோம், அதுக்குப் புருஷாள் துணை எதுக்கு? ஸ்டேஷனுக்கு ஐயர் வந்திருப்பார்'' என்று வயசு முதிர்ந்த பெண்மணி பதிலுரைத்தாள்.

''எந்த ஊருக்குப் போவணும்?'' என்று மறுபடியும் கேள்வி வந்தது.

''நாங்களா? எலமனூருக்குப் போகணும்.''

"அப்புறம் கோட்டைக்கு எத்தனை டேசன் இருக்குது?" என்று கேள்வியினால் அந்தப் பெண் தான் திருச்சிராப்பள்ளிக் கோட்டைக்குப் போவதைத் தெரிவித்துக் கொண்டாள்.

"இந்தக் கொளந்தைக்கு என்ன வயசு ஆவுது?"

"ரெண்டு ரொம்பி மூணாவது நடக்கிறது" என்று லட்சுமி பதில் சொன்னாள்

இந்தச் சம்பாஷணையில் என்னை அறியாமல் நான் ஈடுபட்டேன். ராஜாவைக் கவனித்து அவன் உருவத்தில் ஆழ்ந்திருந்த என் கண்கள் எதிர்ப் பலகையிலிருந்த தாயிடமும் குழந்தையிடமும் சென்றன; கோட்டைக்குப் போகும் அந்தப் பெண்ணும் அவள் தன் அருகில் உட்கார்த்தி வைத்திருந்த குழந்தையும் எதிரே உள்ளவர்களுக்கு நேர் மாறான காட்சியை அளித்தனர். அவள் வறுமை நிலைக்கு ஒரு சித்திரமாக இருந்தாள். அவள் குழந்தையோ தரித்திர நாராயணனது குட்டி அவதாரமாகத் தோன்றியது. கை கால்கள் சூம்பிக் கிடந்தன; வயிறு முன்னுக்கு வந்து இருந்தது. பிறந்த மேனியோடு அரையில் அழுக்குப் படிந்த அரைநாண் கயிற்றையன்றி வேறு ஆடையோ ஆபரணமோ அந்த உடம்பில் இல்லை. அரைநாண் கயிற்றில் ஒரு வெள்ளி நாய்க் காசும் இரண்டு புங்கங் காய்களும் கோத்துத் தொங்கின. கழுத்திலே ஒரு முடிகயிறு அந்தக் குழந்தைக்கு ஏதோ நோயென்பதையும், நோயை நீக்க அந்த ஏழைப் பெண் தெய்வத்தையும் மந்திரத்தையுமே நம்பினாளென் பதையும் விளக்கியது.

"கொளந்தைக்கு என்ன உடம்பு?" என்று ராஜாவின் பாட்டி - லட்சுமியின் தாய் - கேட்டாள். அவள் குரலில் இரக்கம் தொனித்தது.

"தோசம் தாக்கி இருக்குதாம். பூசாரி முடி கயிறு போட்டிருக்கிறார்" என்று வருத்தத்தோடு சொல்லி விட்டு, தன் ஆசையெல்லாம் சேர்த்து அந்தக் குழந்தையைப் பக்கத்திலே நெருக்கி வைத்துக் கொண்டு அதன் முதுகைத் தடவிக் கொடுத்தாள் தாய். மேலெல்லாம் அழுக்கு படிந்து எண்ணெய் காணாத தலையும், இன்பங்

காணாத வயிறுமுடைய அந்தக் குழந்தை மிகவும் சாதுவாக உட்கார்ந்திருந்தது.

இரண்டு தாய்மார்களும் என்ன என்னவோ பேசிக் கொண்டிருந்த போது இரண்டு குழந்தைகளும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டன. ராஜா சட்டென்று திரும்பிப் பார்த்து, ''பாப்பா, அதோ பாப்பா'' என்று எதிரேயுள்ள குழந்தையைக் காட்டினான்.

அந்த வார்த்தையைக் கேட்ட அந்தப் பேதைக் குழந்தை தன் தாயின் முகத்தை ஆவலோடு பார்த்தது. அவள் முகத்தில் சந்தோஷம் நிரம்பிக் காட்டியது ; ''சின்ன ஐயரு!'' என்று தன் குழந்தைக்கு அவள் ராஜாவைப் பழக்கம் செய்து வைத்தாள்.

ராஜா ஒரு நிமிஷம் சும்மா இல்லை ; என்ன என்னவோ தன் மழலைச் சொற்களால் 'பொரிந்து' கொண்டிருந்தான். எல்லாரும் கேட்டுக் கேட்டுச் சிரித்தார்கள். அப்பொழுது எல்லாம் லக்ஷ்மிக்கு உண்டான மனத்திருப்தி இவ்வளவு அவ்வளவென்று சொல்ல முடியாது. நடு நடுவே தன்னுடைய சந்தோஷம் எல்லையை மீறி விட்டால், 'போக்கிரி!' என்று மெல்ல அவன் கன்னத்தில் ஒரு தட்டுத் தட்டுவாள்.

பாட்டி தன் கையிலுள்ள பையிலிருந்து ஒரு பிஸ்கெட் எடுத்து ராஜா கையில் கொடுத்தாள். அவன் அதை வாயில் வைத்துக் கடித்தான். எதிரே உட்கார்ந்திருந்த குழந்தை அங்கலாய்ப்போடு அதைப் பார்த்தது. அந்த அம்மாளுக்குப் பந்தி வஞ்சனை செய்வது பாவமென்று தெரியவில்லை. ராஜா அதில் பாதி கடித்து விட்டு மற்றும் ஒரு பாதியை ஏழைக் குழந்தையிடம் நீட்டினான். அக்குழந்தை அதைக் கை நீட்டி வாங்க முயன்றது. விழுந்து விடுமோ என்ற பயத்தால் அதன் தாய் அதை வாங்கித் தன் குழந்தைக்குக் கொடுத்தாள். அதுவரையும் கண்டறியாத ருசியை அது அனுபவித்துக் கொண்டிருந்தது.

இன்னும் ஒரு பிஸ்கோத்தைப் பாட்டி பேரனுக்குக் கொடுத்தாள். அதையும் அவன் பாதி கடித்து மற்றொரு

பாதியை நீட்டினான். ஆனால் இப்போது எதிரே இருந்த ஏழைப் பெண் அதைப் பெற்றுக் கொள்ளவில்லை.

"போதும் சாமி, நீ தின்னு. இவனுக்குப் பிஸ்கோத்து வாணாம்; எங்கிட்டே வடை இருக்குது. தாறேன்" என்று சொன்னாள். பிஸ்கோத்துத் தின்னும் அந்தஸ்து தன் குழந்தைக்கு இல்லையென்று அவள் நினைத்தாள் போலும்!

"போருண்டா, நீ தின்னுடா; அப்புறம் தானம் பண்ணலாம்" என்று லக்ஷ்மி சிறிது அதட்டிச் சொன்னாள். முதல் தடவை தயா தாக்ஷிண்யத்திற்காக அவள் ஒரு பிஸ்கோத்துத் துண்ட தானத்தை அனுமதித்து விட்டாள். மறுபடியும் தானம் பண்ணினால் அவள் பொறுப்பாளா?

அவள் சொன்ன வார்த்தைகள் பக்கத்தில் இருந்தவர் களுக்கு அவளது ஆணவத்தைக் காட்டின. அது வரையில் அவர்களை முக மலர்ச்சியோடு கவனித்தவர் களுடைய முகத்தில் லேசாக ஒரு அருவருப்புக் குறிப்புப் படர்ந்தது. இதை லட்சுமி எப்படியோ உணர்ந்து கொண்டு விட்டாள்.

"டாக்டர், குழந்தைக்கு இந்த பிஸ்கோத்துதான் தர வேணும்னு சொல்லியிருக்கார். கோட்டையிலிருந்து இவப்பா வாங்கிண்டு வந்தா" என்று தன் செயலுக்குச் சமாதானம் சொல்லுபவளைப் போல அவள் கூறினாள்.

அந்த ஏழைப் பெண்ணோ தன் குழந்தை ஒரு முறை பெற்ற தானத்தையே பெரிதாக எண்ணி களிப்புற் றிருந்தாள். பின்னும் கொடுக்கவில்லையே என்ற குறை கடுகளவும் அவளுக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

பிஸ்கோத்துத் துண்டைக் கொஞ்சங் கொஞ்சமாகக் குழந்தை மென்று தின்று விட்டது. அப்பொழுது ராஜா இரண்டாவது பிஸ்கோத்தைத் தின்று சுவைத்துக் கொண்டிருந்தான். வெறும் வாயை மென்று கொண்டிருந்த ஏழைக் குழந்தை, "அம்மா! எனக்கு" என்று மெல்லச் சிணுங்கத் தொடங்கியது.

"ருசி கண்ட பூனையைப் பாத்தாயா அம்மா" என்று குறும்புப் பார்வையோடு தன் தாயிடம் லட்சுமி கேட்டாள்.

அந்த அம்மாள் ஒன்றும் சொல்லவே இல்லை.

குழந்தையின் முனகல் பலத்தது; ''அது வேணாந் தம்பி; சின்ன ஐயரு திங்கட்டும்'' என்று தாய் சொல்வது அதன் காதில் விழவில்லை. அழுகைக்கு ஆரம்பம் செய்தது. ''அடிச்சுடுவேன்'' என்று பயமுறுத்தினாள். அது கேட்க வில்லை. வேறு வழி இல்லாமல் தான் வைத்திருந்த சிறு துணி மூட்டையை அவிழ்த்து அதில் ஒரு மூலையில் முடிந் திருந்த வடை ஒன்றை எடுத்துக் குழந்தை கையில் கொடுத்தாள். குழந்தை இரண்டு கையாலும் அதை வாங்கிக் கொண்டு கடிக்கத் தொடங்கியது. ஆரம்பஞ் செய்த அழுகை பிறகு தலை காட்டவில்லை.

ராஜா பிஸ்கோத்தை முக்கால்வாசி தின்றுவிட்டான். ஒரு சிறிய துண்டு கையில் இருந்தது. தன்னுடைய அபிமானத்துக்குப் பாத்திரனான ஏழைக்குக் கொடுப்பதற் கில்லையே என்ற எண்ணமோ என்னவோ, அவன் அடிக் கடி அம்மாவின் முகத்தைக் கையால் திருப்பித் திருப்பி ''பாப்பா, பாப்பா, அப்பிச்சி'' என்று சொல்லிக் கொண்டே இருந்தான். அந்தப் பாப்பா முனகத் தொடங்கியதும் அவனுடைய அநுதாபம் அதிகமாகி விட்டது.

''பாட்டீ! பாப்பா'' என்று தன் பாட்டியைப் பார்த்து; என்னவோ சொல்ல வந்தான். ''பாப்பாக்கு ஆண்டாமாம் நீ தின்னு'' என்று தன் அபிப்பிராயத்தைப் பாட்டி வெளிப் படுத்தினாள்.

''ஆண்டாம்?'' என்று ஒரு கேள்விக் குரலோடு ராஜா கேட்டு விட்டுத் தன் குட்டிச் சிநேகிதனையும் அவன் அம்மாவையும் மாறி மாறிப் பார்த்தான். பாட்டி சொன்ன வார்த்தைகளில் எவ்வளவு உண்மை என்று தெரிந்து கொள்ள அவன் விரும்பியிருக்கலாம். ஆனால் அவன் பார்வைப் பாஷையை அர்த்தம் செய்து கொள்ள அவர்களுக்குச் சக்தியும் இல்லை; மனசும் இல்லை.

ஏழைக் குழந்தை வடையைக் கடித்து ருசி பார்க்க ஆரம்பித்தவுடன் ஒருவிதமாக இந்தச் சிக்கல் தீர்ந்து

விட்டதாகத் தோற்றியது. உண்மையில் அப்படி நேரவில்லை. புயல் வேறு பக்கம் திரும்பி விட்டது.

ராஜா தன் கையில் இருந்த சிறு பிஸ்கோத்துக் துண்டை வாயில் போட்டு விழுங்கி விட்டுத் தன் தோழன் பக்கம் கையை நீட்டி, ''தா'' என்ற போது எங்களுக் கெல்லாம் தூக்கி வாரிப் போட்டது. கொடுத்து வாங்கும் ஸமரஸ குணத்தைக் கடவுள், மனிதர்களுக்கு இயல்பாகவே அமைத்திருக்கிறார் போலும்!

''சீ கழுதை! அது ஒனக்கு ஆண்டாம்'' என்று லக்ஷ்மி அந்தச் சிறு கையை இழுத்துக் கொண்டாள். ராஜா மறுபடியும் கையை நீட்டி, ''தா'' என்றான். ஏழைத் தோழக் குழந்தை தன் தாயின் முகத்தைப் பார்த்தது. ''கொடுக்கலாமா?'' என்று தான் அதன் உள்ளத்தில் கேள்வி எழுந்திருக்க வேண்டும்.

''உனக்கு வாணாம், சாமி'' என்று எதிரே இருந்த பெண் ராஜாவுக்குச் சொன்னாள்.

அவன் கேட்கவில்லை; ''அப்பிச்சி தா'' என்று மட்டும் அந்தக் குழந்தையிடம் கை நீட்டினான். இப்போது அவன் குரலில் பிடிவாதம் ஏறியது.

''அது ஆய்; ஆண்டாம்! இந்தா பிஸ்கோத்து'' என்று பாட்டி மற்றொரு பிஸ்கோத்தை எடுத்து அவன் கையில் கொடுத்தாள்.

ராஜா அதை வாங்கி வீசி எறிந்து விட்டு, ''பாப்பா, அப்பிச்சி தா'' என்ற பல்லவியை ஆரம்பித்து விட்டான். லக்ஷ்மிக்குக் கோபம் கோபமாக வந்தது.

முதலில், ராஜா கடித்துத் தந்த பிஸ்கோத்தை அவன் தோழக் குழந்தை எவ்வளவு ஆவலாக வாங்கிக் கொண்டது! அதன் தாய் எவ்வளவு பூரிப்படைந்தாள்! இப்போது மாத்திரம் இந்த முரண்டுபாடு எதற்கு? - என் சிந்தனை சுழன்றது.

ராஜா அழுகைக்கு அடியிட்டான். லக்ஷ்மி நல்ல வார்த்தை சொன்னாள்; மிரட்டினாள். பாட்டி என்ன என்னவோ சொன்னாள். எதிரே இருந்த பெண்ணும்

சமாதானம் சொன்னாள். அவை யெல்லாம் ராஜாவுக்குப் புரியவே இல்லை. வீரிட்டு அழத் தொடங்கினான்.

லக்ஷ்மிக்குக் கோபம் அதிகமாயிற்று. ராஜாவைக் கொண்டு பெருமிதத்தோடு அதுகாறும் கம்பீரமாக வீற்றிருந்த அவளுக்கு இப்போது இன்னது செய்வதென்றே தெரியவில்லை. அந்த வடையை வாங்கித் தருவதா? - அவள் உடம்பு முழுவதும் அருவருப்பால் குலுங்கிற்று.

''தரித்திரம்! இங்கே எங்கே சனியன் மாதிரி வந்து தொலைஞ்சுது?''-அவளிடமிருந்து கோபத்தில் வெளி வந்த இந்தச் சொற்கள் ராஜாவைக் குறித்தவை அல்ல. எதிரே இருந்த ஏழை உருவங்களைச் சொன்னவை.

யார் முதலில் இருந்தார்கள்? யார் பின்னே வந்தார்கள்? யார் இதற்குக் காரணம்!-இந்த விசாரணைக்கு எதிரே லக்ஷ்மியின் நியாயம் தலைகாட்ட முடியுமா?''

''பீடை! குழந்தையைக் கலக மூட்டி விட வந்து ஒக்காந்திருக்கு. நாசமாய்ப் போக!

ஏழைத் தாயின் இருதயம் படபடத்தது. ''என்ன அம்மா சொல்றீங்க? யார் குத்தம்? என் கொளந்தை என்னம்மா செஞ்சுது?'' என்று அவள் வாயெடுப்பதற்கு முன் லட்சுமிக்கு ஆத்திரம் தலைகால் தெரியாமல் வந்து விட்டது. ''சீ நாயே, உன்னை இங்கே யாருடீ உட்காரச் சொன்னது? பேச வந்துட்டயே: எங்கயாவது கண் காணாமெத் தொலையறது தானே!'' என்று அகங்காரமும் ஆங்காரமும் கலந்து பொழியும் வசை மாரியிலே இறங்கி விட்டாள்.

இந்தக் கூச்சலில் ராஜா அழுகை ஓய வில்லை. அழுது அழுது முகம் சிவந்து விட்டது. ஏக இரைச்சல். பாவம்! ஏழைத் தாய் வாய் கொடுக்காமல் பேசாமல் இருந்து விட்டாள். பக்கத்தில் இருந்தவர்கள் சமாதானம் பேசியும் கண்டித்தும் லக்ஷ்மியை அடக்கினார்கள். ராஜாவை அடக்க ஒருவருக்கும் வழி தெரியவில்லை. இவ்வளவுக்கும் காரணமான அந்த ஊசல் வடை ஏழைக் குழந்தையின் வயிற்றுக்குள் போய் ஜீரணங்கூட ஆகியிருக்கும். ராஜாவோ விம்மி விம்மி அழுது கொண்டே இருந்தான்.

வண்டிக்குள் நிகழ்ந்தவற்றைக் காணப் பொறுக்காமல் உட்கார்ந்திருந்தேன். குளித்தலை ஸ்டேஷன் வந்தது. ஒருவன் வாழைப் பழம் விற்றுக் கொண்டு வந்தான். அப்போது எனக்கு ஒரு யோசனை தோன்றியது. அவனைக் கூப்பிட்டு நான் இரண்டு பழம் வாங்கினேன். ஒன்றை ஏழைக் குழந்தையின் கையிலே கொடுத்து ராஜாவைப் பார்த்து, ''வாங்கிக்கோ'' என்றேன். என்ன ஆச்சரியம்! அவன் ஒரே துள்ளலாகத் துள்ளி அதைத் தன் தோழன் கையிலிருந்து வாங்கிக் கொண்டான். அந்தக் குழந்தையும் மிகவும் ஆசையோடு நீட்டியது; உடனே அதன் கையில் மற்றொரு பழத்தைக் கொடுத்து விட்டுத் திரும்பி, ''ராஜா அதைத் தின்னட்டும், அம்மா!'' என்று லட்சுமியிடம் விண்ணப்பித்துக் கொண்டேன்.

ராஜா அழுகை இருந்தவிடமே தெரியவில்லை. வாழைப் பழத்தைப் பாட்டியிடம் காட்டி, ''பாப்பா, பயம்'' என்று சொல்லித் தின்னலானான். எதிர்ப் பலகையில் தன் உள்ளத்தே குமுறும் எண்ணங்களைப் பேச்சாலோ செய்கையாலோ காட்டச் சக்தியில்லாத ஏழைக் குழந்தையும் பரம சந்தோஷத்தோடு பழத்தை ருசி பார்க்கத் தொடங்கியது.

அப்போது இன்னதென்று சொல்லத் தெரியாத சங்கடத்தால் கலங்கியிருந்த அந்தக் குழந்தையின் தாய் ராஜாவையும் தன் குழந்தையையும் பார்த்து ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

அஹிம்சை

''இந்த வாகனம் அதியாச்சரியமானதா யிருக்கிறதே! வாயுவேகம், மனோவேகமென்றெல்லாம் உபசாரமாக

சொல்லுவார்களே, அந்த வார்த்தை நிஜந்தான் போல் இருக்கிறதே?'' என்றார் தாத்தா.

அவரை நான் வேறு எப்படிச் சொல்வது? எனக்குப் பாட்டனாரல்ல, பாட்டனாருக்குப் பாட்டனாருக்குப் பாட்டனார் இருந்தாரே ...... அவருக்கும் முந்தினவர். கிறிஸ்து பகவான் திருஅவதாரம் செய்து ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் கழித்து அவதரித்தவர் அவர்! ''அஹிம்சா பரமோ தர்ம:'' என்ற வேத வாக்கியத்தை ஒவ்வொரு மூச்சிலும் கலந்து வாழ்ந்தவர். நான் இருபத்தைந்தாவது நூற்றாண்டில், அதாவது அந்தத் தாத்தாவுக்கு அப்புறம் ஆயிரம் வருஷங்களுக்குப் பின் வாழ்பவன். அவருக்குத் தெரிந்தது எனக்குத் தெரியாது; எனக்குத் தெரிந்தது அவருக்குத் தெரியாது.

''இது எப்படியப்பா ஓடுகிறது? மாடு இல்லை, குதிரை இல்லை. சக்கரம் உருளுவதுகூடத் தெரியவில்லை. துளி கூடச் சத்தம் இல்லை. எப்படி இது இவ்வளவு வேகமாக ஓடுகிறது?''

அவர் இப்படிக் கேட்பது சிறிது பரிகாசமாகக் கூடப் பட்டது. வான வெளியில் தட்டாரப் பூச்சியைப் போலப் பறக்கும் ஆகாய விமானங்களையே எங்கும் பார்க்கும் என் காலத்தில் இந்தக் கர்நாடக மரவட்டையை, காரென்று சொல்லுகிற பொம்மை வண்டியை, நான் வைத்துக் கொண்டு ஓட்டுவது எனக்கே வெட்கமாக இருக்கிறது. அதை அந்தத் தாத்தா குத்திக் காட்டும்போது நான் தலை குனிந்து கொண்டேன். பிறகுதான் தெரிந்தது, அவர் ஒன்றும் விகற்பமாக எண்ணவில்லை என்று.

''ஜலத்தினால்தான் ஓடுகிறது. முன் காலத்தில் ஒரு விதமான எண்ணெயால் ஓட்டினார்களாம். இப்போது ஜலமே போதுமானதா யிருக்கிறது'' என்றேன்.

என் பக்கத்தில் தாத்தா உட்கார்ந்திருந்தார். அவர் காரின் வேகத்தை பூரணமாக அனுபவித்தார். நடு நடுவே சில வார்த்தைகளைப் பேசினார்.

''அப்படியானால் இந்தக் காலத்தில் மாட்டு வண்டி, குதிரை வண்டி ஒன்றும் இல்லையா?''

''அதென்ன அது? மாட்டு வண்டியென்றால்! மாடு ஓடுமா?''

அவர் இடி இடியென்று சிரித்தார். ''நீங்களெல்லாம் தர்மாத்மாக்கள். மாட்டு வண்டியென்றால் இன்னதென்று தெரியாத புண்ணியசாலிகள்'' என்று ஸ்தோத்திரம் செய்தார்.

''மாட்டை வண்டியில் கட்டி ஓட்டுவது எங்கள் காலத்து ஸம்பிரதாயம். குதிரையையும் கட்டி ஓட்டுவது வழக்கம். மாட்டு வண்டியைவிடக் குதிரை வண்டி வேகமாகப் போகும்.''

''அப்படியா! மணிக்கு நூறு மைல் போகுமா?''

''மைலென்றால் என்ன?''

ஒருவிதமாகத் தாத்தா புரிந்துகொள்ளும் படி விளக்கினேன்.

''நூறு மைலா! மணிக்கு இருபது மைல் போனால் உயர்ந்த ஜாதிக் குதிரை என்பார்கள்.''

''பூ! இவ்வளவுதானா?''

''அது கிடக்கட்டும். நான் அந்த வண்டிகளிலேயே ஏறி அறியேன்.''

''ஏனோ?''

''அது மகா பாபமல்லவா? அஹிம்சைக்கு விரோத மல்லவா? மாட்டின் கழுத்தில் நுகத்தடியைப் பூட்டிப் பாரம் இழுக்க வைப்பது எவ்வளவு கொடுமை! எங்கேயாவது ஸ்தல யாத்திரைக்குப் போகிறோமென்று வைத்துக் கொள். அங்கே போய்ப் புண்ணியத்தைக் கட்டிக் கொள்வதற்கு முன்னே, இந்த வாயில்லாப் பிராணியை வதைக்கும் பாவத்துக்கல்லவா ஆளாக வேண்டும்? சிவ சிவா! அதுவும் சில வண்டிக்காரர்கள் ஈவு இரக்கமில்லாமல் சவுக்கையும் தார்க் குச்சியையும் பிரயோகம் செய்யும் போது பார்த்து விட்டால், கண்ணைக் குத்திக் கொள்ள வேண்டுமென்று தான் தோன்றும். இப்போதும் நினைத்தாலும் உடம்பு

நடுங்குகிறது. குதிரைகளைத்தான் கொஞ்சம் பாடுபடுத்தி வைத்தார்களா? நல்ல வேளை, இந்த இம்சையான காரியங்களெல்லாம் உன் காலத்தில் இல்லையென்பதை உணரும்போது எனக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது தெரியுமா?''

''உங்கள் காலத்தில் ஆகாசத்தில் பறக்கும் விமானம் இல்லையா?''

''கதைகளில் தான் கேட்டிருக்கிறோம். புஷ்பக விமானமென்று சொல்வார்கள். அதெல்லாம் கிடக்கட்டு மப்பா! இந்த வாயில்லாப் பிராணிகளுக்கு விடுதலை கிடைத்ததே! இந்தப் புண்ணியம் உங்கள் தலைமுறையைக் காப்பாற்றும். என்ன என்னவோ தர்மங்களைச் செய்கிறார்கள். அஹிம்சையைக் காட்டிலும் ஒரு தர்மம் உண்டா?''

''இப்படித்தான் பல வருஷங்களுக்கு முன் காந்தி என்ற ஒருவர் சொல்லிக் கொண்டிருந்தாராம்.''

''வேதமே கோஷிக்கிறதே. என் காலத்தில் ஸந்நியாசிகள் வண்டியேற மாட்டார்கள். சில பெரியவர் களும் ஏற மாட்டார்கள். என்னுடைய கல்யாணத்தில் ஒரு பல்லக்கு ஏற்பாடு செய்தார்கள். இரண்டு மாடுகள் கட்டி இழுக்கத் திட்டம் போட்டிருந்தார்கள். நான் சிவ பூஜை செய்பவன். 'சிவபெருமான் வாகனமாகிய ரிஷபதேவரின் சந்ததியை வருத்தி நாம் ஊர் வலம் போவதா?' என்ற நினைவால் அதில் ஏற மறுத்து விட்டேன். இந்த மாதிரி ஒரு வாகனம் கிடைத்திருந்தால் எவ்வளவு சுகமாக ஊர்வலம் போயிருப்பேன்!''

நகரத்தின் பிரதான வீதியில் கார் போய்க் கொண்டி ருந்தது. தென்றல் காற்று, சுகமாக வீசியது. ''என்ன சுகம்! அஹிம்சைக்கு அஹிம்சை, சுகத்துக்குச் சுகம்!'' என்று தாத்தா சொல்லி வாய் மூடவில்லை; சதக்கென்ற ஒரு சத்தம், கீச் என்ற அழுகுரல்-இரண்டும் ஒரு விபத்து நேர்ந்து விட்டதைக் குறித்தன. வண்டியை நிறுத்தினேன்.

''என்ன அது?'' என்று கிழவர் கேட்டார்.

"ஒரு சம்பவம்" என்று சொல்லி என் காரில் அடிபட்டு மண்டையுடைந்த ஒருவனை எடுத்து வண்டியில் போட்டுக் கொண்டு நேரே ஆஸ்பத்திரிக்கு ஓட்டினேன்.

"என்ன அப்பா இது? இவனுக்கு என்ன?" என்று நடு நடுங்கிக் கொண்டே விசாரித்தார் அந்த அஹிம்சை விரதி.

"வண்டியில் அடிபட்டான்" என்றேன்.

"ஐயோ! கொலையா! நீயா கொன்று விட்டாய்?"

"பேசாமல் இருங்கள்! கொலையும் இல்லை, கிலையும் இல்லை."

"என்னடா இது? மகா பாபி! என் கண்முன்னே இவனைக் கொன்று விட்டு இல்லையென்று சாதிக்கிறாயே!"

ஆஸ்பத்திரிக்குப் போய் அடிபட்டவனை விட்டு விட்டு நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் விஷயத்தைச் சொல்லி விட்டு வீட்டுக்கு வந்தேன். அதற்குள் அந்தக் கிழவர் தவித்த தவிப்புக்குக் கணக்கில்லை.

"அட பாவி! கொலைகாரா! சண்டாளா!" என்று வைதார். "அவன் செத்துப் போய் விட்டானா?" என்று மகா துக்கத்தோடு கேட்பார். "கொலைக் குற்றம் செய்த உனக்கு மரண தண்டனையல்லவா கிடைக்கும்?" என்று பயமுறுத்துவார். நான் எல்லாவற்றையும் புன்சிரிப்போடு கேட்டுக் கொண்டே இருந்தேன்.

"அடிபட்டவன் இறந்து விட்டான்" என்று ஆஸ்பத்திரியிலிருந்து தகவல் வந்தது. "நன்றாக வேண்டும்; வேறு வழி இருக்கும்போது ரோட்டு விதியை மீறினால் இது தான் கிடைக்கும்" என்று சர்வ சாதாரணமாக நான் சொன்னேன்.

"அடே கொலைகாரப் பாவி! கொன்றது கொன்று விட்டு அந்த அப்பாவியைக் குறை சொல்லுகிறாயே! இது தெய்வத்துக்கு அடுக்குமா?" என்று புலம்பினார் தாத்தா.

அரை மணி நேரத்தில் நான் கோர்ட்டுக்குப் போய் வந்தேன். நான் வரும் வரையில் எனக்கு என்ன ஆகுமோ என்று பயந்து கொண்டே ஆவலாகக் காத்திருந்தார்

தாத்தா. என்ன இருந்தாலும் நான் அவர் சந்ததி அல்லவா?

''நீ எப்படித் தப்பி வந்தாய்?'' என்று படபடப்போடு கேட்டார் தாத்தா.

''தப்புவதா? நான் என்ன செய்தேன்?''

''நீதிபதி இந்தக் குற்றத்திற்காக உன்னைத் தண்டிக்கவில்லையா?''

நான் சிரித்தேன்; ''குற்றமா? குற்றம் செய்தவன் தான் உடனே தண்டனையை அடைந்தானே? ரோட்டு விதியை மீறினதால் நேர்ந்த சம்பவமென்று நீதிபதி தீர்ப்புக் கூறி விட்டார்.''

''அட பாபிகளா!'' என்று கிழவர் மூர்ச்சையாகிப் படீரென்று கீழே விழுந்தார்.

விழித்துக் கொண்டேன். 1942-ஆம் வருஷத்தில் நான் இருந்தேன். என் கையில் பெரிய புராணம் இருந்தது. அதில் மனுநீதிச் சோழன் கதையைப் படித்தபடியே நான் தூங்கி விட்டேனென்பது தெரிய வந்தது.

தபால் மூலம்

''உங்களுக்கு நாக்கு இருக்கிறதா? அப்படியானால் நாலு பேருக்கு நடுவில் நன்றாகப் பேசுவீர்களா? ஒரு சபையிலே பேசத் தைரியம் உண்டா? இல்லையானால் நாக்கு இருந்து பிரயோசனந்தான் என்ன? உடனே எங்களுக்கு எழுதுங்கள்; தபால் மூலமாகப் பேச்சு வன்மையை உங்களுக்குக் கற்பிக்கிறோம்.''

இப்படி, ஒரு நாள் 'தினமித்திரன்' பத்திரிகையிலே விளம்பரம் ஒன்று வந்திருந்தது; எஸ். எஸ். எல். சி.

படித்து விட்டு வேலை ஒன்றுமில்லாமல் பொழுது போக்கிக் கொண்டிருந்தேன். என்னுடைய குடும்ப நிலை, உத்தியோகத்தை எதிர்பார்க்கும்படி என்னை வைக்கவில்லை. பொழுது போவதற்காக நாள் தோறும் 'ரீடிங் ரூமி'ல் சென்று தினசரிப் பத்திரிகைகளைப் பார்ப்பேன். சமாசாரங்களில் எனக்குக் கவலையில்லை; விளம்பரங்களில் ஒன்று விடாமற் படிப்பேன். 'தேவை' என்ற தலைப்பின் கீழ் வருபவைகளில் எனக்கு அதிகக் கருத்து. பெண்ணுக்குப் புருஷன், ஆபீஸுக்குக் குமாஸ்தா, பள்ளிக்கூடத்துக்கு உபாத்தியாயர், மருந்துக்கு வியாதியஸ்தர், ஏமாற்றுபவர்களுக்கு ஏமாறுபவர் — இவ்வாறு தேவை வகைகளைத் தான் பார்த்துப் பார்த்து அலுத்துப் போயிருக்கிறேன். பேச்சுவன்மை ஒரு கலையென்பதை நான் அறிவேன். பேச்சு வன்மை ராஜாங்கத்தையே ஆளும். காங்கிரஸ் காரரைப் பாருங்களேன். கிராமங்களில் எல்லாம் காந்தி ஸமாச்சாரத்தைப் பரப்பிப் பரப்பி இப்போது ராஜாங்கக் கோட்டையை அல்லவா பிடித்துக் கொண்டார்கள்? அவர்களிடம் இருக்கும் ஆயுதம் பேச்சு வன்மையேயல்லவா?

சபையிலே பேசுவதைக் கற்றுக் கொடுப்பதாக வந்த விளம்பரத்தைக் கண்ட அன்றே, "பேச்சு வன்மை நிலையம், மதுரை' என்ற விலாஸத்திற்கு எழுதிப் போட்டேன். இரண்டு நாள் கழித்து ஒரு கற்றை விளம்பரங்களும் அறிக்கைகளும் வந்தன. பேச்சு வன்மையிலே யாருக்கும் மோகம் வரும்படி அவ்வளவு ரஞ்சகமாக அந்த விளம்பரங்கள் இருந்தன. அவற்றைத் தயாரித்தவர்களுடைய எழுத்து வன்மையை நான் வியந்து கொண்டாடினேன்.

"பேச்சுதான் மனிதனிடமுள்ள உயர்ந்த சொத்து. மாடு பேசுகிறதா? சிங்கம் பேசுகிறதா? பிரம்மாண்டமான ஸ்வரூபத்தையுடைய யானைதான் பேசுகிறதா? மனிதன் அல்லவா பேசுகிறான்? அந்தப் பேச்சு அவனுக்கு உயர்வைக் கொடுக்கிறது. பேச்சினால்தானே பாஷை உண்டாயிற்று? காவியங்கள் உண்டாயின?"

இப்படி ஓர் அத்தியாயம், மனிதனுடைய வாக்கின் விசேஷத்தைப் பாராட்டி இருந்தது.

சபைக் கோழையாக இருப்பதைவிட ஒரு சிறையிலே இருந்து விடலாம். நம்முடைய மனசிலே தோன்றுகிற எண்ணங்களை எடுத்துச் சொல்லத் தெரியாமல் இருப்பதைப் போன்ற பலகீனம் வேறு இல்லை. நமக்கு நாக்கை முரடாகவா வைத்திருக்கிறார் கடவுள்? எவ்வளவு லாவகமாக வைத்திருக்கிறார்? நம்முடைய பாஷையிலே தான் ஏதாவது 'சொட்டு'ச் சொல்ல முடியுமா? 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்குங் காணோம்' என்று தேசிய கவி முழக்குவதை யார் அறியார்?''

இவ்வாறு பிரசங்கத்தைப் பற்றியும் தமிழ் மொழியின் பிரபாவத்தைப் பற்றியும் ஓர் அத்தியாயம் இருந்தது.

''உங்களுக்குப் பேச வராதென்று தானே பயப்படு கிறீர்கள்? நீங்கள் வீட்டிலே உங்கள் மனைவி மக்களுடன் பேச வில்லையா; நண்பர்களுடன் பேசவில்லையா? வம்பளக்க வில்லையா? அதே மாதிரியானதுதான் சபையிலே பேசுவதும். உங்களுக்குப் பேசுகிற சக்தி நிறைய இருக்கிறது. அந்தச் சக்தியைச் சரியான வழியிலே திருப்ப வேண்டும். அவ்வளவுதான். அதற்கு ஏற்ற வழி எங்களுக்குத் தெரியும்.

இந்த மாதிரி யாவர்க்கும் அபயப்பிரதானம் செய்யும் அத்தியாயம் அடுத்தபடி இருந்தது.

''தபாலிலே என்ன சொல்லிக் கொடுக்க முடியுமென்று யோசிக்காதீர்கள். இப்போது தபால் மூலம் நடக்காத காரியம் என்ன இருக்கிறது? வீணாக வேலையையும் காலத்தையும் கெடுத்துக் கொண்டு படிப்பதில் லாபம் இல்லை. எங்களிடம் நேரே கற்றுக் கொள்பவர்களைவிடத் தபால் மூலம் கற்றுக் கொள்பவர்களே அதிக பலனை அடைவார்கள்.''

இங்ஙனம் தற்புகழ்ச்சிப் படலம் அடுத்தபடி வந்தது. எல்லாம் படித்துப் பார்த்தேன். 'நாமும் பேச்சு வன்மையை

அடையத்தான் வேண்டும்' என்று நிச்சயித்துக் கொண்டேன்! அதற்கு வேண்டிய ஸம்ஸ்காரங்கள் ஆயின.

ஃ ஃ ஃ

இந்த ஒரு வருஷத்திலே பேச்சு வன்மையைப் பற்றி எனக்குச் சரியாக 32—பாடங்கள் தபால் மூலம் அனுப்பப் பட்டன.

''பேசுபவர்கள் முதலில் பயத்தைப் போக்கிவிட வேண்டும். சபையைக் கண்டால் பயப்படக் கூடாது.

இந்த விஷயத்தைப் பற்றி இரண்டு பாடங்கள்.

''லளிதமான பாஷையில் உபமான உபமேயங்களோடு பேச வேண்டும், பெரும்பாலும் வீட்டிலே பழகுகிற சாமான்களையும், தினத்தோறு நம் கண்முன் நிகழும் நிகழ்ச்சிகளையும் உபமானமாக எடுத்துப் பேசவேண்டும்.''

இந்த விஷயத்தை விளக்குவன இரண்டு பாடங்கள்.

இன்ன இன்ன புஸ்தகங்களை வாசித்தால் அநுகூலம் உண்டாகுமென்று சொல்லி ஒரு பெரிய புஸ்தக ஜாபிதா எனக்கு அனுப்பப் பட்டது. அதில் ஆங்கிலத்திலே எழுதிய சில புஸ்தகங்களும், தமிழிலே எழுதிய பல புஸ்தகங்களும் காணப்பட்டன. தமிழ்ப் புஸ்தகங்களுக்குள் முக்கால் வரிசை, மதுரைப் பேச்சு வன்மை நிலயத் தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் குமார சங்கர நாவலரால் எழுதப் பட்டவை. அவற்றிற் சில புஸ்தகங்களின் பெயர் களை உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

(1) நாவின் உபயோகம் சாப்பிடுவதுதானா?
(2) சபாரஞ்சிதம்.
(3) நாவலர் காமதேனு.
(4) பிரசங்க சிந்தாமணி.
(5) உபந்யாஸ ரத்தினாகரம்.
(6) சொற்பொழிவுத் துணைவன்.
(7) விரிவுரை விளக்கம்.
(8) வாக்கு வன்மைக்கு வழி.

மேற்படி புஸ்தகங்களிலே சிலவற்றை வாங்கிப் படித்துப் பார்த்தேன்.

வருஷ முடிவில் பரீக்ஷை ஒன்று நடத்தப் பெறுமென்றும், அதிலே தேர்ச்சி பெறுபவர்களுக்கு நிலயத்தாரால் 'ஸர்ட்டிபிகேட்' வழங்கப்படுமென்றும் தெரிய வந்தது. நான் பள்ளிக்கூடத்தில் பரீக்ஷைகளுக்காக மொந்தையுருப் போட்டுப் பழகினவன். ஆகையால் இந்தப் பரீக்ஷைக்கு நான் பயப்படவில்லை.

பரீக்ஷையும் முடிந்தது. ஒரு மாதம் ஆயிற்று. எனக்கு ஒரு நாள் தபாலில் மிக அழகாக அச்சிடப் பெற்ற 'ஸர்ட்டிபிகேட்' ஒன்றும் கடிதம் ஒன்றும் வந்தன. அந்த 'ஸர்ட்டிபிகேட்'டைப் பார்த்தவுடன் எனக்கு உடம்பு பூரித்தது. கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்.

''அன்பார்ந்த ஐயா,

இன்று இதனுடன் எங்கள் நிலயத்தில் நடத்திய பரீக்ஷையில் தேர்ச்சி பெற்றதற்காகத் தங்களுக்குரிய 'ஸர்ட்டிபிகேட்'டை அனுப்பி இருக்கிறோம். இந்த வருஷத்தில் தாங்களே யாவரினும் முதல்வராக நிற்கிறீர்கள். ஏன்? இவ்வளவு வஷங்களாக எங்களிடம் கற்றுக் கொண்டவர்களில் தங்களைப் போன்ற அறிவாளிகளை நாங்கள் கண்டதில்லை. தாங்கள் இவ்வளவு சிறந்த அறிவாளி யென்பதை அறிந்து உவப்பதோடு அன்றி ஒரு வகையிலே பெருமையும் அடைகின்றோம். இவ்வளவு அறிவுள்ள நீங்கள் எங்கள் நிலயத்தின் தொடர்பில்லாமல் இருந்திருப்பின் உங்கள் அறிவு குடத்தில் உள்ள விளக்குப் போல் அல்லவோ இருந்திருக்கும்? உங்கள் அறிவை இப்போது நாங்கள் தீட்டிக் கூர்மைப் படுத்தி விட்டோம். இனிமேல் நீங்கள் பெரிய பிரசங்கியாகப் போகிறீர்கள் என்பதை முன்னதாகவே எதிர்பார்த்து அளவற்ற சந்தோஷத்தை அடைகிறோம்.

''இனி நீங்கள் எங்கேனும் பிரசங்கம் செய்யப் போனால் அப்பிரசங்க அறிவிப்பின் பிரதியொன்றை எங்களுக்கும் அனுப்பச் செய்தால் நாங்கள் உங்களுடைய அபிவிருத்தியை அறிந்து சந்தோஷிப்போம்.

பெற்ற தாய்க்கல்லவா பிள்ளையின் அருமை தெரியும்?

"தாங்கள் எங்கள் நிலையத்தினிடத்தில் என்றும் குன்றாத அன்புடையவர்களாக இருக்க வேண்டும். தங்களுடைய இளைய நண்பர்களையும் எங்களுக்கு அறிமுகப் படுத்தி வைக்க வேண்டும்.

"உங்கள் பேச்சு வன்மை மேன்மேலும் சிறந்து விளங்குவதாக!"

எனக்கு இந்தக் கடிதத்தைப் படிக்கும்போது உச்சி குளிர்ந்தது. "என்ன இருந்தாலும் பொறாமை இல்லாமல் ஓரறிஞர் மற்றோர் அறிவாளியை வியந்து பாராட்டுவது மிகவும் அபூர்வமான குணம்" என்று எனக்குள்ளே சொல்லிக் கொண்டேன்.

ஃ ஃ ஃ

சில வருஷங்கள் கடந்தன. நான் இப்போது ஒரு 'பணக்காரக் குடும்பத்தின் தலைவனாக இருக்கிறேன். ஸர்டிபிகேட்' எங்கள் வீட்டுச் சுவற்றிலே தொங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், பேசுவதென்றால் எனக்கு முள்ளை விழுங்குவது போல இருக்கும்.

ஒரு நாள் எங்கள் ஊரில் நடந்த மாகாநடொன்றில் கௌரவத்தை உத்தேசித்து என்னை வரவேற்புத் தலைவராகப் போட்டு விட்டார்கள். அச்சிட்ட வரவேற்புப் பத்திரம் ஒன்றை நான் வாசித்தேன். அப்பொழுது என் உடம்பு நடுங்கினதும், வேர்வையில் என் சட்டை நனைந்து போனதும், நடுவிலே என் நாக்கு சுருட்டியடித்ததும் எனக்கு 'ஸர்டிபிகேட்' தந்தவர்கள் கண்டிருந்தால் பேசாமல் அதை வாங்கிக் கிழித்துப் போட்டிருப்பார்கள்.

என்ன செய்வது? பேச்சு வன்மையைப் பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் எழுதத் தெரியும்; பேச வேண்டுமே அதுதான் பூஜ்யம்.

ஃ ஃ ஃ

இன்னும் சில வருஷங்களாயின. நான் இப்பொழுது ஒரு ஜில்லா போர்டு தலைவர் பதவியை வகித்தேன். ஒரு சமயம் மதுரையிலே நடைபெற்ற ஒரு சபைக்குத் தட்டுக்

கெட்டு என்னை அக்கிராசனாதிபதியாகப் போட்டு விட்டார்கள். நான் வகித்த ஜில்லா போர்டு தலைவர் பதவியை உத்தேசித்து இந்தக் கௌரவம் எனக்குக் கொடுக்கப்பட்டது. ஜில்லா போர்டுக் கூட்டம் வெறும் சந்தை இரைச்சல். அதிலே சமாளிக்கிறது பிரமாதம் அன்று. சீட்டாட்டத்திலே வாதம் செய்து சண்டை போட வில்லையா? அதுபோல ஜில்லா போர்டு கூட்டத்து வாதங்கள் எப்படியோ நடந்து விடுகின்றன. பல அறிவாளிகள் கூடின சபையிலே பேச வேண்டுமே!

தலைவர் முன்னுரையை எழுதிக் கொண்டு போனேனோ, பிழைத்தேனோ: இல்லாவிட்டால் என் மானம் போயே போயிருக்கும். நடுவிலே இன்னார் இன்னார் பேசுவார்களென்ற விஷயத்தைக்கூட வரவேற்புச் சபைக் காரியதரிசி படித்து விட்டார். நான் கல்லுப் பிள்ளையார் போல நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன்.

பின்னுரை சொல்ல வேண்டுமே, என்ன செய்வதும் நான் படித்து 'ஸர்டிபிகேட்' வாங்கியதொன்று? அங்கே உதவவில்லை. 'சகோதரிகளே! சகோதரர்களே! என்று ஆரம்பிக்க வேண்டுமல்லவா? 'பெண்மணிகளே! கனவான்களே!'' என்று சொன்னால் நன்றாயிருக்கும் என்று எண்ணினேன்; சொல்ல வாயெடுத்தேன். 'பெண் வான்களே! கனமணிகளே!' என்று வந்து விட்டது. கூட்டத்தில் கொல்லென்று ஒரே சிரிப்பு. தட்டுத் தடங்கலோடு ஊளறிக் கொட்டிக் கிளறி மூடினேன். 'சீ சீ! இந்தப் பாழுங் கௌரவத்துக்கு ஆசைப்பட்டுக் கொண்டு இந்த மாதிரியான காரியங்களில் தலையிடக் கூடாது' என்று நிச்சயம் செய்து கொண்டேன்.

ஃ ஃ ஃ

பேச்சுவன்மை நிலையத்தின் விளம்பரத்தை நான் அடிக்கடி பத்திரிகைகளிலே பார்த்து வந்தேன். ஆதலால், அந்த நிலையத்துக்குப் போய் அங்குள்ள ஆசிரியர்களைப் பார்த்துப் பேசி வரலாமென்று புறப்பட்டேன்.

நிலையம் ஒரு சந்தில் ஒரு சிறிய வீட்டிலே இருந்தது.

நான் அங்கே ஒருவரைப் பார்த்தேன். ''குமாரசங்கர நாவலர் இருக்கிறாரா?'' என்று விசாரித்தேன். அவர் மிகவும் அவசரமாகப் பல கடிதங்களிற் கையெழுத்துப் போட்டுக் கொண்டிருந்தார்.

''அவரைப் பார்க்க வேண்டுமே'' என்றேன்.

"நந் - நந் - நந் நான்தான்'' என்றார் அவர்.

நான் அவர் பேசுவதைக் கேட்டுத் திடுக்கிட்டேன்.

''பிரசங்க வன்மை நிலைய ஆசிரியரைக் கேட்கிறேன்; தாங்களா ?''

அவர் புன்னகை புரிந்தார்.

''நான் பல்லடம்; உங்களிடம் பாடம் கற்றுக் கொண்டேன்'' என்றேன்.

''ப - ப - ப பபபப பல்லடமா ?'' என்று அவர் சொல்வதற்குள் அவர் உதடுகள் நூறு தடவை அடித்துக் கொண்டன. பாவம், அவர் திக்குவாயர்!

''இப்படி வந்து எவ்வளவு காலமாயிற்றோ ?'' என்று இரக்கத்தோடு கேட்டேன்.

''எப் - ப் - ப் - ப் போதுமே'' என்றார்.

நான் பிரமித்துப் போனேன். அப்பொழுது அவர் முன்பு அனுப்பிய விளம்பரங்களுள் ஒன்றில் இருந்த **'எங்களிடம் நேரே கற்றுக் கொள்பவர்களை விடத் தபால் மூலம் கற்றுக் கொள்பவர்களே அதிகப் பலனை அடைவார்கள்'** என்ற வாக்கியம் நினைவுக்கு வந்தது!

சாதித் தடை

அவன் ஒரு சோம்பேறி; ஒரு நாளில் பாதிக்கு மேல் தூக்கத்தில் போய்விடும்; ஆனாலும் அவன் உடம்பில் ஒரு பிரகாசம்; முகத்தில் ஒரு ஜோதி! 'மூதேவி பிடித்தவன்'

என்று சோம்பேறி மனிதனை நாம் சொல்கிறோம். அவனை அப்படிச் சொல்லக் கூடாது. நல்ல லக்ஷ்மீகரம் அவனுடைய இரண்டு கண்களின் கடையிலே வீசிய ஒளியில் விளங்கியது. இந்த ஆச்சரிய இளங்குமரனைப்பற்றி யாருக்கு என்ன தெரியும் ?

எப்படியோ கொல்லிமலையின் உச்சிக்குச் சிரமம் இல்லாமல் ஏறிச் செல்கிறான் ; அவனைச் சோம்பேறி என்று எப்படிச் சொல்வது ? அவன் தூங்கி எழுந்தால் அவன் கண்களில் கலக்கம், சோர்வு இருக்க வேண்டுமே? அப்பொழுதுதான் சாணையிடப்பட்ட மணிபோல அவ்விரு விழிகளும் பிரகாசிக்கும். அவனுடைய விரிந்த மார்பில் ஒரு சிறந்த வீரனுடைய அம்சம் இருந்தது ; திரண்ட தோள்களில் வெற்றியின் முத்திரை மறைந்திருந்தது. அவன் யார் ?

இங்கே எதற்காக வந்தான் ? அவனுடைய ஊர் எது? தாய் தகப்பனார் யார் ? - ஒன்றும் தெரியாது. என்ன அழகு ! என்ன தேகக் கட்டு ! ஏன் அவன் தன் பழைய கதையை மர்மமாக வைத்திருக்கிறான் ?

அவன் பேச்சுக்கும் வில்லின் நாணொலிக்கும் ஏதோ சம்பந்தம் இருக்க வேண்டும். ''நீ சிங்கத்தைப் பார்த்து இருக்கிறாயா?'' என்று பக்கத்து வீட்டு முத்து கேட்கும் போது, ''ஆஹா ! பார்த்திருக்கிறேன் ; புலியைப் பார்த்து இருக்கிறேன் ; மலையாள தேசத்துக் காடு முழுவதும் சுற்றி இருக்கிறேன்'' என்று அவன் கூறும் தொனியில் உள்ள ஆண்மையை யார் அளவிடவல்லார் !

''எல்லாம் சரி ! ஏன் இப்படித் தூங்கித் தூங்கிக் காலத்தைக் கழிக்கிறாய் ?'' என்று முத்து கேட்பான்.

''இந்த ஊருக்கு வந்த பிறகு உண்டான வியாதி. என்னையே மறந்து தூங்குகிறேன்'' என்று சொல்லிப் பெருமூச்சு விடும்போது அவனுடைய கண்களில் ஆழ்ந்த உணர்ச்சியை வெளிப்படுத்தும் ஒரு மின்னற் பார்வை தோன்றும். அவனுக்கு இடம் கொடுத்த பிச்சாண்டிக் கவுண்டன் தன்னுடைய வீட்டில் ஒரு தெய்வம் வளர்

வதாகவே எண்ணினான். பிச்சாண்டிக்குப் பிள்ளை குட்டி இல்லை. அவன்தான் பிள்ளை - இல்லை ; தெய்வத்தின் கிருபையால் கந்தர்வலோகத்திலிருந்து கிடைத்த மாணிக்கம். அவனைக் கவுண்டன் 'தம்பி' என்று கூப்பிட்டான் ; ஊராருக்கு அவன் செல்லத்தம்பி. செல்லத்தம்பியின் குணங்கள் எல்லோரையும் கவர்ந்தன. அவனது சோம்பலை ஒருவரும் பாராட்டுவதில்லை. மரத்தின் தழைச்செறிவுக்குள் மறைந்திருக்கும் புல்லுருவியைப் போல அது மறைந்து இருந்தது. அவன் சோம்பேறிதான் ; தூங்கு மூஞ்சிதான் ; ஆனாலும் அவனே அவ்வூராருக்கு ஒரு கந்தர்வன். குழந்தைகள், பெண்கள், கிழவர்கள் யாவருக்கும் அவனைக் கண்டால் ஒரு சந்தோஷம்.

செல்லத்தம்பி தன்னுடைய இருபதாவது வயசில் கவுண்டனூருக்கு வந்தான். வந்து இரண்டு வருஷங்கள் ஆயின. அவன் என்ன சாதி ? யார்? இன்னும் ஒன்றும் தெரியவில்லை. அவன் முகம் ஒரு பெரிய குடும்பத்தில் கௌரவமாக வாழ்ந்த வாழ்க்கையின் சின்னத்தை வெளியிட்டது. பிச்சாண்டிக்கு அவன்மேல் உண்டான பிரேமை அளவு கடந்தது. "நீ யாரப்பா? எந்த ஊர்?" என்று அவன் செல்லத்தம்பியை இரண்டு முறை கேட்டதோடு சரி.

செல்லத்தம்பி, "அதெல்லாம் மறந்துவிட வேணும். கேட்டால் எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. நான் ஓர் அநாதை. உங்களுக்கு இஷ்டமாயிருந்தால் இங்கே இருக்கிறேன். என்னாலான வேலையைச் செய்கிறேன். இல்லையென்றால் நான் போய் விடுகிறேன்" என்று அவன் சொன்ன பதில் பிச்சாண்டியைக் கலக்கியது ; கண்ணில் நீர்த்துளியை உண்டாக்கி விட்டது. 'அவன் மனத்திலுள்ள கஷ்டத்தை யார் அறிவார்கள்! என்ன கஷ்டமோ ! பெற்றவர்கள் என்ன கொடுமைக்கு ஆளாக்கினார்களோ! அல்லது, தாய் தகப்பன்மாரை இழந்து விட்டானோ! எப்படியிருந்தால் என்ன? சுவாமி கொடுத்த வரம். இவன் நமக்குப் பிள்ளை; உயிர், இனிமேல் இவனை விடக் கூடாது' என்று கவுண்டன் நிச்சயித்துக் கொண்டான்.

''தம்பி, உன் இஷ்டம்போல் இரு; எனக்கு இருக்கிற ஆடுமாடுகள் நாலு குடும்பத்தைக் காப்பாற்றும். இந்த வீடு உன் சொந்த வீடு. உன்னைப் பிரிந்திருக்க முடியாது என்று என் மனசு சொல்கிறது. தம்பி, நான் சொல்கிறது தெரிகிறதா?'' என்று அன்பொழுகும் குரலில் பிச்சாண்டி பேசினான்.

''அப்படியே இருக்கிறேன்'' என்று வாக்குறுதி தந்தான் அவன். அதுமுதல் 'தம்பி'க்கு ஒரு குறையும் வராமல் பிச்சாண்டியும் அவன் மனைவி குப்பாயியும் பார்த்துக் கொண்டார்கள்.

''யாரோ மகாராசா மாதிரியல்லவா இருக்கிறான்? அவன் முகத்திலே பால் வடிகிறதே! என்ன அழகு! அவன் என்ன சாதி? எந்த ஊர்?'' என்று கேட்டாள் குப்பாயி.

''மகாராசாவா! தேவலோகத்திலிருந்து வந்தவன் என்று சொல்லு. அவன் முகத்தைப் பார்த்தாலே பசி போய் விடுகிறது. அவன் ஆராயிருந்தால் நமக்கென்ன? இப்பொழுது நம்முடைய 'தம்பி'; நமது வீட்டுக்குத் தெய்வம்; நமக்குக் கண்மணி. முத்து எங்கே பிறந்தால் என்ன? தாமரை எங்கே முளைத்தால் என்ன?''

பிச்சாண்டி கொஞ்சம் படித்தவன்; பேசத் தெரிந்தவன். அவனுடைய பேச்சிலே படிப்பின் மெருகு இருக்கும். ஆனால் அவனுடைய உள்ளத்திலிருந்து வெளிப்படும் அன்பு மாத்திரம் அவன் பிறவியோடு வந்தது. குப்பாயியின் உள்ளம் பளிங்கு போன்றது. அதில் அன்பைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. ஏதாவது மாசு படிந்தால் ஊதின மாத்திரத்தில் போய்விடும்.

செல்லத் தம்பியோடே வம்பளப்பதில் யாருக்கும் பிரியம் உண்டு. அவன் சொல்லும் தேசாந்தரக் கதைகளைக் கேட்பதில் ஊரிலுள்ள நரைத் தலையர்களுக்கு எல்லையற்ற ஆசை. அவனைப் பார்ப்பதிலேயே இளம் பெண்களுக்கு ஓர் ஆனந்தம்; காளிக்கோ பரமானந்தம். பிச்சாண்டியின் தங்கை மகள் காளி. பெயர்தான் காளி; அவள் அரச குலத்தில் பிறந்திருந்தால் அவளுக்கு நல்ல பெயராக

வைத்திருப்பார்கள்; மாதவி, மல்லிகாவென்று சொல்லலாம் நல்ல தமிழ்ப் பெயராலே நன்றல்லை, வள்ளி யென்றும் சொல்லலாம். மலரின் மென்மையும் வள்ளிக் கொடியின் துவட்சியும் அவளுக்கு இருந்தன. காளியென்ற பெயர் அவளுக்கு எப்படிப் பொருந்தும்?

காளியின் கண்கள் விஷத்துளியை விட்டமைக்கூண்டல்ல; நீலமணியைப் பதித்த முத்து அல்ல; யவளக்கொடி ஓடும் பாற் கடலல்ல; இவையெல்லாம் பழைய உவமைகள், செல்லத் தம்பியின் விழிகளிலே செருகும் வேலென்றோ, அவன் உள்ளத்தைக் குளிர்விக்கும் மருந்தென்றோ சொல்லுங்கள். உண்மை இதுதான்; அந்த அதிசய இளங் குமரன் எல்லோரையும் கவர்ந்து இழுத்தான்; ஆனால் காளியின் இரண்டு விழிக்கடையிலே அவன் உள்ளம் மயங்கி அடிமைப் பட்டுக் கிடந்தது.

''இந்த இரண்டு கண்களல்லவா நம்மைச் செல்லத் தம்பி ஆக்கின!'' என்று அவன் தனிமையிலே எண்ணமிடுவான். அவன் ஓர் ஊர் சுற்றி; காடு சுற்றி; மலை சுற்றி. இப்பொழுது கவுண்டனூரில் காளியின் விழிக் கடையில் அவன் உள்ளமாகிய நங்கூரம் சிக்கிக் கொண்டது. கப்பல் மேலே போகவில்லை.

'அவன் யார்? அவன் ஊர் எது? சாதி என்ன?'— இந்த எண்ணங்கள் காளிக்குத் தோன்றுவதுண்டு. ''யாராக இருந்தால் என்ன? இப்போது நம் மாமன் மகன்'' என்று உள்ளுக்குள்ளே சொல்லிக் கொள்வாள். மாமன் மகன் என்பதை நாலைந்து முறை சொல்வாள். அப்படிச் சொல்லும்போது அவளுடைய உள்ளங்காலில் இருந்து உச்சந் தலை வரையில் மின்சாரம் போன்ற உணர்ச்சி பாயும்; மயிர்க் கூச்செறியும். அதுதான் காதலோ!

''தம்பி; நீ கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டாமா? என்ன சாதியென்று சொல்ல மாட்டாயா?'' என்று ஒரு நாள் பிச்சாண்டி கேட்டான்.

அவன் ஆச்சரியப் பார்வையோடு கவுண்டனைப்

பார்த்துச் சிரித்தான்; ''கல்யாணமா? இந்த அநாதைக்கு யார் பெண் தருவார்கள்?'' என்று கேட்டான்.

''அநாதையா? அப்படி இன்னொரு முறை சொல்லாதே தம்பி; அப்படிச் சொன்னால் என் இருதயத்தில் வாள் எறிந்தது போல் இருக்கிறது. நீ இந்த வீட்டுக்குச் சொந்தக்காரன். நானும் குப்பாயியும் உனக்குச் சொந்தமல்லவா? இந்த ஊர்க்காரனாகப் போன பிறகு நீ எப்படி அநாதையாவாய்? அப்படிச் சொல்லாதே தம்பி!'' அவன் சொல்லிய வார்த்தைகளில் அவனுடைய உள்ளத்தின் நைவு வெளிப்பட்டது.

''அப்படியானால் நான் உங்கள் சாதிதானே? எனக்கு என்று வேறு சாதி ஏது?'' என்று கேட்டான் செல்லத்தம்பி.

கவுண்டன் வகை தெரியாமல் விழித்தான். கவுண்டர்களுடைய சாதிக் கட்டுப்பாடு மிகவும் கடுமை. தம்பி தன் வீட்டில் சாப்பிடலாம்; இருக்கலாம்; எல்லாவற்றிலும் அவன் பிச்சாண்டியின் பிள்ளை. கல்யாணமென்றால் ''அவன் என்ன சாதி?'' என்ற கேள்வி! 'அட பாழும் சாதியே!' என்று மனசுக்குள் வைது கொண்டான் கவுண்டன்; 'இவன் முகத்தில் ராஜகளை இருக்கிறது. இவனிடம் ஊராருக்கெல்லாம் பிரியம். இவனைக் கட்டிக் கொள்வதில் பெண்களுக்கு அளவிறந்த விருப்பம் ஆனால் நடுவிலே சாதி என்று ஒரு வேலி! கேடுகெட்ட சாதி!' என்று பல்லைக் கடித்தான்.

அந்தச் சாதி விஷயந்தான் பெரிய முட்டுக் கட்டையாக நின்றது. உள்ளங்கள் கரைந்து ஒன்றாகின்றன; அழகும் அறிவும் சேர்வதற்குச் சித்தமாகின்றன; யாருக்கும் அதனால் பெரிய நன்மையே உண்டாகின்றது. ஆனால் இவ்வளவு நல்ல எண்ணங்களிலும் சாதி புகுந்து விஷமாக்கி விடுகிறது. பாழும் சாதி!

'சாதி தெரியாவிட்டால் கல்யாணம் இந்த இனத்தில் பண்ணுவது கஷ்டம். இவனுக்கு யார் பெண் கொடுப்பார்கள்? நம் சாதியென்று தெரிந்தால் காளியைக் கட்டிக் கொடுத்து விடலாமே!' என்று நினைந்து நினைந்து ஏங்கினான் பிச்சாண்டி.

''காளியைச் செல்லத் தம்பிக்குக் கட்டிக் கொடுக்க நினைக்கிறார்களாம். அவன் என்ன சாதியென்று தெரிய வில்லையாம். அதனால் தயங்குகிறார்கள்'' என்ற பேச்சு ஊரில் எழுந்தது.

காளி உருகுகிறாள். சாதிக்கு ஆயிரம் சாபம் தருகிறாள். அவளுடைய தகப்பன் முருகனுக்கு வழி ஒன்றும் தெரிய வில்லை. தாய் மாறக்காள் ஒரே பிடிவாதமாகச் சாதியைப் பிடித்துக் கொண்டு தடுக்கிறாள். ஊரில் உள்ளவர்களுக்கு அந்தரங்கத்தில் ஏதோ ஒன்று 'இப்படிச் செய்தால் நல்லது' என்று சொல்கிறது; ஆனால் அதை வெளியிலே சொல்லத் தைரியமில்லை. சாதியென்னும் பூதம் அவர்களைப் பயமுறுத்துகிறது.

பிச்சாண்டி, ''என் கண்ணுக்குக் கண்ணாலம் பண்ணி விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பேன்'' என்று துணிந்து விட்டான். ''சாதியை விட்டுத் தள்ளி விடட்டும், அதனால் ஒன்றும் நஷ்டமில்லை'' என்ற தைரியம் பிறந்தது. குப்பாயிக்கு ஒன்றும் தோன்றவில்லை. யாராவது அதிகமாகச் சாதியைப் பற்றிச் சொல்லிப் பயமுறுத்தினால் சிறிது அஞ்சுவாள். பிச்சாண்டி தன் தீர்மானத்தையும் சாதிக் கொடுமையையும் பற்றிப் பேசினால் அந்த எண்ணம் உடனே போய் விடும்; அவன் கருத்தின் வழியே செல்லத் தொடங்குவாள். அவள் மனம் ஓர் ஓடம். பிச்சாண்டியின் மனமாகிய ஆறு போகும் வழியே அது ஓடும். நடுவிலே ஏதாவது தடுத்தால் சிறிது நேரம் கரையருகில் தங்கும். அடுத்த கணம் அடிக்கும் காற்றினால் மறுபடியும் அந்த ஆற்றின் வேகத்தில் கலந்து விடும்.

காளியின் தகப்பனும் அந்தத் தீர்மானத்துக்கு வந்து விட்டான் மாறக்காளும் மனம் பொருந்தி விட்டாள். இனிமேல் கல்யாணம் நிறைவேறுவது நிச்சயம்.

இந்தச் சமாசாரம் ஊருக்குள் பரவியது. அப்புறம் ஊர் முழுவதுமே மாறி விட்டது. முன் போலச் செல்லத் தம்பியின் கதைகளுக்குக் கிராக்கியில்லை. காளியைக் கண்டு பெண்கள் பேசுவதில்லை. பிச்சாண்டியும் முருகனும் ஊராரால் சாதியை

விட்டு நீக்கப்படப் போகிறார்கள். போன வாரம் ஊரினர் யாவரும் செல்லத் தம்பியின் வீரக் கதைகளிலும் வசீகரத் தோற்றத்திலும் தேனில் விழுந்த வண்டுகள் போல் மயங்கி விழுந்தார்கள். இந்த வாரம் ஒரு பூதரும் அவனை அணுக வில்லை. அவனிடம் கதைக்குப் பஞ்சம் உண்டாகி விட்டதா? அவனுடைய முக வசீகரம் ஏதாவது குன்றி விட்டதா? ஒன்றும் இல்லை. காளியைக் கட்டிக் கொள்ளப் போகிறோமென்ற நினைவினால் உள்ளக் கடலில் அலை மோதி எழுந்த மகிழ்ச்சியாகிய நுரைகளின் ஒளி, அந்த முகத்தில் வீசி அதற்குப் பின்னும் ஒரு காந்தியை அளித்தது. பின் ஏன் இந்தப் பகிஷ்காரம்? சாதியின் மாயை! சாதியாகிய அந்தகாரம் ஊராருக்கு அந்த ஜோதியை மறைத்து விட்டது.

கல்யாணம் நடந்தது. உறவினர்கள் ஒருவரும் வரவில்லை. ஆனாலும் செல்லத் தம்பிக்கும் காளிக்கும் அது பெருங் குறையாகத் தோன்றவில்லை. இரண்டு உலகம் நிறைய இருந்த ஜனங்கள் உள்ள நிறைவோடு கலந்து உத்சவம் கொண்டாடினால் அவர்களுக்கு என்ன சந்தோஷம் இருக்கும்? அத்தனை சந்தோஷத்தை அவர்கள் அடைந்தார்கள். சாதி முள்ளால் சூழ்ந்த அந்த ஊராகிய கள்ளிப் புதரில் தோன்றிய மலரிலே, எங்கோ சுற்றி அலைந்த வண்டொன்று வந்து சேர்ந்தது போலக் காளியோடு செல்லத்தம்பி இணைக்கப் பட்டான்.

கல்யாணம் நடந்த மறுநாள் செல்லத்தம்பியின் முகத்தில் ஒருவகை வாட்டம் உண்டாயிற்று. அதைப் பிச்சாண்டி கவனித்தான். ''தம்பி, ஏன் இப்படி இருக்கிறாய்?'' என்று கேட்டான். தம்பியின் மேல் ஈக் காற்றுப் பட்டாலும் உள்ளம் நடுங்கும் பிச்சாண்டி, அவன் முக மதியில் படர்ந்த கவலை மேகத்தை அறிந்து பொறுத்திருப்பானா?

''ஒன்றும் இல்லை. உங்களுக்கெல்லாம் என்னால் பெரிய கஷ்டம் உண்டாகி விட்டதே! என்னால் நீங்கள் அரிஜனங்களைப் போலச் சாதியிலிருந்து ஒதுக்கப்

பட்டீர்களே!'' என்று கவலையோடு தம்பி பதில் அளித்தான்.

''தம்பி, இதுதானா? இந்தப் பயல்கள் கிடக்கிறார்கள். இந்தச் சாதியிலே நம்மைச் சேர்க்கா விட்டால் நமக்கு உயிரே போய் விடுமா? உன்னைக் காட்டிலும் சாதியா பெரிது?'' என்று பிச்சாண்டி அவன் தலை மயிரைக் கோதிக் கொண்டு சொன்னான்.

நாவிதன், வண்ணான் முதலிய தொழிலாளர்கள் இந்த இரண்டு வீட்டுக்கும் போவதில்லை. உள்ளூர்ச் செட்டி கூடச் சாமான் தருவதில்லை. பத்து மைல் தூரத்திலுள்ள ஊருக்குப் போய் வேண்டியவற்றை வாங்கி வரவேண்டி யிருந்தது.

ஃ ஃ ஃ

கல்யாணம் ஆகி ஒரு மாதம் ஆயிற்று. ஒரு நாள் செல்லத்தம்பி பிச்சாண்டியைப் பார்த்து, ''நான் இந்த ஊரை விட்டு ஒரு வாரம் வெளியிலே போய் வர வேண்டும்'' என்றான். அந்த வார்த்தை இடி விழுந்தது போலக் கவுண்டன் காதில் விழுந்தது. ''ஐயோ! உன்னைப் பிரிந்து ஒரு நிமிஷங்கூட என்னால் இருக்க முடியாது'' என்று கூவினான்.

செல்லத்தம்பியினிடம் ஈடுபட்ட கவுண்டன் அவன் அந்த ஊரை விட்டுப் போகாமல் தன்னுடைய குடும்பத்தில் ஒருவனாகி விட வேண்டுமென்பதற்காகவே அவனுக்குக் கால்கட்டுப் போட நினைத்தான்; சாதியை எதிர்த்து நின்று தன் எண்ணத்துக்கு நிறைவேற்றிக் கொண்டான். அவன் எண்ணத்துக்கு மாறாகச் செல்லத்தம்பி ஊரைவிட்டு போக வேண்டு மென்றால்-?

''நான் போய்த் திரும்பி வர மாட்டேனென்று எண்ண வேண்டாம். ஒரே வாரத்தில் வந்து விடுகிறேன். காளியிடம் சொன்னால் மிகவும் கஷ்டப்படுவாள். நீங்கள் சொல்லித் தேற்றுங்கள். நான் வந்து விடுகிறேன்.''

''தம்பி, உன் வார்த்தையை எப்படி நம்புவேன்! உன்னை நம்பி நாங்கள் ஐந்து பேர் ஜீவிக்கிறோம். காளி உன்னைப் பிரிந்து எப்படி இருப்பாள்!'' என்று அழாக் குறையாகச் சொன்னான் கவுண்டன்.

''என்ன பைத்தியம் மாதிரிப் பேசுகிறீர்களே? என்னோடு இவ்வளவு நாள் பழகியும் என் சுபாவம் தெரிய வில்லையே சாமி மேல் ஆணையாக நான் ஒரு வாரத்தில் வந்து விடுவேன்.'' இப்படிச் சொல்லும் போது அவன் கண்களில் துணிவும் வீரமும் விளங்கின.

''தம்பி, ஆணையிடாதே தம்பி! உன் மேல் நம்பிக்கை இல்லாமல் இல்லை. உன்னைப் பிரிவதற்கு மனசு கேட்க வில்லையே!''

''நீங்கள் நான் சொல்லுவதை நம்புங்கள். நம் எல்லோருக்கும் சௌக்கியம் உண்டாக வேணுமென் றிருந்தால் எனக்கு உத்தரவு கொடுங்கள்.''

அதற்கு மேல் என்ன சொல்வது! தம்பி புறப்பட்டு விட்டான்!

ஃ ஃ ஃ

ஒரு வாரம் நூறு யுகம் போல் இருந்தது. எல்லோரும் ஜீவப் பிரேதங்கள் ஆகி விட்டார்கள். சுளி யந்திரத்தைப் போல மாறிவிட்டாள். அவள் கண்களில் ஒளி இல்லை; முகத்தில் சோபை இல்லை.

''வழியிலே போகிறவனை நம்பி உறவினர்களைக் கை விட்டால் தெய்வம் அப்படித்தான் தண்டிக்கும்'' என்று சில பாவிகள் நாக்கில் நரம்பில்லாமல் சொன்னார்கள்.

எட்டாவது நாள்! வந்து விட்டான்! நிஜமா? ஆம்! உண்மை, முக்காலும் உண்மை! செல்லத்தம்பி வந்து விட்டான்! அவன் மட்டுமா? அவனோடு வேறு இரண்டு பேர், வண்டிகள்; ''தம்பி வந்தாயா?'' என்று ஓடி வந்து கட்டிக்கொண்டான் பிச்சாண்டி, துக்கம் நெஞ்சை அடைத்தது. பேச முடியவில்லை. அவ்விருவரும் ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்ட காட்சி எந்தக் கல் மனத்தையும் கரைத்து விடும். ''காளி எப்படி இருக்கிறாள்?'' என்று முதலிற் கேட்டான். அவள் ஒரு மூலையில் விம்மி விம்மி அழுங்குரல் அவன் காதிற் பட்டது; அது அவன் கண்களிலும் நீர்த் துளிகளை உண்டாக்கிற்று; அவன் வேறு புறமாகத் திரும்பிக் கண்ணைத் துடைத்துக் கொண்டான்.

"சரி, போனதை மறந்து விடுங்கள். இந்த இடத்தில் இனி ஒரு க்ஷணமும் இருக்க வேண்டாம். நான் கிழவன் பாளையம் மிட்டாதார் பிள்ளை. அசல் கொங்கு வேளாளக் கவுண்டன். என்னால் உங்களுடைய சாதி கெட்டுப் போக வில்லை. இதை இன்று இந்த ஊரார் எல்லோரும் அறியட்டும்.

அவனுடைய பேச்சு ஒரு பெரிய அரசன் முடி புனைந்த நாளில் குடிகளுக்கு வெளியிடும் அபயச் செய்தி போல் இருந்தது.

எல்லோரும் ஆச்சரியக் கடலில் மூழ்கினர். அவன் ஒரு மிட்டாதார் பிள்ளையா! ஆனால் என்ன? அவன் அவர்களுக்குப் பழைய செல்லத்தம்பிதான். அவர்கள் இடையே இருந்த அன்புக் கயிற்றில் இன்னும் இரண்டு முறுக்கு அதிகமாயின.

ஃ ஃ ஃ

செல்லத்தம்பி கிழவன்பாளையம் மிட்டாதாரின் செல்வப் புதல்வன்; குமாரசாமி என்பது அவன் பெயர். தன்னுடைய மனத்துக்குப் பிடிக்காத பெண் ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேனென்று கோபித்துக் கொண்டு ஊரைவிட்டுப் புறப்பட்டு விட்டான். அவன் போன பிறகு அவன் தகப்பனாராகிய மிட்டாதாருக்கு அவனுடைய அருமை தெரிந்தது. இராத் தூக்கத்தை இழந்தார். ஊர்களுக்கெல்லாம் சொல்லிவிட்டார். தம் மகன் திரும்பி வந்தால் போதும் என்ற நினைவில் அவர் உடல் மெலிந்து போயிற்று.

குமாரசாமி ஊர் சுற்றி வருகையில் கவுண்டனூரில் காளியின் கண்களில் மயங்கி அங்கேயே தங்கிவிட்டான். கல்யாணம் ஆயிற்று. சாதித் தடையினால் உண்டான கொடுமை அவனால் பொறுக்க முடியவில்லை. 'சொந்த ஊருக்குப் போய்த் தகப்பனாரைப் பார்ப்பது, அவர் கோபத்தோடு இருந்தால் வந்து விடுவது, இல்லாவிட்டால் பிரயாண விவரங்களைச் சொல்லி அவர் உத்தரவு பெற்று

எல்லோரையும் கூட்டிக்கொண்டு கிழவன்பாளையத்துக்கே போய் விடுவது' என்று தீர்மானித்துக் கொண்டு புறப்பட்டான். இறந்தவர் பிழைத்தால் மறுபடியும் செத்துப் போவென்றா சொல்வார்கள்? குமாரசாமியைக் கண்டால் மிட்டாதார் கோபித்தா துரத்துவார்?

''என்னப்பா? எங்களை இப்படித் தவிக்க விட்டுப் போய் விட்டாயே!'' என்று சொல்லிக் கதறினார் அவர்.

''நீங்கள் நாலு வருஷம் என்னைப் பிரிந்து வாழ்கிறீர்கள். ஒரு நாள்கூடப் பிரிய முடியாத புதிய தாய் தந்தையரையும் மனைவியையும் நான் இப்போது பெற்று இருக்கிறேன். அவர்களையும் கூட்டிக்கொண்டு இங்கே வர உங்கள் சம்மதம் தெரிய வேண்டும்'' என்று சொல்லித் தன் சமாசாரத்தை மெல்ல விரித்துக் கூறினான்.

''உன் சித்தப்படி செய்; இனிமேல் என்னை விட்டு போகாமல் இருப்பதாகச் சத்தியம் செய்தால் உன்னை விடுவேன்'' என்று அழுதார் மிட்டாதார். தம்முடைய சொந்தப் பிள்ளையல்லவா?

ஃ ஃ ஃ

செல்லத்தம்பி பழைய குமாரசாமியாகிக் கிழவன் பாளையத்திற்குத் தன் புதிய உறவினர்களோடு வந்து விட்டான். காளிக்கு இப்போது தேவானை என்ற பெயர் அவளுடைய மாமனாரால் கொடுக்கப் பட்டது. அவள் பட்டிக்காட்டில் இருந்தபோது அந்த ஊருக்குப் பெருமை அளித்தாள்; கிழவன்பாளையத்து மிட்டாதார் மருமகள் ஆனபோது அந்தக் குடும்பத்திற்கும் பெருமை உண்டாக்கினாள். மாணிக்கத்தைத் தனியே வைத்தால் சிறிது சோபை தரும்; தங்கத்திலே புதைத்தால் பின்னும் அதிகமாகச் சோபை தரும். காளியும் அப்படித்தான். அவள் ராணியாகப் போகும் அதிருஷ்டமிருந்தால் அந்த ராஜ்யத்துக்குக்கூட பெருமை அளிப்பாள்.

பிராயச்சித்தம்

1

பளீரென்று அறைந்தாள்; குடுகுடுவென்று ஓடி விட்டாள். அந்த ஒரு கணத்துக்குள் அவள் மார்பு படபடத்ததைப் பார்க்க வேண்டுமே! வெகு வேகமாக மாடிப் படியில் இறங்கி கீழே வந்தாள். உடம்பெல்லாம் வேர்த்து விறுவிறுத்து விட்டது. எதையோ திருடி விட்டவளைப் போல் திருதிரு வென்று விழித்தாள். அவளுடைய படபடப்பு அடங்க அரைமணி நேரம் ஆயிற்று. ஆனாலும் முழுவதும் அடங்கின பாடில்லை. நெஞ்சில் ஏதோ ஒரு பெரிய பாரம் அமுக்கியது. செய்யக் கூடாத குற்றம் ஒன்றைச் செய்ததைப் போன்ற உணர்ச்சி; அதை மறைக்கப் பார்த்தாள்; மறக்கவும் பார்த்தாள்; முடியவில்லை.

இனிமேல் வெளியே தலையை நீட்டுவதற்குக்கூட அவளுக்கு யோசனைதான். அவனைக் கண்டு விட்டால் அவன் முகத்தில் எப்படி விழிப்பது? என்ன இருந்தாலும் அவன் ஆண் பிள்ளை; தான் பெண்; ஒரு ஆணை அவ்வளவு துணிச்சலாக அறையலாமா?

ஆணாயிருந்தால் என்ன? அவன் செய்த குற்றம் குற்றந்தானே? அதற்குத் தக்க தண்டனை அளிப்பது அவசியமல்லவா? அவள் அதை எவ்வளவு சிரத்தையாகப் பாதுகாத்தாள்! அது பூக்குமென்று எவ்வளவோ ஆவலோடு எதிர்பார்த்தாள்! அது பூத்ததும், பூத்த புஷ்பத்தைப் பெரிய புதையலைப்போல் பறித்து வைத்துக் கொண்டாள். எட்டு வயசுப் பெண்ணுக்கு அவ்வளவு அக்கறை ஒரு விஷயத்தில் ஏற்பட்டது மிகவும் ஆச்சரியந்தான். அவளுக்கு அந்த ரோஜாச் செடியினிடம் அபாரமான பிரேமை, அதற்கு உயிர் இருந்து விட்டால் அதை ஆயிரம் பாடு

படுத்தியிருப்பாள். அது வளர்ந்த சட்டியின் வெளிப் பக்கத்தை எவ்வளவு சுத்தமாக வைத்திருந்தாள்! அப்பாவைக் கேட்டுக் கேட்டு அந்தச் செடிக்கு என்ன என்ன எரு வேண்டுமென்று தெரிந்து வாங்கிப் போட்டாள்.

வெறும் முள்ளோடு கூடிய கொம்பை நட்டாள்; பழைய இலைகளெல்லாம் வாடிவிட்டன; "அப்பா, இது தளிர்க்குமா?" என்று ஆசையோடு கேட்பாள்.

"பேஷாய்த் தளிர்க்கும், கண்ணே" என்று அப்பா சொல்லும்போது அவளுக்கு உண்டாகும் நம்பிக்கைக்குக் கங்குகரை இல்லை.

"இன்னும் ஒரு மாசத்தில் பூக்குமா அப்பா?"

அவளுக்கு அவ்வளவு ஆத்திரம். மறுநாளே அது தளிர்த்துப் பூத்துவிடாதா என்று அவள் ஏங்குவாள். அந்தக் குழந்தை மனத்தில் இருந்த ஆவல் அப்படியே பூர்த்தியாவதென்பது சாத்தியமா?

"இலையெல்லாம் வாடிப்போச்சே; இனிமேல் இது பிழைக்குமா அப்பா?"

அவளுடைய கண்களில் நீர் ததும்பும். "அசடே! இன்னும் ஒரு மாசத்துக்குள் இதன் பூவை நீ தலையிலே வைத்துக் கொள்ளப் போகிறாய், பார்" என்று தகப்பனார் உற்சாகத்தை மூட்டினார்.

தளிர் விட்டது. அவளுடைய உள்ளத்திலும் உவகைத் தளிர் தோன்றியது. அவளுடைய பராமரிப்பில் ரோஜாச் செடி நன்கு வளர்ந்து வந்தது. தளதளவென்று தளிர்த்து நிற்கும் அதைப் பார்த்தாலே அவளுக்கு ஓர் ஆனந்தம். ஒவ்வொரு தளிரும் அவளுக்கு ஒரு சுவர்ண பத்திரம்.

அரும்பு கட்டிவிட்டது. அவள் எத்தனை சாமியை வேண்டிக் கொண்டாள் தெரியுமா? "முதற் பூ உனக்குத் தான் தருவேன் பிள்ளையாரே" என்று தும்பிமுகவனை வேண்டிக் கொண்டாள். நல்ல வேளையாகக் கண்டம் ஒன்றும் இல்லாமல் ரோஜா நங்கை மலர்ந்தாள். இந்த இளங் குழந்தை பார்வதி ஒரு புதிய சுவர்க்க பதவியை அடைந்தவள் போல ஆனாள். அன்று முழுவதும் அவளுக்கு

ஒரே கொண்டாட்டம். அந்தப் பூவை ஆயிரம் விதமாக அலைத்துக் கசக்கி விட்டாள்.

அதுமுதல் ரோஜாப் பூவின் மோகம் அவளுக்கு வளர்ந்து கொண்டே வந்தது. ஒவ்வொரு நாளும் 'அரும்புகள் எத்தனை இருக்கின்றன? இன்றைக்கு மலரும் அரும்பு எவ்வளவு? நாளைக்கு விகசிப்பவை எத்தனை? இன்னும் இரண்டு நாள் கழித்துப் புஷ்பிப்பவை எத்தனை?' என்று எல்லாம் கணக்குப் போடுவாள். அதிலே அவளுக்கு ஓர் ஆனந்தம்; ஒரு தனியான இன்ப உணர்ச்சி.

ஃ ஃ ஃ

'நிச்சயமாக ஒரு பூவைக் காணவில்லை. நேற்றுத் தான் பெரிய அரும்புகளை எண்ணினேன். ஐந்து அரும்புகள் இருந்தன. இன்றைக்கு ஐந்து பூ இருக்க வேண்டுமே; நாலே இருக்கின்றன, ஒன்று காணோம். ஆம்! யாரோ ஒன்றைத் திருடி விட்டார்கள்!'

திருடிவிட்டார்கள் என்று எண்ணும் போது அவள் வயிறு பகீரென்றது. இவ்வளவு நாளாக. கண்ணும் கருத்துமாகத் தான் வளர்த்த குழந்தை அது! அதன் புஷ்பம் எல்லாம் தனக்கே சொந்தம் அதை ஒருவர் திருடிவிட்டால் ...!

இந்தத் திருட்டு அடிக்கடி நடந்தது. பார்வதிக்கு மனம் பொறுக்கவில்லை. திருட்டைக் கண்டு பிடிக்காமல் விடப்போவதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டாள்.

ஃ ஃ ஃ

பார்வதியின் ரோஜாச் செடி அவள் வீட்டு மொட்டை மாடியில் உள்ள கைப்பிடிச் சுவரில் வளர்ந்து வந்தது. இந்த வீட்டைச் சேர்ந்தாற்போல உள்ள பக்கத்து வீட்டு மொட்டை மாடிக்கும் இந்த வீட்டு மாடிக்கும் இடையிலே இடுப்பளவு கைப்பிடிச்சுவர் ஒன்றுதான் தடையாக இருந்தது. அங்கிருந்து இங்கே சுலபமாக வரலாம்; இங்கு இருந்து அங்கே சுலபமாகப் போகலாம்.

அந்த வீட்டுப் பையன் பரமசிவம் பன்னிரண்டு வயசு உள்ளவன். அவன்தான் ரோஜாப் பூவைத் திருடினான் என்பதைப் பார்வதி கண்டு கொண்டாள். 'திருட்டுப் பயல்!

இவனைக் கையும் களவுமாகப் பிடித்து உதைக்க வேண்டும்' என்று அவள் எண்ணினாள். தன்னுடைய அப்பாவிடம் சொல்லவோ அல்லது அவனுடைய அப்பாவிடம் சொல்லவோ அவளுக்குத் தோன்றவில்லை. அந்தப் புஷ்பத்தின்மேல் இருந்த தீவிரமான ஆசை, அந்தத் திருடனைத் தன் கையாலேயே தண்டிக்க வேண்டுமென்ற ஆத்திரத்தை உண்டாக்கியது. சமயம் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

இன்றைக்கு எப்படியாவது கண்டு பிடித்து விடுவது என்ற தீர்மானத்தோடு ஒளிந்து கொண்டு கவனித்தாள். கண்டு பிடித்து விட்டால் அவனை லேசில் விடுவதில்லை என்ற தைரியமும் கொண்டாள்.

''அதோ வருகிறான்; திருட்டுப் பயல். அவன் நாசமாய்ப்போக! இப்போதே போய் ஓர் உதை விடுகிறேன் —...சே, சே; கையுங் களவுமாகப் பிடித்து உதைக்க வேண்டும்......... இதோ வந்து விட்டான். கொடியைத் தொடுகிறான்; பறிக்கிறான்!''

குடுகுடுவென்று ஓடினாள்; பளீரென்று அறைந்தாள் திரும்பிப் பாராமல் கீழே வந்துவிட்டாள். எல்லாம் மின்னல் வேகத்தில் நிகழ்ந்தன.

பரமசிவம் திக்பிரமை அடைந்து விட்டான். அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. கன்னத்தைத் தடவிக் கொண்டான். அடி ஒன்றும் அவ்வளவு பிரமாதமானதன்று. பார்வதியின் மென்றளிர்க் கரத்தில் ஓங்கி அறைவதற்கு அவ்வளவு திறமை ஏது? ஆனாலும் அவனுக்கு அவமானம் தாங்கவில்லை. அவள் அறைந்த அறை அவன் கன்னத்திலே மட்டும் படவில்லை; அவனது இருதயத்திலும் பட்டது. அவனுடைய உள்ளத்தில் ஒரு கொதிப்பு உண்டாயிற்று; 'இந்தச் சிறுக்கிக்கு இவ்வளவு துணிச்சலா? பார்க்கட்டும் என் கை வரிசையை! பதிலுக்குப் பதில் செய்யா விட்டால் நான் பரமசிவன் அல்ல' என்ற சங்கற்பத்தைச் செய்தான். தன் குற்றத்தைத் தெரிந்து கொள்ளவில்லை. பேசாமல், பறித்த புஷ்பத்தைப் பிய்த்தெறிந்து விட்டுக் கீழே போய்

விட்டான். அவள் — பாவம் குழந்தை! திடுக் திடுக்கென்று இருதயம் அடித்துக் கொண்டது. அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இரண்டு நாள் தைரியமாக மேலே ரோஜாப் புஷ்பம் கூடப் பறிக்கப் போகவில்லை. தலைவலியென்று சொல்லிக் கொண்டு பள்ளிக்கூடத்திற்கும் போகவில்லை. இரண்டு நாள் இந்தச் சாக்கு; பிறகு சனிக் கிழமை ஞாயிற்றுக் கிழமைகள் வந்து விட்டன.

'என்ன இருந்தாலும் நாம் பண்ணினது தப்பு' என்றே அவள் உள்ளம் அடித்துக் கொண்டது. பதிலுக்குப் பதில் அடிக்காமல் விடுவேனா?' என்று அவன் மனம் துடித்தது.

ஃ ஃ ஃ

ஒரு வாரம் ஆயிற்று. பார்வதி ஆற்றங்கரைக்குச் சென்று கொண்டிருந்தாள். அவளுடன் பத்து வயசுப் பெண் ஒருத்தியும் சென்றாள். பரமசிவம் அந்த வழியாக வந்து கொண்டிருந்தான். பார்வதியைக் கண்டவுடன் அவனுடைய உள்ளம் கொதிப்பு மூண்டது. ஓர் இமைப் பொழுதில் அவளுக்கு அருகில் வந்து தன் பலங் கொண்ட மட்டும் ஓங்கி ஓர் அறை அறைந்து விட்டு ஓடினான்.

குழந்தை கதி கலங்கி விழுந்து விட்டாள். பக்கத்தில் நின்ற பெண்ணும் பயந்து ஓவென்று கூவினாள். ஓடிப் போய் பார்வதியின் வீட்டில் தெரிவித்தாள். கூட்டம் கூடியது. பார்வதியின் கன்னம் வீங்கிவிட்டது. பரமசிவம்தான் அடித்தானென்பதைப் பார்வதியின் வீட்டார் அறிந்து அவனை வையத் தொடங்கினர். அவனை அவள் அடித்த சங்கதியும் வெளி வந்தது. இப்படிக் காரண காரியங்களைச் சர்ச்சை செய்ய இரண்டு வீட்டாருக்கும் சண்டை முற்றி விரோதம் உண்டாயிற்று.

பார்வதியின் தகப்பனார் ஒரு செட்டியார் கடையில் குமாஸ்தாவாக இருந்தார். செட்டும் கட்டுமாக இருந்து இரண்டாயிரம் ரூபாய் சேர்த்து அந்த மாடி வீட்டை விலைக்கு வாங்கினார். வீட்டை அழகாக வைத்துக் கொள்வதில் அவருக்கு அதிகக் கவனம். அந்தக் குணமே பார்வதியினிடத்திலும் இருந்தது.

பரமசிவத்தின் தகப்பனார் சர்க்கார் சம்பளக்காரர். போலீஸ் சப் இன்ஸ்பெக்டர். இரண்டு கைகளாலும் திருமகளை வரவேற்பவர். அநேகமாக அவர் ஒவ்வொரு வருஷத்திலும் தம் சொந்த ஊராகிய திருமானூரில் குறைந்த பக்ஷம் ஓர் ஏகார நிலமாவது வாங்காமல் இருப்பதில்லை. தம்முடைய பிள்ளையாகிய பரமசிவத்தை அவர் செல்லம் கொடுத்து வளர்த்தார். அவருடைய முரட்டுத்தனமே அவனுக்கும் படிந்திருந்தது. ஆனாலும் அவன் உள்ளத்திலே கனிவின் முளை இருந்தது.

பார்வதியின் கன்னத்திலிருந்த வீக்கம் குறைய இரண்டு நாட்கள் ஆயின. உத்தியோகஸ்தன்-அதிலும் போலீஸ் உத்தியோகஸ்தன்-பிள்ளை அடித்து விட்டால் கேட்பார் யார்? இரண்டு நாள் கசமுசவென்றிருந்த சண்டை பிறகு ஓய்ந்து விட்டது. ஒருவர்க்கொருவர் பேசுவதில்லை என்ற முடிவோடு அந்தக் கலக அத்தியாயம் முடிந்தது.

அவ்விரண்டு வீட்டார்களும் ஒருவரோடு ஒருவர் பேசாமல் மௌனம் சாதித்தார்கள்]என்பது வாஸ்தவந்தான்; ஆனால், அந்தக் குழந்தைகள் இருவர் மனத்தில் மாத்திரம் அமைதி ஏற்படவில்லை; ஒருவகையான கொந்தளிப்புத் தான் உண்டாயிற்று.

'பாவம்! எவ்வளவு பெரியதாக வீங்கிப் போய் விட்டது! நான் அந்தப் பூவைத் திருடியது முதல் குற்றம்; அவளை அடித்தது இரண்டாவது குற்றம். நான் அடித்த போது அப்படியே அவள் சுருண்டு விழுந்து விட்டாளே! நான் மிகவும் கெட்டவன். அவள் என்னை அடித்ததனால் எனக்கு வலி கூட ஏற்படவில்லையே. அவள் அடித்தது மூன்றாம் பேருக்குத் தெரியாதே. நான் செய்த பிசகுக்காகத்தானே அவள் அடித்தாள்? நானோ அவளைப் பேய் போல அல்லவா அறைந்து விட்டேன்! ஊரே கூடி விட்டதே. இந்த மாதிரி அசட்டுக் காரியம், அக்கிரமமான காரியம், நான் செய்தேன். இப்போதே ஓடிப் போய்ப் பார்வதி காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கட்டுமா? அவள் என்னை ராக்ஷஸன் என்று தானே நினைப்பாள்? நம்முடைய அப்பா

போலீஸ்காரராக இருப்பதனால் தானே நம்மைப் பேசாமல் விட்டு விட்டார்கள்? இல்லாவிட்டால் ஜெயிலில் அல்லவா போட்டு விடுவார்கள்?' என்று பரமசிவத்தின் மனத்தில் பச்சாதாபம் உண்டாயிற்று. அவன் உள்ளத்தில் இருந்த கனிவு வெளிப்பட்டது.

அவள் என்ன நினைத்தாள்? 'அவன் நம்மை அடித்தது சரிதான். என்ன இருந்தாலும் பெண் பிள்ளையாகிய நாம் ஆண் பிள்ளையாகிய அவனை அறையலாமா? ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் அடித்தோம்; அதற்குப் பதில் கிடைத்தது. அவனை, ஏன் பறிக்கிறாய் என்று கேட்டிருக்கலாம். பறிக்காதே என்று சொல்லியிருக்கலாம். அல்லது நாமே பறித்து, இந்தா உனக்கு என்று கொடுத்திருக்கலாம். நாம் அறைந்தது பிசகு. அறையா விட்டால் இவ்வளவு கலகம் உண்டாகி இருக்காது' என்று அந்த மாசுமறுவற்ற உள்ளத்திலே நினைவுகள் எழுந்தன.

2

பரமசிவத்தின் தகப்பனாரை அந்த ஊரை விட்டு மாற்றி விட்டார்கள். பரமசிவத்தின் தகப்பனார் தாயார் பார்வதியையும் அவள் வீட்டாரையும் மறந்து விட்டார்கள். அப்படியே பார்வதியின் தகப்பனார் தாயாரும் பரமசிவத்தையும் அவனைச் சேர்ந்தவர்களையும் மறந்து போனார்கள். வருஷங்கள் கழிந்தன. பரமசிவத்தின் தகப்பனார் எவ்வளவோ ஊர்களைப் பார்த்து விட்டார். பார்வதி இருந்த ஊருக்கும் எவ்வளவோ ஸப் இன்ஸ்பெக்டர்கள் வந்து போய் விட்டார்கள்.

ஒவ்வொரு நிகழ்ச்சியும் நடக்கும் போது புதிதாகத் தோன்றி அடுத்த கணத்தில் பழையதாகி விடுகிறது. பிறகு மறந்தே போய் விடுகிறது. அதன் சுவடும் நிற்பதில்லை. பார்வதி பரமசிவத்தின் சண்டையும் அப்படியே மறக்கப்பட்ட நிகழ்ச்சிகளில் ஒன்றாகி விட்டது. அந்தச் சண்டைக்கு அப்புறம் எத்தனையோ கடுமையான சண்டைகள் அந்த ஊரிலே, அதே தெருவிலே நடந்திருக்கின்றன. எல்லாம் மறதியென்னும் கடலுள் ஆழ்ந்தன. அந்த

ரோஜாப்பூச் செடிகூட இப்பொழுது இல்லை. அந்தச் சண்டையில் இருந்து பார்வதி பூச்செடி வளர்ப்பதையே விட்டு விட்டாள். அவள் வேறு விஷயங்களில் சிரத்தை கொள்ள ஆரம்பித்து விட்டாள். பெண்களுக்கு வயசு ஆக ஆக எத்தனையோ ஆசைகள் உண்டாகின்றன. அவளுக்கும் சங்கீதப் பித்து, புஸ்தகப் பசி இவைகள் உண்டாயின. பழைய ரோஜாப்பூ ஞாபகத்தை அவள் அறவே மறந்து விட்டாள். அவளுடைய சரீர அழகோடு சாரீர இனிமையும் மேன்மேலும் வளர்ச்சி பெற்றது. கல்வியிலும் அவள் சிறப்புப் பெற்றாள்.

பரமசிவமும் காலமாகிய நதியிலே எவ்வளவோ தூரம் வந்து விட்டான். இன்று அவன் பழைய பரமசிவம் அல்ல. பழைய முரடன் அல்ல. அன்பும் தியாகமுமே மக்களுக்கு அமரத்துவத்தை உண்டாக்குபவை என்பதை அவன் உணர்ந்து கொண்டான். சென்னையில் காலேஜில் படித்துக் கொண்டிருந்தான். இயல்பாகவே அவனுக்கு அறிவு அதிகம். படிப்புக்குரிய சௌகரியங்களும் இருந்தன. தடையொன்றும் இல்லாமல் அவனுடைய கல்வி சிறந்து வந்தது. அவன் உள்ளம் உலகத்தை ஊடுருவி உணரத் தொடங்கியது. இளம்பெண்ணை ஓங்கி அடித்த அடியை அவன் மாத்திரம் மறக்கவே இல்லை. அதனால் உண்டான தழும்பு அவன் உள்ளத்தில் மாறவே இல்லை. 'அந்தப் பெரிய குற்றத்திற்கு என்ன பரிகாரம்?' என்று அவன் யோசித்து யோசித்து உருகினான். பல நாள் மணிக்கணக்காகத் தன்னுடைய கொடிய செயலுக்காக வருந்தி உருகினான்.

அன்று அவனுக்குப் பன்னிரண்டு வயசு. இன்றோ இருபது வயசு. இந்த எட்டு வருஷங்களில் அவனுடைய உணர்ச்சி விரிந்து விசுவரூபம் எடுத்தது. அன்று அவனுடைய மனத்தே உண்டான பச்சாதாபம் கடுகளவாகவே இருந்தது; இன்று அது மலையளவாக வளர்ந்து விட்டது. அவன் உள்ளம் உலக இயல்பை உணர உணர அதன்கண் அன்பும் இரக்கமும் அதிகமாயின. ஒன்றும் அறியாத பேதைப் பெண்ணுக்குத் துன்பமிழைத்த கொடுமையைக்

கொலைக் குற்றத்துக்கு மேலாகக் கருதினான். 'அந்த இளைய உள்ளம் எப்படித் துடித்திருக்கும்? அந்தப் புஷ்பத்தைக் கசக்கி எறிந்தது போல அந்த உள்ளத்தைப் புண்படுத்தினேனே; இதற்கு என் ஆயுளிலே பரிகாரம் உண்டா? எப்படிப் பரிகாரம் செய்வது? நானாக ஆயிரம் அறை அறைந்து கொண்டால் அதற்குப் பிராயச்சித்தம் ஆகி விடுமா! ஐயோ! அந்தக் கணத்தில் அந்த இளந் தளிர் போன்ற அந்தக் குழந்தை எப்படித் துடித்தது! என் தகப்பனார் போலீஸ் உத்தியோகஸ்தர் என்ற தைரியத்தினாலேதானே அப்படிப் பேய் போல ஆனேன்' என்று அவன் லக்ஷம் தடவை சிந்தித்திருப்பான்; அவன் மனம் தன் குற்றத்திற்கு ஒரு பரிகாரம் உண்டாவென்று ஏங்கிக் கிடந்தது.

ஒரு நாள் அவன் மனத்திலே பளிச்சென்று ஒரு நினைவு எழுந்தது. அந்த ஊரின் பெயர் மோகனூர். அதற்குப் பக்கத்தில் உள்ள நாமக்கல்லில் இருந்து ஒரு பையன் பரமசிவத்தோடு வாசித்துக் கொண்டிருந்தான். அவன் இப்போது லீவுக்காக, ஊருக்குப் போயிருந்தான். பரமசிவம் தன் தகப்பனார் அப்போது வேலையாக இருந்த கல்லிடைக்குறிச்சிக்குப் போகவில்லை. லீவு காலத்தில் யூனிவர்ஸிடி புஸ்தக சாலையிலுள்ள பல அருமையான புஸ்தகங்களைப் படிக்கலாமென்று சென்னையிலேயே தங்கினான். அவன் தகப்பனாரும் அதற்கு அநுமதி கொடுத்தார்.

பரமசிவம் தன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதத் தொடங்கினான் :

'அன்ப,

இந்தக் கடிதம் உனக்கு ஆச்சரியத்தை உண்டாக்குமென்றே நம்புகிறேன். ஆனாலும் உன்னுடைய உண்மை அன்பை அறிந்தவனாதலின் எனக்காக இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். இதைக் காட்டிலும் வேறு சிறந்த உபகாரம் இருக்க முடியாது.

உங்கள் ஊருக்கருகில் மோகனூர் என்று ஓர் ஊர் இருக்கிறது. அங்கே என் இளமைக்காலத்தில் என் தகப்பனார் வேலை பார்த்து வந்தார். அங்கு உள்ள முதலியார் தெருவில் சுப்பிரமணிய முதலியார் என்று ஒருவர் உண்டு. அவர் செட்டியார் கடையில் குமாஸ்தா வாக இருந்தார். அவருக்கு ஒரு மாடி வீடு இருந்தது. அந்த வீட்டின் மொட்டை மாடியில் அந்தக் காலத்தில் ரோஜாச் செடி வைத்திருந்தார்கள்.

சுப்பிரமணிய முதலியாருக்கு ஒரு பெண் இருந்தாள். அவளுக்குப் பார்வதி என்று பெயர். அவளுக்குப் புஷ்பச் செடி வைப்பதில் பிரியம் அதிகம்.

தயை செய்து நீ அவ்வூருக்குப் போய் அந்த வீட்டை விசாரித்தடைந்து முதலியார் இப்போது எப்படி இருக்கிறார் என்பதையும் அந்தப் பெண் இப்போது எங்கிருக்கிறாள்? கல்யாணம் ஆகிவிட்டதா, புருஷன் வீடு எங்கே என்ற விவரங்களையும் விசாரித்து எனக்கு விரிவாக எழுது. இதைப் பார்த்து நீ சிரிக்காதே. பார்வதி இப்போது எங்கே இருக்கிறாள் என்ற விஷயத்தைத் தெளிவாக விசாரித்து எழுது. உனக்குச் சிரமம் கொடுக்கிறேன் என்பதை அறிவேனானாலும், இந்த விஷயத்தில் உன்னையன்றி வேறு தக்கவர்கள் இல்லாமையின் இந்தக் காரியத்திற்கு உன்னை ஏவினேன். மன்னிக்க வேண்டும்.

இங்ஙனம்

அன்புள்ள

பரமசிவம்'

கடிதத்தைப் போட்டு விட்டு ஒவ்வொரு நாளும் பதில் எதிர் பார்த்துக் கொண்டு காத்திருந்தான். ஒரு வாரம் கழித்துப் பின் வரும் கடிதம் கிடைத்தது.

'அன்ப,

உன் கடிதம் வாஸ்தவத்தில் எனக்கு ஆச்சரி யத்தையே உண்டாக்கியது. நீ இந்தப் பக்கத்தில் இருந்தாய் என்பதை அறிந்த போது நம்முடைய நட்பு

ஒரு படி உயர்ந்ததாக எனக்குத் தோன்றியது. நான் உன் விருப்பப்படியே மோகனூர் போயிருந்தேன். உனக்காகப் போகவில்லை; போக வேண்டிய சந்தர்ப்பமும் நேர்ந்தது. சந்திர கிரகணம் வந்ததாதலால் நானும் என் தாயார் தகப்பனாரும் காவேரி ஸ்நானத்திற்காகப் போயிருந்தோம். அங்கே முருகக் கடவுள் கோயிலுள்ள காந்த மலையைப் பார்த்து வருவதாகச் சொல்லிப் புறப்பட்டு நீ குறிப்பிட்ட விஷயங்களை விசாரிக்கத் தொடங்கினேன். நான் அந்தப் பார்வதியைப் பார்க்கலாமென்று சென்றேன். ஆனால் அந்த வீட்டில் அவர்கள் இல்லை.

இரண்டு வருஷங்களுக்கு முன் அவ்வூரில் பெரியம்மை வந்ததாம். சுப்பிரமணிய முதலியார் குடும்பத்தில் எல்லோருக்கும் அம்மை பூட்டி விட்டதாம். முதலியார் அதற்கு இரையாகி விட்டாராம். அந்தப் பார்வதிக்கும் பூட்டியதாம்; ஆனால் அவள் பிழைத்துக் கொண்டாளாம். சுப்பிரமணிய முதலியார் இறந்த பிறகு அவருடைய மனைவியும் பார்வதியும் குழந்தைகளும் காவேரிக்கு அக்கரையில் உள்ள வாங்கல் என்னும் ஊரில் இருக்கும் ரங்கநாத முதலியார் வீட்டுக்குப் போய் விட்டார்களாம். பார்வதிக்கு அவர் மாமா ஆக வேண்டுமாம். மோகனூரிலுள்ள வீட்டில் இப்போது வேறு யாரோ குடியிருக்கிறார்கள்.

இங்ஙனம்
அன்பன்
ராஜரத்தினம்

குறிப்பு :
ஒரு விஷயம் மறந்து விட்டேன். அந்தப் பெண்ணுக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லையாம்.'

ஒரு விதமாகப் பார்வதியின் இருப்பிடம் தெரிந்தது பற்றிச் சந்தோஷப் பட்டான் பரமசிவம். ஆனால் தான் நினைத்தபடி ஒரு பிராயச்சித்தம், பரிகாரம், செய்வதற்கு வழியுண்டா என்பதில் அவனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. மறுபடியும் தன் நண்பனுக்கு எழுதலானான் :

'அன்ப,

முதலில் என்னுடைய நன்றியை ஏற்றுக் கொள். எனக்காக நீ இவ்வளவு விஷயங்களை விசாரித்தது குறித்து மிகவும் சந்தோஷம். ஆனால், நீ செய்த உபகாரம் பூர்த்தியாக வேண்டுமானால் மற்றோர் உபகாரமும் செய்ய வேண்டும். நீ வாங்கலுக்குப் போய் பார்வதி இருக்கிறாளா, உண்மையில் கல்யாணம் ஆகவில்லையா என்பதை விசாரித்து வர வேண்டும். இந்த விஷயங்களெல்லாம் உனக்குப் பைத்தியக்கார விவகாரங்களாகத் தோன்றலாம். ஆனாலும் எனக்காக இதைச் செய்ய வேண்டும். உன்னை நான் முழுதும் நம்பியிருக்கிறேன்'

என்று ராஜரத்தினத்திற்கு எழுதினான். மறுவாரம் விவரமாகக் கடிதம் வந்தது.

'பார்வதியைப் பார்த்தேன். இன்னும் கல்யாணம் ஆகவில்லை என்பது வாஸ்தவந்தான். அம்மை வடுக்கள் அவள் முகத்தில் இருந்தது கொண்டு அவளுக்கு அம்மை பூட்டியது உண்மையே என்று அறிந்து கொண்டேன். அவளுக்குச் சமீபத்தில் கல்யாணம் ஆனாலும் ஆகலாமென்று சொல்லிக் கொண்டார்கள்.'

இந்தக் கடிதத்திலே அவனுக்குச் சந்தோஷமும் இருந்தது. துக்கமும் இருந்தது. கல்யாண ஏற்பாடுகள் ஆவதற்குள் தன் கருத்தை முடித்துக் கொள்ள எண்ணித் தன்னுடைய உள்ளத்துள்ளே புதைந்து கிடந்த விஷயத்தைத் தன் அந்தரங்க நண்பனுக்கு எழுதினான். அவன் இந்தத் தடவை எழுதின பதில் மிகவும் கடுமையாக இருந்தது.

'அட பைத்தியமே; அந்தப் பெண்ணின் அம்மை வடுவைப் பார்த்தாலே பயங்கரமாக இருக்கிறதே. உன்னுடைய லக்ஷணம் எங்கே அவள் அவலக்ஷணம் எங்கே! இந்த விஷயத்தை நீ முன்பே தெரிவித்திருந்தாயானால் நான் இவ்வளவு சிரமப்பட்டிருக்க மாட்டேன். உன் தகப்பனாருடைய அந்தஸ்துக்கும் அவர் உன்னை வைத்திருக்கும் கௌரவத்துக்கும்

இந்தக் குரூபியைக் கல்யாணம் பண்ணிக் கொள்வது மிகவும் ஏர்வைதான்! அட அசடே! இந்த அபூர்வ யோசனை உன் மூளையிலே எப்படி உற்பத்தி ஆயிற்று? இனிமேல் இந்த விஷயத்தை மறந்து விடு. நீ இதைப் பற்றி மேலே முயன்றால் உன்னுடைய அப்பாவுக்கு எழுதி விடுவேன்.'

இந்தக் கடிதத்தைப் பரமசிவம் படித்ததிலிருந்து அவனுக்குத் துக்க பொங்கி வந்தது., ஏதோ அரிய வஸ்துவை இழந்து விட்டதாக ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. யோசனையில் ஆழ்ந்து விட்டான்.

'ஆம். அயன் சொல்வதில் உண்மை இருக்கிறது. என் தகப்பனார் இதற்குச் சம்மதிப்பாரா? அவர் ஏதாவது பிரமாதமாக ஆகாயக் கோட்டையல்லவா கட்டியிருப்பார்? அவருக்கு இது திருப்தியாகவே இராதே. என்ன செய்வது? இதற்கு ஒரு வழியும் இல்லையா? ஈசுவரா! என் மனத்தை நான் இளமையிலேயே செய்த பாவம் பிய்த்துத் தின்னுகின்றதே! அதைப் போக்கிக் கொள்ள வேண்டாமா? இது என்ன பைத்தியக்கார உலகம்? இந்த உலகம் பணத்திலும் புறத் தோற்றத்திலும் மதிப்பு வைத்திருக்கிறதே. உள்ளம் உணர்ச்சி, இரக்கம், அன்பு இந்த மாதிரி விஷயங்கள் செல்லாக் காசுகளா?'

'மூன்றாம் பேருக்குத் தெரியாமல் காரியத்தை முடித்துக் கொள்ளலாமா?' என்று ஒரு யோசனை தோன்றியது. அதனால் விளையும் அபாயங்களை அவன் நினைத்துப் பார்த்தான். அவன் மனம் தத்தளித்துத் தவித்து ஊசலாடியது. என்னவோ ஒரு பைத்தியக்கார யோசனை தோன்றியது. விறுவிறு என்று ஒரு கடிதம் எடுத்து வாங்கல் ரங்கநாத முதலியார் என்னும் விலாசத்திற்குப் பின்வருமாறு எழுதினான் :

'ஐயா, இந்த வருஷம் பார்வதிக்குக் கல்யாணம் செய்ய வேண்டாம். அடுத்த வருஷம் உங்களைத் தேடிக் கொண்டு ஒரு மாப்பிள்ளை வருகிறான். இது விளையாட்டல்ல. தெய்வத்தின் மேல் ஆணை.

உங்கள் நண்பன்'

3

அன்றே பரமசிவம் தன் தகப்பனாருக்கு ஒரு கடிதம் எழுதினான். தனக்குப் பிடித்த பெண் ஒருத்தி இருப்பதாகவும் அவளைத் தான் கல்யாணம் செய்து கொள்ள எண்ணி இருப்பதாகவும் பெண் வீட்டார் ஏழைகள் என்றும் அந்தப் பெண்ணை மணப்பதற்குத் தடை செய்யக் கூடாது என்றும் எழுதியிருந்தான். அவனுடைய தகப்பனார் அதைப் பார்த்துச் சிரித்தார். ''உன் பிள்ளையின் பவிஷைப் பார்! எங்கேயோ ஒரு பெண்ணைப் பிடித்திருக்கிறான் போலிருக்கிறது. என்ன தர்ம சங்கடமோ!'' என்று தம் பத்தினியைப் பார்த்துச் சொன்னார்.

''அப்படி ஒன்றும் தப்புத் தண்டாவுக்குப் போகிறவன் அல்ல அவன். ஏதோ நம்முடைய சாதியிலே நல்ல பெண்ணாக இருக்கும். ஏழையாயிருந்தால் என்ன? அவள் கொண்டு வந்து தானா நாம் சாப்பிட வேண்டும்? அவன் மனசு பிடித்தால் அதுவே போதும்'' என்று அவள் பதில் கூறினாள்.

ஸப் இன்ஸ்பெக்டருக்குக் கோபம் வந்து விட்டது. ''பிள்ளைக் கேற்ற தாய்தான்!'' என்று உறுமினார். ''இந்தப் பயலுக்குச் செல்லம் கொடுத்ததெல்லாம் இதற்குத் தானா?'' என்று முழங்கினார். தம் பிள்ளைக்குப் பதிலே போடவில்லை; மற்றொரு கடிதம் வந்தது : ''நான் விளையாட்டுக்கு எழுதவில்லை. எல்லாம் ஆண்டவன் செயல். ஆண்டவன் அருளை முன்னிட்டு இந்தத் தீர்மானத்துக்கு வந்திருக்கிறேன்; உங்களுடைய அநுமதியை வேண்டி நிற்கிறேன். என் மனந்தில் இருக்கும் வேதனை தீர வேண்டுமானால் இதற்கு ஸம்மதியுங்கள்.'

அதென்ன வேதனை? ஈசுவர சாக்ஷியாம்! ஆண்டவன் செயலாம். ஸப் இன்ஸ்பெக்டருக்கு ஒன்றும் புரியவில்லை. 'பயல் எங்கேயோ இந்தக் காந்திக் கட்சியில் சேர்ந்து கொண்டு அசட்டுப் பெண் ஒருத்தியைப் பார்த்துப் பிரமித்திருக்க வேண்டும்' என்று அவர் எண்ணினார். அவர்

நினைப்பு முழுவதும் தப்பல்ல. பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு மிஞ்சி உலகத்தைக் கரையேற்றப் புண்ணியாத்மாக்களும் சௌரியவான்களும் இல்லை என்பது அவருடைய திட நம்பிக்கை. அவர் பிள்ளை பரமசிவத்துக்கோ தியாகத்திலும் அகிம்சையிலும் இந்தியர்களின் பாரமார்த்திகத்திலும் பித்து. காந்தி மகாத்மாவைப்பற்றி அவன் நன்றாக உணர்ந்திருந்தான்.

ஸப் இன்ஸ்பெக்டருக்கும் அவருடைய மனைவிக்கும் சண்டை வந்தது. "நீ போய்க் குஷாலாகக் கல்யாணம் செய்து வை; நான் வரமாட்டேன். இந்த அதிருஷ்டனனுக்கு நல்லதென்றால் ஆகுமா?" என்று அவர் கோபித்துக்கொண்டார். அம்மணியம்மாளுக்குத் தன் மகன் சுபாவம் தெரியும். எல்லாம் நல்லதாக முடியும் என்ற நம்பிக்கையும் இருந்தது. ஆனாலும் புருஷனுக்கு வகை சொல்ல முடியவில்லை.

ரகசியமாக அவள் ஒரு கடிதம் எழுதித் தன் மகனுக்கு அனுப்பினாள். ஒருமுறை நேரில் வந்து விவரமாக விஷயத்தைத் தெரிவித்து விட்டுப் போகும்படி எழுதினாள். பரமசிவம் அந்தக் கடிதம் கண்டவுடன் வந்தான். அவனுடைய வேகம் அதிகமாகத்தான் இருந்தது. ஆனால் தன் தகப்பனார் கேட்கும் கேள்விக்கு என்ன பதில் சொல்வான்?

ஃ ஃ ஃ

"முன் பின் பாராமல் இப்படி நிச்சயம் பண்ணலாமா?" என்று கேட்டாள் அன்னை.

"இல்லையம்மா! எல்லாம் ஈசுவர ஆக்ஞை. இதற்கு அப்பா உடன்படாவிட்டால் நான் சந்நியாசியாகவே காலம் கழித்து விடுகிறேன். என் மனசிலுள்ள ஒரு வேதனை தீர்வதற்கு இந்த ஒரு மார்க்கந்தான் உண்டு. இல்லாவிட்டால் என் வாழ்க்கையில் சந்தோஷம் இராது."

"என்னடா அப்பா! உன் பேச்சு விபரீதமாக இருக்கிறதே. பெண் அழகாய் இருக்கிறாள் என்று சொல்லலாம்; நல்ல குணமென்று சொல்லலாம்; இன்னும்

ஏதாவது சொல்லலாம். என்னவோ வேதனை என்கிறாய். அப்படிப்பட்ட வேதனை என்ன? அதைத் தீர்க்கும் சக்தி அந்தப் பெண்ணுக்குத்தான் இருக்கிறதா? அப்படிப்பட்ட அந்த மோகினி யாரப்பா?''

''அதெல்லாம் வாயினாலே சொல்லி முடிகிற விஷயம் அல்ல. மனசும் மனசும் அறிந்து கொள்ளும் விஷயம்.''

அவன் சொல்வது ஒன்றும் தாய்க்கு விளங்கவில்லை. ஆனால் அவன் பேசும் தோரணையிலிருந்து அவனுக்கு ஒரு பெரிய மனவேதனை இருப்பதாகத் தெரிந்தது. அவள் தாய்க்குரிய அன்பினால் இரங்கினாள்; விஷயம் புரியாமல் அழுதாள்.

''அம்மா, கல்யாணம் என்பது இங்கே விஷயம் அல்ல. மனிதன் தான் செய்யும் பாவங்களுக்கு இந்த ஜன்மத்திலே பிராயச்சித்தம் பண்ணிக்கொள்ள வேண்டும். எங்கும் நிறைந்திருக்கும் கடவுளுடைய முன்னிலையில் ஒரு தப்புச் செய்தால் அதற்காக வருந்திப் பரிகாரம் செய்து மனம் உருகினால் அவனுக்கு அத்தெய்வத்தின் அருள் சித்திக்கும்.''

''உன் வேதாந்தம் மோதுமடா! இது கல்யாணப் பேச்சாக இல்லையே!'' என்று அவள் அழுதாள்.

அவன் மனம் கல்லாகச் சமைந்திருந்தது. ஆனால், அந்தக் கடினம் ஒருபுறத்தில்தான்; மற்றொரு புறத்தில் அது மிகவும் அதிகமாக இளகி யிருந்தது; சென்றதற்கு இரங்கி நைந்து கரைந்து உருகியது.

''எப்படியாவது தொலைந்து போங்கள். என் கண் முன் இனிமேல் அவன் இருக்க வேண்டாம். எங்கேயாவது போய் எப்படியாவது படித்துக் கொள்ளட்டும். ஒரு தம்பிடி இனிமேல் நான் தரமாட்டேன்'' என்று சொல்லி விட்டார் தகப்பனார். அவர் போலீஸ் வீரர் அல்லவா?

4

ரங்கநாத முதலியாருக்கு அந்தக் கடிதத்தைக் கண்ட போது ஒன்றும் புரியவில்லை. 'யார் இவ்வளவு அக்கறை

யாகத் தெய்வத்தின் மேல் ஆணையிட்டு எழுதி யிருப்பார்கள்?' என்று யோசித்தார். யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? பார்க்கலாமென்று கல்யாண முயற்சியை நிறுத்திக் கொண்டார்.

டிசம்பர் மாதம் கிறிஸ்துமஸ் விடுமுறையில் பரமசிவம் வாங்கலுக்கு வந்தான். ரங்கநாத முதலியாருடைய வீட்டிற்குச் சென்று, தானே கடிதம் எழுதியதாகவும். தக்க வரன் ஒருவனைப் பார்த்திருப்பதாகவும் முடிந்தால் தை மாதம் கல்யாணம் நடத்திடலாமென்றும் சொன்னான். அன்று அவனுக்கு ஒரு புதிய ஆச்சரியமான விஷயம் தெரிய வந்தது. ரங்கநாத முதலியார் வீட்டில் இரண்டு பார்வதிகள் இருந்தார்கள்; ஒருத்தி அவர் பெண். மற்றொருத்தியே பரமசிவம் தேடிய பார்வதி. அம்மை வார்த்த முகத்தை உடையவள் ரங்கநாத முதலியார் பெண். அவளுக்குக் கல்யாணம் ஆகியிருந்தது; தன்னுடைய பார்வதியோ சர்வாங்க சுந்தரியாக இருந்தாள். தன் நண்பன் அவசரத் தில் ஒன்றுக்கொன்று தாறுமாறாக விசாரித்து எழுதி விட்டானென்று அப்பொழுது அவன் ஊகித்து அறிந்து கொண்டான். அம்மாவைக் கொண்டு வந்து காட்டி எப்படி யாவது சம்மதம் பெற்று விடலாமென்று ஒரு துணிவு பிறந்தது.

''நீங்கள் யார் என்று சொல்லவில்லையே'' என்று கேட்டார் முதலியார்.

''அதெல்லாம் பிறகு தெரியும்'' என்று சொல்லி விட்டு விடை பெற்றுக் கொண்டான் பரமசிவம்.

தாயை அழைத்துக் கொண்டு வந்து காட்டினான். ''அடே, நம்ம சுப்பிரமணிய முதலியார் பெண் பார்வதி; இவளைத்தான் நீ ஒரு நாள் அடித்து விட்டாய். அதற்காக உங்கள் அப்பாவுக்கும், இவள் அப்பாவுக்கும் சண்டையாகி விட்டது'' என்று பழைய கதையை அவள் ஞாபகப்படுத்திக் கொண்டு சர்வ சாதாரணமாகச் சொன்னாள்.

அதைக் கேட்கும்போது அவனுக்கு நெஞ்சு அடித்துக்

கொண்டது. பழைய ஞாபகங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்தன. பெருமூச்சு விட்டான். "அதற்குத்தான் இது பரிகாரம்" என்று சொல்ல வாயெடுத்தான். ஆனால் அது வெளிவரவில்லை.

கல்யாணம் நடைபெற்றது. இன்ஸ்பெக்டர் அவர்களுடைய மனோரதம் போன்ற விமரிசை இல்லாவிட்டாலும் இதற்குத் தனிச் சிறப்பு இருக்கத்தான் இருந்தது. ரங்கநாத முதலியார் அந்த ஊர் மணியகாரர். அவருக்கு இருந்த செல்வாக்கில் அந்த ஊருக்கு அவரே ராஜா. கல்யாணம் அவர் அந்தஸ்துக்கு மேல் எவ்வளவோ விமரிசையாக நடந்தது. ஸப் இன்ஸ்பெக்டர் வேண்டா வெறுப்பாக கல்யாணத்திற்கு வந்திருந்தார். அவரைக் கல்யாணத்திற்கு வரும்படிச் செய்வதற்கு அம்மணியம்மாள் கெஞ்சியும் கொஞ்சியும் அழுதும் புகழ்ந்தும் நயந்தும் பயந்தும் செய்த முயற்சிகள் பல.

இரவு. காதலர்கள் சந்தித்ததும் பரமசிவம் பார்வதியோடு பேசவில்லை. அவளுடைய கையை எடுத்தான்; அதனால் தன் கன்னத்தில் ஓர் அறை அறைந்து கொண்டான். பளீரென்று சப்தம் உண்டாயிற்று; உடனே குழந்தை போல விம்மி விம்மி அழுதான்; ஒரு பெருமூச்சு விட்டான். "இதற்காக என் நெஞ்சு கிடந்து துடித்தது எத்தனை யென்பது உனக்குத் தெரியுமா? அன்று உன்னை அறைந்த அறை மீண்டும் உன் கையால் கிடைத்தாலன்றி என் பாவம், என் குற்றம், தீராதென்கிற எண்ணம் என் நெஞ்சிலிருந்து அறுத்துக் கொண்டே இருந்தது. அதற்காகத்தான் இவ்வளவு சிரமப்பட்டேன்" என்றான் அவன்.

"ஆனால் என்பால் உங்களுக்குக் காதலில்லையா? என்னை அடித்ததற்காக ஏற்பட்ட கருணைதானா?"

"அதுவும் கூட உண்டு.

"அதற்கு அடையாளம்?"

"இதுதான்."

காதலின் முத்திரையை அவர்கள் வைத்துக் கொண்ட சப்தம் யாருக்கும் கேட்கவில்லை.

ஆபீஸ் மானேஜர்

தாமோதர செட்டியார், புதிதாக ஆரம்பித்த ''குட்ரயுக்தி'' என்னும் பத்திரிகையின் ஆசிரியர். அவருக்கு மாதம் ஐம்பது ரூபாய் சம்பளம். அவருடைய தர்மபத்தினி லோக விஷயங்களுக்கெல்லாம் அகராதி. விளக்கு மாற்றுக்கு விலை முதல், வியன்னா நகரத்துச் சமாசாரம் வரையில் அவளுக்குத் தெரியும். தாமோதர செட்டியாரை நச்சு நச்சு என்று நச்சி ஒவ்வொரு சமாசாரமாக அறிந்து கொள்வாள்.

செட்டியார் நல்ல எழுத்தாளர் என்று சொல்வதற்கு இல்லை. அவருக்குச் சுமாராகக் கதை எழுதத் தெரியும்; கட்டுரையும் எழுதுவார். எல்லாம் ஒரே மூச்சில் எழுதினால் தான் வரும். ஏதாவது எழுத ஆரம்பித்தால், யோகம் செய்பவர் மாதிரி ஏகாக்கிரசித்தம் உடையவராகி விடுவார். காரியாலயத்தில் அவருடைய ஏகாக்கிரசித்தத்திற்குப் பங்கம் வருவதில்லை. வீட்டிலோ அவருடைய சகதர்மிணிக்கு அவர் எழுதத் தொடங்கும்போது தான் சந்தேகங்கள் வந்து விடும்.

ராத்திரி சாப்பிட்டு விட்டு ஏதாவது கதை எழுத உட்காருவார். அவர் தர்ம பத்தினி அருகில் இருப்பாள்.

''இன்றைக்கு வெற்றிலைக்காரன் ஏன் வரவில்லை?'' என்று ஒரு கேள்வி போடுவாள். அப்பொழுது தான் செட்டியார் ஒரு காதல் கதையைச் சித்திரித்துக் கொண்டிருப்பார்.

''ஜப்பான் யுத்தத்தினால் பவுன் விலை ஏறப்போகிறதாமே?'' என்று வெளிநாட்டு வியவகாரத்தில் பாயும் அம்மாளுடைய கேள்வி.

''கொஞ்சம் பேசாமல் இரு'' என்று சொல்லி விட்டுச் செட்டியார் எழுதத் தொடங்குவார். நாலு வரி எழுதி இருப்பார்.

''நேற்று வந்த கடிதத்திற்கு இன்னும் பதில் போடவில்லையா?'' என்று அம்மாள் கேட்பாள்.

''ஹூம்'' என்று கோபத்தோடு கர்ஜிப்பார் செட்டியார். மறுபடி இரண்டு நிமிஷம் அம்மாள் வாயைத் திறவாமல் வெற்றிலையை மெல்லும் காரியத்தில் ஈடுபட்டிருப்பாள்.

''பியாகடை ராகத்தில் இன்று ஒரு கீர்த்தனம் பாடம் பண்ணியிருக்கிறேன்'' என்று சங்கீதத்தை ஆரம்பிப்பாள்.

''என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளாதே'' என்று உறுமுவார் செட்டியார்.

''இந்தாருங்கள் பானை ஜலம்; குடியுங்கள்; அடங்கி விடும்'' என்று தம்ளரில் ஜலத்தை எடுத்து முன்னே வைப்பாள். செட்டியார் ஆத்திரத்தோடு அதை எடுப்பார். அவள் முகத்திலேதான் கொட்டப் போகிறாரென்று நமக்குத் தோன்றும். அவரோ வாயைத் திறந்து இரண்டு மிடறாகக் குடித்து விடுவார்.

ஃ ஃ ஃ

செட்டியாரால் நாள்தோறும் இந்தத் தொல்லை பொறுக்க முடியவில்லை. வீட்டை விட்டுத் தனியாக ஓர் அறை வாடகைக்குப் பேசி அதில் ராத்திரி வேளைகளில் இருந்து கதைகள் எழுதலாமென்று யோசித்தார். தனியே ஐந்து ரூபாய்க்கு ஓர் அறை பார்த்து விடுவதென்று தீர்மானித்துக் கொண்டார்; அவளிடம் சொல்லவே கூடாது'' என்றும் சங்கற்பம் செய்து கொண்டார். அந்தச் சங்கற்பம் நழுவி விட்டது. பேச்சுப் பராக்கில் அந்த விஷயத்தைத் தம் தர்மபத்தினிக்குச் சொல்லி விட்டார்.

''நல்ல காரியம்; உங்கள் புஸ்தகங்களைக் கூட அங்கே வைத்துக் கொள்ளலாம். இங்கே காற்றே வருவதில்லை. ஆனால்—''

''ஆனால் என்ன? சொல்லித் தொலை!''

''நான் உங்கள் யோசனைக்குக் குறுக்கே நிற்கவில்லையே; நீங்கள் ஏன் இப்படிக் கோபித்துக் கொள்கிறீர்கள்? இந்த வீட்டுக்குப் பதிமூன்று ரூபாய் வாடகை; அறைக்கு ஐந்து ரூபாய். ஆக மொத்தம் வீட்டு வாடகை

வகையில் பதினெட்டு ரூபாய் போய்விடும். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. சொல்வதற்கு முன் கோபித்துக் கொள்கிறீர்கள்.''

''சொல்லேன்.''

''பதினைந்து ரூபாயில் இதைவிடப் பெரிய வீடு ஒன்று பார்க்கிறது. அதில் ஓர் அறையை 'ஆபீஸ் ரூம்' ஆக வைத்துக் கொள்வது. அதில் உங்களைத் தவிர வேறு ஒருவரும் போகக் கூடாது, ராத்திரியோ பகலோ நீங்கள் இஷ்டப்படி இருந்து எழுதிக் கொண்டிருக்கலாம்.

செட்டியார் தலையைச் சொறிந்து கொண்டார்: சகதர்மிணியின் யோசனையில் நன்மை இருப்பதாகவே நினைத்தார்.

''நீ அங்கேயும் வந்து தொந்தரவு செய்தால்?''

''இல்லவே இல்லை. நீங்கள் வேண்டுமானால் 'ஆபீஸ் ரூம் - ஒருவரும் நுழையக் கூடாது' என்று போட்டு விடுங்கள்.

ஃ ஃ ஃ

செட்டியார் புது வீட்டுக்குக் குடி வந்தார். ஓர் அறை 'ஆபீஸ் ரூம்' ஆயிற்று. புஸ்தகங்கள், மேஜை, நாற்காலி, பெஞ்சு முதலிய சாமான்களோடு அது விளங்கிற்று.

வந்த இரண்டாம் நாள் செட்டியார் ஏதாவது எழுதலா மென்று யோசித்தார். ஒன்றும் தோன்றவில்லை. தாகமாக இருந்தது; மனைவியைக் கூப்பிட்டு ஒரு தம்ளர் ஜலம் கொண்டு வரச் சொன்னார். அவள் கொண்டு வந்து 'ஆபீஸ் ரூமின்' நிலைக்கு அப்புறத்திலேயே வைத்துப் போய்விட்டாள். செட்டியார் எழுந்து சென்று எடுத்துக் குடித்து விட்டு வந்தார்.

''உள்ளே வந்து கொடுக்கக் கூடாதோ?'' என்று முணுமுணுத்தார் செட்டியார்.

''நீங்கள் உள்ளே ஒருவரும் நுழையக் கூடாதென்று எழுதியிருக்கிறீர்களே?'' என்று பதில் வந்தது.

மறுநாள் காலையில் செட்டியார் தமக்குப் பிரியமான கம்ப ராமாயணத்தை எடுத்துப் படித்தார். பாரதி பாட்டு, வா. வே. ஸு. ஐயர் கதைகள் இன்னும் சில புஸ்தகங்கள் இவற்றைப் புரட்டிப் பார்த்தார். ஆபீஸுக்கு நேரமாகி விட்ட படியால் போட்டது போட்ட படியே இருக்கக் கிளம்பி விட்டார். மாலையில் வந்து பார்த்தார். எல்லாப் புஸ்தகங்களும் காலையில் இருந்தபடியே பாதி திறந்தும் சிதறியும் கிடந்தன.

''இந்தப் புஸ்தகங்களை எல்லாம் ஒழுங்காக எடுத்து வைக்கக் கூடாதா?'' என்று தர்ம பத்தினியைக் கேட்டார்.

''உங்கள் 'ஆபீஸ் ரூமி'ல் நான் எப்படி நுழைவேன்!'' என்று கூறினாள் அவள்.

''இந்த மாதிரியான காரியங்களை நீ கவனிக்காமல் வேறு யார் கவனிப்பார்கள்?'' என்று கோபமாகக் கேட்டார் செட்டியார்.

ஃ ஃ ஃ

ராத்திரி மிகவும் சுவாரஸ்யமாகக் கதை எழுதிக் கொண்டிருந்தார் பத்திரிகாசிரியர். பேனாவில் மை ஆகி விட்டது. ''எங்கே, அந்த மை புட்டியை எடு!'' என்றார்.

''நான் நீங்கள் கதை எழுதும் போது வந்தால் தொந்தரவல்லவா? உங்கள் 'ஆபீஸ் ரூமி'ல் நான் நுழையலாமா?'' என்று கேட்டுக் கொண்டே நிலைக்கு வெளியில் நின்றாள் அந்த அம்மாள்.

''இந்தா, இந்தமாதிரி தினந்தோறும் வாக்குவாதம் வேண்டாம். 'ஆபீஸ் ரூமு'ம் வேண்டாம்; ஒரு மண்ணும் வேண்டாம். என் பக்கத்திலேயே வராமல் தீண்டாச் சாதியாக இருந்தது போதும்'' என்றார் செட்டியார். அவருக்கு 'ஆபீஸ் ரூம்' ஏற்பாடு சலித்து விட்டது.

''நான் ஒரு யோசனை சொல்கிறேன்'' என்று சிரித்தாள் அவர் மனைவி.

''சொல்லேன்'' என்று புன்னகையோடு அவளைக் கோணலாகப் பார்த்தார் செட்டியார்.

"இந்த 'ஆபீஸ் ரூம்' இப்படியே இருக்கட்டும். நீங்கள் இந்த ஆபீஸின் சொந்தக்காரராகவே இருங்கள். என்னுடைய உதவியில்லாமல் உங்கள் ஆபீஸ் வேலை நடக்காதபடியினால் நான் இந்த 'ஆபீஸ் மானேஜ'ராக இருக்கிறேன். ஏன்? சரிதானே?"

"சபாஷ்!" என்று மேஜைமேல் தட்டினார் செட்டியார் உத்தரவை எதிர்பாராமலே நிலைக்கு வெளியில் நின்றிருந்த 'மானேஜர்' உள்ளே புகுந்தார்.

உயர்ந்த சித்திரம்

ராமசந்திரனை நான் இரண்டு மாத காலத்தில் அளந்து விட்டேன். மங்கலத்துக்கு வந்து இரண்டு மாதங்களுக்குள் ஓர் அரிய நண்பனைக் கண்டு பிடித்தது எனக்கு ஒரு பெரிய லாபந்தான். அவனோ சிறந்த கலாரசிகன். இணையற்ற ஓவியப் புலவன். அவனுடைய சித்திரங்கள் நாளுக்கு நாள் ஜீவ களையைப் பெற்று வந்தன. அவை புகாத காட்சிகளே இல்லை.

எனக்குச் சித்திரங்களின் கலை நுட்பங்களை அறியும் தகுதியில்லை. ஆனாலும் கலைகளில் அபிமானமும், கலைப் புலவர்களிடம் அன்பும் உண்டு. சித்திரத்தை அநுபவிக்கும் ஆற்றல் ராமச்சந்திரன் பழக்கத்தால் எனக்கு அதிகமாகிக் கொண்டு வந்தது.

அவனுடைய அநாயாஸமான செயல்களில் எத்தனை விசித்திரமான விளைவுகள்! அவனுடைய நட்பைப் பெறுவதற்கு நான் என்ன தவம் செய்திருக்க வேண்டும்! கலைத் திறமை கிடக்கட்டும். அவனுடைய குணந்தான் என்ன சாமான்யமானதா? அவனது நெகிழ்ந்த உள்ளத்திலே பொங்கும் அன்பினது நிலையை, அவனோடு பழகின

வர்களே அறிந்து கொள்ள முடியும். குழந்தைகள் என்றால் அவனுக்குப் பிராணன். அவனுடைய வீட்டுக்கு வரும் எந்தக் குழந்தையும் வெறுங் கையோடு திரும்பாது. பிஸ்கோத்து, கற்கண்டு, திராக்ஷை, பேரீச்சம் பழம் முதலியவை அவனிடம் எப்பொழுதும் தயாராக இருக்கும்.

"என்னுடைய சித்திரக்கூடத்தை நீ பார்த்தது இல்லையே?" என்று கேட்டான் ராமச்சந்திரன்.

"அப்படியென்றால்—......" என்று நான் இழுத்தேன்.

"உலகத்திற் சிறந்த சித்திரங்கள் சிலவற்றைப் பொறுக்கி ஓர் அறையில் வைத்திருக்கிறேன். அந்த அறைக்கு நானாகக் கொடுத்த பெயர் சித்திரக்கூடம் என்பது."

"அப்படியா! நான் பார்த்ததே இல்லையே. பார்க்க வேண்டாமா?" என்று ஆவலுடன் கேட்டேன்.

"நன்றாயிருக்கிறது! நீ பார்க்காமலா? நாளைக்கே காட்டுகிறேன்" என்றான்.

சிறிது நேரம் என்னோடு என் வீட்டிற் பேசியிருந்து விட்டுச் சென்றான்.

மறுநாள் சித்திரக்கூட தரிசனம் ஆயிற்று ஆஹா! என்ன அற்புதம்! என்ன விசித்திரம்! ஒரு சிறந்த சித்திரக் காரனால் தேர்ந்தெடுக்கப் பட்டனவென்றால், அவற்றின் சிறப்பை நானா சொல்லப் போகிறேன்? வர்ண விசித்திரங் களும், நிழல் விசித்திரங்களும் என் கண்களை அப்படி அப்படியே தம்பால் பதித்துக் கொண்டன.

"இது என்ன?" என்று தூக்கி வாரிப் போட்டாற் போலக் கேட்டேன். அத்தனை விசித்திரமான சித்திரங் களுக்கு நடுவில் மிக அலங்காரமான சட்டத்தோடு ஒரு படம் மாட்டப்பட்டிருந்தது. பல தெய்வ ரூபங்களுக்கு இடையில், மலையாள பகவதியின் படம் மாட்டி யிருந்தால் எப்படி யிருக்கும்? அப்படித் தோற்றியது எனக்கு. அந்தப் படத்தில் வெறும் வர்ணக் குழம்பைக் கொட்டினது போல ஒரு மொத்தையான உருவந்தான் இருந்தது.

"அதுவா!" என்று சொல்லி ராமசந்திரன் பெருமூச்சு விட்டான்.

''இது திருஷ்டி பரிகாரத்திற்காக மாட்டப்பட்டு இருக்கிறதோ? அப்படியானால் இங்கே, நடுவில் மாட்டு வானேன்?'' என்றேன் நான்.

''அவசரப்படாதே. நான் சொல்வதைச் சாவதானமாகக் கேள்'' என்று பீடிகை போட்டுவிட்டு, மற்றொரு பெருமூச்சு விட்டான். அந்தப் பெருமூச்சின் அர்த்தத்தை என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. அவன் சொல்ல ஆரம்பித்தான்.

''பத்து வருஷங்களுக்கு முன் நடந்த சமாசாரம். அந்த நிகழ்ச்சியை இந்தப் படம் எனக்கு நினைவூட்டுகிறது. இதற்கு ஒரு தனி ஜீவன் உண்டு. அதை நான் அநுபவிக்க முடியும். எனக்கு ஒரே ஓர் ஆண் குழந்தை இருந்தது. அதன் சுறுசுறுப்பும் புத்திசாலித்தனமும் இந்த ஊரில் உள்ளவர்களுக்கே வியப்பைத் தந்தன. அதன் கை விரல்கள் ஒரு சித்திரகாரனுக்கு ஏற்ற வண்ணம் அமைந்து இருந்தன. என்னுடைய கலையை அழியாமல் காப்பாற்ற வந்த தெய்வமாக நான் கருதி இருந்தேன். ஆனால் தெய்வத்திற்குச் சம்மதமில்லை.........''

மறுபடியும் பெருமூச்சு. ஒரு நிமிஷம் மௌனம்.

''ஒரு நாள் சித்திரத்துக்கு வர்ணம் தீற்றுவதற்காக நீல வர்ணத்தைக் குழைத்து வைத்திருந்தேன். எதையோ எடுக்க உள்ளே போயிருந்தேன் அதற்குள் அந்தக் குழந்தை தன் வலக்கையை அந்த வர்ணத்தில் தோய்த்து, மிகவும் நிதானமாக, அருகிலிருந்த காகிதத்தில் பதிய வைத்துக் கொண்டிருந்தது. அதன் கை விரல்கள் அப்படியே அதில் பதிந்தன. நான் வந்து பார்க்கையில், அந்தச் சித்திரம் பூர்த்தியாக அமைந்திருந்தது. எனக்கு அதன் அருமை அப்பொழுது தெரியவில்லை. அதை எடுத்துக் குப்பைக் கூடையில் போட்டு விட்டேன். மறுநாளே குழந்தைக்கு காலன் ஓலையனுப்பி விட்டான். திடீரென்று மாந்தம் கண்டு இறந்து விட்டது. அதற்காக அழாதவர்கள் இந்த ஊரிலே இல்லை. அக்குழந்தை ஒரு சிறந்த சித்திர

காரனாகும் என்ற என் கனவெல்லாம் வீணாகி விட்டது. அன்று இரவெல்லாம் புரண்டு புரண்டு அழுதேன்.

"மறுநாள் எனக்குத் திடீரென்று அக்குழந்தை தன் கையை வர்ணத்தில் தோய்த்து வைத்த காகிதம் ஞாபகம் வந்தது. விரைவில் குப்பைக் கூடையை எடுத்துத் தேடி அதைக் கண்டு பிடித்தேன். அதைப் பார்த்த போது, அந்தக் கையின் சித்திரம் என் உள்ளத்தை உருக்கியது. இந்த ஸ்வபாவ சித்திரத்தை நாம் வைத்துப் பூசிக்க வேண்டுமென்ற எண்ணம் உதித்தது. அப்புறம் அதைக் கண்ணாடி போட்டு இங்கே வைத்தேன். நாளுக்கு நாள் இதன் அருமை அதிகரித்து வருகிறது. என்னுடைய கனவு மெய்யாகா விட்டாலும், அதன் நிழல் போல இது விளங்கி, எனக்குப் பழைய காட்சிகளை ஞாபகப் படுத்துகிறது. அந்தக் குழந்தை மட்டும் இருந்திருந்தால் ......"

மீண்டும் பெருமூச்சு; மௌனம். இரண்டு நீர்த் துளிகள் ராமச்சந்திரன் கண்களினின்றும் உதிர்ந்தன.

கர்த்தப விஜயம்

1

கேள்விப் படலம்

உத்தராயண புண்ய காலம் ஆரம்பமானதிலிருந்து சூரிய பகவானுடைய கிரகணங்களுக்கு அதிக முறுக்கு ஏறிக் கொண்டு வந்தது. அழுகிக் கிடந்த நோய்க் கிருமிகளை வாட்டி வதக்கி வற்றலாக்கி அழித்து அக்கிரணங்கள் சகல ஜீவர்களுக்கும் உத்சாகத்தை உண்டாக்கத் தொடங்கின.

பகலோனது ஒளி, உலகத்தை அதிக நேரம் தழுவி விளங்கியது; அகஸ் நீண்டது.

பகல் நேரம் அதிகமாவதால் சூரியனுடைய ஆட்சி ஒரு நாளில் அதிகமாகின்றது; ஆதித்தனது தேர் அதிக நேரம் ஓடுகிறது; அதை இழுக்கும் ஏழு பச்சைப் புரவிகளின் கால்கள் அதிக நேரம் சிரமப் படுகின்றன. ஒரு நாளைப் போல ஓய்வொழிவின்றி சதா வான மண்டலத்திலே கிழக்கிலிருந்து மேற்கே நூறு வருஷங்கள், ஆயிர வருஷங்கள், லக்ஷக்கணக்கான வருஷங்களாக ஓடிக் கொண்டிருக்கின்றன அப்பச்சைப் பரிகள். செஞ்சுடர் மூர்த்தியைப் பசுங்கதிர்ப் புரவிகள் இழுத்துச் செல்லுகையில் அச்சுடரோன் ஒளியில் அக் குரகதங்களின் அழகு, பசுஞ்சோதி, எவ்வளவு விதமாகத் தெரிகின்றன! ஆனால் அந்த அழகை அனுபவிப்பவர்கள் யார்? அவைகளுக்கு விடுதலை அளிப்பவர் யார்?

உத்தராயணத்தின் இறுதிக் காலம் அது. காலையில் புறப்பட்டால் வேறொன்றிலும் தம் திருஷ்டியைச் செலுத்தாமல் மேற்கே நோக்கி விரையும் அக்குதிரைகளில் வலக்கை ஓரத்திலுள்ள குதிரை பூவுலகத்தில் எதையோ ஒன்றைக் குனிந்து பார்த்தது. அந்தக் கணத்திலே அது மற்றக் குதிரைகள் ஓடும் லயத்தினின்றும் சிறிது பிசகியது. என்றைக்கும் இல்லாத அந்தப் பிசகை அருணன் கவனித்தான். சுளீரென்று சவுக்கால் ஓர் அடி கொடுத்தான். அது பேரிடியைப் போல உலகமெல்லாம் கிடுகிடுக்கும்படி கேட்டது. மறுபடியும் பழைய லயம் ஒழுங்குபட்டது. அன்று இரவு அந்தக் குதிரைகளை அவிழ்த்து விட்டவுடன் என்றும் இல்லாதபடி அன்று அடி வாங்கிய குதிரையினிடம் மற்ற ஆறும் சென்று அதனை நாவால் வருடிக் கொடுத்தன. ''என்றும் இல்லாத அதிசயம் இன்று நடக்கக் காரணம் என்ன?'' என்று மிகவும் துக்கத்தோடு மெல்ல விசாரித்தன. அந்தக் குதிரை பெருமூச்சு விட்டது. ''நான் பட்ட அடி பிரமாதமன்று; உண்மையிலேயே இன்று நான் ஓர் ஆச்சரியம் கண்டேன். அதை நான் எப்படிச் சொல்வேன்! என் கண்களும் உள்ளமும் குளிர நான் கண்ட காட்சியை எப்படி வருணித்துச் சொல்ல முடியும்? என்ன

அழகு! என்ன தேஜஸ்!'' என்று பாதிக் கண் மூடிய படியே அது பேசத் தொடங்கியது.

''விஷயத்தை நறுக்கென்று சொல்லேன். இந்தக் கவிதைகளெல்லாம் எதற்கு?''

''சொல்லுகிறேன் கேளுங்கள்; நம்முடைய சூரிய பகவான் நீலக் கடலுக்கிடையே தோன்றும் போது அதன் அழகை நாம் பார்க்க முடிவதில்லை. தூரத்தில் இருந்து பார்த்தவர்கள் அந்தக் காட்சியை எப்படியெல்லாம் கொண்டாடுகிறார்கள்!''

''அதற்கும் நீ சொல்ல வந்த விஷயத்திற்கும் என்ன சம்பந்தம்?''

''அவர்கள் கொண்டாடுவது எவ்வளவு பொருத்தமான தென்பதை இன்று நான் அனுபவத்திலே கண்டேன்; இந்தக் கண்களாலே கண்டேன்; இது காரும் கண்டறியாததைக் கண்டேன்; இன்னும் காண்பேன்!''

''இது என்ன, மறுபடியும் பித்தம் தலைக்கேறி விட்டால் போல் இருக்கிறதே. விஷயம் இன்னதென்று சொல்லாமலே மூடு மந்திரம் போடுகிறாயே!''

''சொல்லி விடுகிறேன், கேளுங்கள். ஹே அபாக்கிய வான்களே! பூலோகத்தில் வடக்குப் பாரிசத்தில் பெருங் கடலுக்கு நடுவில் தேஜோ மயமான பெண் குதிரை ஒன்று இருக்கிறது. அதை இன்று கண்டேன். கண்டது முதல் என் அறிவை இழந்து நிற்கிறேன். நாளைக்கு நீங்கள் எல்லாம் பாருங்கள். பார்த்தால் நிச்சயமாக அருணனுடைய சவுக்கின் ஸ்பரிசம் கிடைக்கும். அந்தக் காட்சியைக் காண்பதற்கு எவ்வளவு சவுக்கடியானாலும் வாங்கிக் கொள்ளலாம்.''

ஃ ஃ ஃ

அடுத்த நாள் எல்லாக் குதிரைகளும் வடவையின் அழகைக் கண்டு சொக்கிப் போயின. அதைப் பற்றியே ரகசியமாகப் பேசிக் கொண்டன. அது முதல் தினந்தோறும் வடவையைச் சந்திப்பதைப் பற்றியே அவை இரவெல்லாம்

கதை பேசின. பகலில் கண்ணாரப் பார்த்து அப்பெண் குதிரை உருவத்தின் அழகைப் பருகிக் களித்து; ராத்திரியில் அந்த எழில்மேனியை வருணிப்பதிலே ஊக்கமும் இன்பமும் பெற்றன.

இப்படிக் கழிந்துகொண்டு வந்த காலத்திலே ஒரு நாள் விடிய ஐந்து நாழிகைக்கு முன் அருணன் வழக்கம் போல் இந்திர திக்காகிய கிழக்குத் திசையிலே ஏழு பசுங் குதிரைகளையும் கொண்டு வந்து நிறுத்தினான் நிறுத்திவிட்டுத் தான் செய்ய வேண்டிய பூஜை புரஸ்காரங்களை செய்வதற்காக ஆகாச கங்கையை அடைந்தான். அவன் வந்து ஆதித்தனது ரதத்தைப் பூட்டும் வரையில் பச்சைக்குதிரைகள் கொண்ணாரம் போட்டுக் கொண்டிருப்பது வழக்கம். அன்று எதிர்பாராதபடி இந்திரனது குதிரையாகிய உச்சைசிரவம் அந்த வழியே வந்தது. அப்பொழுது சூரிய பகவானுடைய குதிரைகள் வடகடலில் தனியரசாளும் தேஜோமய அசுவ மானினியைப்பற்றித் தங்களை மறந்து பேசிக் கொண்டிருந்தன. அவைகள் பேசிய பேச்சில் இங்கொன்றும் அங்கு ஒன்றுமாகக் காதில் விழ, வந்து கொண்டிருந்த உச்சைசிரவம் அந்த வருணனையை ரசித்தபடி சிறிது நேரம் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டது.

"தூரத்திலிருந்து பார்க்கும் போதே கண்கொள்ளா அழகோடு விளங்கும் அந்தக் குதிரை நல்லாளின் திவ்ய ரூப சௌந்தரியம் அருகிலே சென்று கண்ணாரப் பார்த்தால் எப்படி இருக்கும்!" என்று பெருமூச்சு விட்டது ஒரு குதிரை.

"வடகடலினிடையே வீற்றிருக்கும் அந்த அசுவ மோகினி என்றைக்காவது வானுலகத்துக்கு உலாவ வரக் கூடாதோ!" என்றது வேறொரு புரவி.

"பிரம்ம சிருஷ்டியிலே இவ்வளவு அழகு பொருந்தியிருப்பது அத்யாச்சரியம்!" என்றது மூன்றாவது பரிமா.

"பிரம்ம சிருஷ்டி என்று சொல்லாதே; பிரம்மதேவனுக்கு அவ்வளவு கைவன்மை இருக்க நியாயமே இல்லை. இது பரமேசுவர சிருஷ்டி. ஊர்வசி பெண் குதிரை வடிவம் எடுத்தபோது நம்முடைய சூரிய பகவான்

அவளைக் கண்டு மோகித்துத் தாமும் ஆண் குதிரை வடிவம் எடுத்து அளவளாவினாரே. அவரை மயக்கிய ஊர்வசியின் வடிவம் இப்படித்தான் இருந்திருக்குமோ!''

''இருந்திருக்குமோ என்ற சந்தேகம் என்ன? ஊர் வசிக்குத் தன்னுடைய தெய்வத் திருமேனியின் அழகிலே சலிப்பு வந்திருக்கும். இன்னும் வனப்பு மிக்க ரூபத்தை எடுக்க வேண்டுமென்று ஆசைப்பட்டிருப்பாள். இந்த வடவையின் எழிலைக் கண்டு இம்மாதிரியே ரூபம் எடுத்து இருப்பாள். அவளுக்கு இத்தனை ரூபம் அப்போது கிடைத்திருக்குமோ என்பது சந்தேகந்தான்.''

உச்சைசிரவத்தின் காதில் இந்தச் சம்பாஷணை விழவே, விஷயத்தை விளக்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் தூண்டத் திடீரென்று அந்தக் குதிரைகளின் முன்னே போய் நின்றது. அதைக் கண்டவுடன் பச்சை மாக்கள் தங்கள் பேச்சை நிறுத்திக் கொண்டு, ''பரிக் குலத்தின் சுடர்க்கொழுந்தே, இந்திரனின் பவனியைச் சிறப்பிக்கும் அசுவ அரசனே, பாற்கடலில் அவதரித்த பஞ்ச கல்யாணக் குதிரைப் பிரானே, வருக, வருக'' என்று ஸ்வாகதம் கூறின.

''உங்கள் வருணனைப் பேச்சை நீங்கள் ஏன் நிறுத்தி விட்டீர்கள்? எனக்கும் அது தெரிவதால் தோஷம் ஒன்றும் இல்லையே'' என்று நேரே விஷயத்துக்கு வந்து விட்டது வாசவன் வாகனம்.

பச்சைப் பாய்மாக்கள் ஒன்றையொன்று திகைப்புடன் பார்த்துக் கொண்டன. விஷயத்தைச் சொல்லலாமா, வேண்டாமா என்ற கேள்வி அந்தப் பார்வையிலே தோற்றியது.

''என்ன யோசிக்கிறீர்கள்? நான் அருகிலிருந்து கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். எங்கள் தேவ ராஜாவின் நடன ராணியாகிய ஊர்வசியே கண்டு மயங்கிய அந்த வடவாங்கனாமணி யார்?'' என்று உச்சைசிரவமே கேட்டு விட்டது. அப்புறம் ஒளிமறைவாக வைப்பதில் என்ன லாபம்? இந்தச் சாக்கில் வடவையின் ரூபலாவண்ய

வருணனையில் அக்குதிரைகள் ஒன்றை ஒன்று முந்திக் கொண்டன.

அவ்வளவையும் கேட்டு வந்த அந்தத் துரகேந்திரனுக்கு உள்ளத்தில் ஏதோ ஓர் உணர்ச்சி உண்டாகி விட்டது. மயல் மீறியது. கண் சுழன்றது. பலமெல்லாம் போய் விட்டது போன்ற சோர்வு உண்டாயிற்று. 'இந்தக் கண்களால் ஒரு முறை அந்த அசுவசுந்தரியைப் பாராவிட்டால் ஓரடியும் எடுத்து வைக்க யோக்கியதையில்லை' என்ற எண்ணத்தோடு அது விடை பெற்றுக் கொண்டது.

2

கடிமணப் படலம்

வடதிசைப் பெருங்கடலில் கொலு வீற்றிருக்கும் குதிரைப் பெருமாட்டி தாளஜதி போட்டு ஆடுவது போலவும், அந்த நர்த்தனத்தின் முடிவிலே இனிய கர்ஜனையினால் முத்தாய்ப்புக் கொடுப்பது போலவும், கழுத்தை மேலும் கீழும் ஒய்யாரமாக அசைத்துக் கண்டோர் கருத்தை வளைத்துப் பிடிப்பது போலவும் இன்னும் என்ன என்னவோ விதமாக உச்சைசிரவம் கற்பனை செய்து பொழுதைப் போக்கியது.

இந்திரன் என்றைக்கு வடதிசைக்கு எழுந்தருளுவான் என்று தவம் பண்ணிக்கொண்டு காத்திருந்த உச்சைசிரவத்துக்கு அத்தகைய சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. அது வடதிசைப் பவனியை எதிர்பார்க்கப் பார்க்க அந்த நாள் வராமல் தூரத்தில் போய்க் கொண்டே இருந்தது. பொறுமை இழந்து மயல்மீறிப் புழுங்கிய நெஞ்சுடன் தேவலோகக் குதிரை நாட்களைக் கழித்தது.

கடைசியில் அந்த நாள் வந்தது. இந்திரன் மேரு மலைக்குப் பிரயாணமானான். வடதிசையில் இருக்கும் பொன் மலையை நாடி அசுவாரூடனாய்ச் சென்ற இந்திரன் அங்குள்ள வித்தியாதர நகரத்துக்குச் சென்று வித்தியாதர

மகளிருடைய ஸல்லாபத்திலே ஒன்றியிருந்தான். இதுதான் சமயமென்று தெரிந்த உச்சைசிரவம் மெல்ல அங்கிருந்த உச்ச சிகரத்தை அடைந்து வட கடலைப் பார்க்கும்போது அதன் கண்ணிலே வடவையின் உருவம் பட்டது. "ஆஹா! என்ன அழகு! என்ன லலித குஸுமாங்கம்! அந்தப் பைத்தியக்காரக் குதிரைகளுக்குச் சரியாக வருணிக்கத் தெரியவில்லையே. ஸ்ரீ வாக்தேவியின் திருவருளால் நாம் கவியானால் சிறிது வருணித்துப் பார்க்கலாம். என்ன ஒய்யாரம்! என்ன உல்லாசம்! மந்த மாருதத்திலே அசையும் கற்பக விருக்ஷத்தின் பல்லவங்களுக்கு இந்த நெளிவு வருமா? சூரியனுக்குத்தான் இந்தக் காந்தி வருமா? என்ன ஜோதி மயமான தேகம்! ......

'ஹே அசுவ சுந்தரி' ஹே சமுத்திர வாஸினீ, உனக்கு இந்த வடிவழகைத் தந்த பரமேசுவரன் உன் மனத்தை மாத்திரம் கல்லாகப் படைத்தானோ. சர்வ லோகங்களும் உன்னுடைய மோகன நடனத்திலே மயங்கி விடுமென்று எண்ணியோ இந்த வட புறப் பெருங் கடலிலே யார் கண்ணுக்கும் படாத இடத்திலே கொந்தளிக்கும் அலைக் கூட்டத்தினிடையே உனக்கு ராஜதானி ஏற்பட்டது? நீ இங்கே இருக்க வேண்டுமென யாரேனும் சாபமிட்டார்களோ! — ஆஹா, உன்னுடைய லாவண்ய அம்புராசி நீ வீற்றிருக்கும் பெருங்கடலைக் காட்டிலும் விரிவாக இருக்கிறது. நீ தலை நிமிர்ந்து நிற்கும் கோலத்தைக் கண்டு அந்த அலைகள் தாம் தாம் அந்த மாதிரி நிமிர்வதாகச் சண்டையிட்டு மோதி உருக்குலைந்து சிதறித் துளித் துளியாகின்றனவே! இது என்ன பரிதாபம்! வெறும் அலைகளுக்கே இவ்வளவு மோகம் உண்டானால் நீ வேறு இடத்தில் இருந்தால் சர்வ ஜீவர்களுடைய மனங்களும் உன்னை விரும்பி வந்து மோதி மோதி மாண்டொழியும் அல்லவோ? — ......

"உன்னைக் காணக் கிடைத்தது என் பாக்கியம். கண் பெற்ற பயனை இன்றே அடைந்தேன். ஆம். இந்தக் காட்சியிலேயே இவ்வளவு ஆனந்தம் இருக்குமானால்,

உன்னுடைய அருகிலே இருந்து உன்னுடைய மெல்லிய நாவால் வருடப் பெற்றால் அதைக் காட்டிலும் ஸ்வர்க்க போகம் ஒன்று உண்டா?.....

''நீ கார்க்கடலிலே உதித்தாய்; நான் பாற்கடலிலே உதித்தேன். ஆதலால் இருவரும் இசைந்து இன்புறுவதற்கு பொருத்தம் இருக்கிறது.

''நீ சொல்லலாம்: நான் தேவலோகவாசி என்றும், நீ பூலோகவாசி என்றும் சொல்லி என்னை ஏமாற்றப் பார்க்கலாம். அப்படி எதையாவது சொல்லி எனக்குப் பைத்தியம் பிடிக்கச் செய்து விடாதே. நீ பூவுலகத்துக்குப் புறம்பானவள். அப்படியே பூவுலகவாசி யானாலும் பாதகம் இல்லை. தேவலோகத்தவர்கள் பூவுலகத்து பெண்களை மணந்து இன்புறும் சம்பிரதாயம் நெடுங் காலமாக உண்டு. ஆகையால் நம்மிடைய ஏற்படப் போகும் காதல் தேவலோக சம்பிரதாயத்துக்கு விரோதம் அன்று. ....

''உன்னுடைய கடாக்ஷவீக்ஷண்யம் பெறா விட்டால் நான் உய்யேன். ஹே ஸர்வாங்க சுந்தரி, துரகத மஹாராணி, கிருபை செய்து என் உயிரைக் காப்பாற்று.''

தேவலோக சிருஷ்டிகளே அலாதியான இயல்புடையவை. எதிலும் அதியுச்சஸ்தாயியிலே போய் நிற்கும். உச்சைசிரவம் காமாக்கினியால் தகிக்கப்பட்டு ஒரே நோக்கமாக வடவையை அணுகியது. அன்பொழுகப் பேசி அதனுடன் அளவளாவி இன்புற்று மீண்டது.

3

சாபப் படலம்

என்ன ஆச்சரியம்! உச்சைசிரவத்துக்குக் கால் எழவில்லை. செய்யத் தகாத பாபத்தைச் செய்து சாபத்திற்கு ஆளானது போலப் பொலிவிழந்து தோன்றியது. தலை நிமிர்ந்து நடக்க முடியவில்லை. இந்திரன், காமத்தால்

பல சந்தர்ப்பங்களில் தன்னுடைய கௌரவத்துக்கு ஹானி தேடிக் கொண்ட சரித்திரமெல்லாம் அப்போது அதன் ஞாபகத்திற்கு வந்தன. 'மிகப் பழங்கால முதல் கடலின் இடையே கன்னிமை அழியாதிருந்த வடவையின் புனிதத்தைக் கெடுத்து விட்டோமே!' என்ற எண்ணம் வந்தபோது அதற்குப் பகீரென்றது. 'ஐயோ, தேவலோகத்தில் அமரேந்திரனுடைய வாகனமாக இருக்கும் எனக்கு இந்தத் துர்புத்தி எங்கிருந்து வந்தது? பரம சாத்விகத்தின் அடையாளமாகிய பாற் கடலிலிருந்து பிறந்த எனக்கு இந்த இழி செயல் செய்யத் தோன்றுவதற்குக் காரணம் என்ன? ஐயோ! சர்வ ஜீவதயாபரியாகிய மகா லக்ஷ்மிக்குப் பின்னவனாக இருக்கும் எனக்கு இந்த அறிவு மயக்கம் வருவானேன்? அந்தப் பாழும் பச்சைக் குதிரைகள் செய்த போதனையிலே மதிமயங்கிப் படுகுழியில் விழுந்தேனே! என்னுடைய அமரலோக வாழ்விற்கே மோசம் வந்து விட்டால் நான் என்ன செய்வேன்!' — இப்படி அதன் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது; படக்குப் படக்கென்று அடித்துக் கொண்டது.

வித்தியாதர லோகத்தில் உள்ளவர்கள் அதன் தோற்றத்தில் ஏதோ குறை இருப்பதை உணர்ந்தும் பேசாமல் இருந்து விட்டார்கள். இந்திரன் மீட்டும் அமராவதி சென்றான். அவனுக்கு ஆயிர ஞாபகங்கள். அவன் கண்ணில் உச்சைசிரவத்தின் தளர்ச்சி படவில்லை.

அமராவதி வாசிகளின் கூரிய கண்களை மறைக்க முடியுமா? ''என்ன? அசுவ ராஜா ஒருமாதிரியாக இருக்கிற மாதிரி காண்கிறதே'' என்று நாரத மஹரிஷி தம் தாடியை உருவிக் கொண்டு கேட்டார். அதோடு அவர் நின்றாரா? ''ஏன் ஸ்வாமி, உம்முடைய வர்க்கத்தைச் சேர்ந்த உச்சைசிரவம் என்ன இப்படித் தேஜஸ் குறைந்து ஏதோ சிந்தையில் ஆழ்ந்து கிடக்கிறதே; தேற்ற வேண்டாமா?'' என்று குதிரை முகம் படைத்தவரும் தம்முடைய சகாவுமான தும்புறுவைக் கேட்டார்.

நாரதர் இந்த மாதிரியான சமயங்களில் சும்மா

இருந்து விட்டால் சர்வ லோகங்களும் வேலையில்லாமல் ஓய்ந்து ஸ்தம்பித்துதான் நிற்க வேண்டும். அவர் தம்முடைய மகதி யாழின் இன்னிசைக்கு இடையிடையே உச்சைசிரவத்தின் வசையையும் பரப்பிக் கொண்டே சென்றார். அமர லோகம் முழுவதும் இரகசியம் பரவி விட்டது. 'இந்திரன் அகலிகையைக் கெடுத்தான்; இந்திர வாகனம் வடவையைக் கெடுத்தது என்ற பேச்சுப் பிரம்மலோகம் முதலிய வேறு லோகங்களிலே பரவலாயிற்று. எங்கும் இதே பேச்சு.

வாயு பகவான் இதைக் கேட்டார். வடவைத் தீயின் பக்கத்திலே போகும்போது, ''சர்வ லோகங்களையும் தகிக்கும் அச்கினி ஸ்வரூபமாக நிற்கும் நீயே காமாக்கினியால் தாக்கப்பட்டாயென்பது ஆச்சரியமல்லவா?'' என்று இரங்கினார்.

''ஐயோ! நான் தெரியாமல் இந்தத் தீச்செயலில் இறங்கினேன். இனி என் செய்வேன்! இந்தப் பழி என்னை இதோடு விடுவதாகத் தெரியவில்லையே! இந்த அசந்தர்ப்ப சம்பந்தத்துக்கு ஓர் அடையாளங் கூட ஏற்படும் போல இருக்கிறதே'' என்று வடவை அழுது புலம்பியது. அது கர்ப்பமாக இருக்கிறதென்ற செய்தியை அக்கினிசகாயர் தெரிந்து கொண்டு தம் கைகளால் மெல்லத் தடவிக் கொடுத்துச் சமாதானம் செய்து விட்டுச் சென்றார்.

பிறகு நாரதர் வந்தார்; குசலப் பிரச்னம் செய்தார்; ''ஆஹா! உன்னுடைய தவமே தவம்! தேவலோகத்தில் உள்ள அசுவராஜாவின் உள்ளம் கவர்ந்த உன் பெருமையே பெருமை! வேறு யாருக்கும் கிடைக்காத பாக்கியமல்லவா உனக்குக் கிடைத்திருக்கிறது?'' என்று மெல்ல ஆரம்பித்தார்.

வடவைக்கு ஆத்திரம் வந்தது; கோபம் பொங்கியது; நாரதராக இல்லாதிருந்தால் அப்போதே பொசுக்கிச் சாம்பலாக்கி இருக்கும். திரிலோக சஞ்சாரியும் தவ ராஜருமாகிய அவருக்கு முன் அதன் சினம் என் செய்யும்? ஒன்றும் செய்ய முடியாமல் ஹோவென்று புலம்பியது.

''மஹரிஷே! என்னைக் குத்திக் காட்ட வேண்டாம். நான் புண்பட்டு நிற்கிறேன். அந்தப் புண்ணிலே கோலை இடுவது போல் நீங்கள் பேசுவது தருமமா?!' என்று அழுது கொண்டே கேட்டது.

''குதிரைக் கன்னியே, இதில் என்ன பெரிய தவறு இருக்கிறது? அப்படி இருந்தாலும் அந்தத் தவறு உன்னு டையதல்லவே? உச்சைசிரவம் வந்து பேசத தொடங்கினால பேசாமல் மௌனமாக இருக்க யாருக்குத்தான் முடியும்? இந்திர லோக வாசிகளுக்கு இந்த மாதிரியான செயல்கள் இயல்பே. நீ அதைரியப் படாதே. உன்னை ஒருவரும் குறை கூற மாட்டார்கள்.

வடவைக்கு சிறிது ஆறுதல் உண்டாயிற்று. தன் மனத் திலுள்ள கவலையை ஆற்றிக் கொள்ள எண்ணி, ''அப்படி யானால் என்னுடைய கௌரவத்திற்குப் பங்கம் நேராது என்றா சொல்கிறீர்கள்?'' என்று, கேட்டது.

''அதிலென்ன சந்தேகம்? மேற்கொண்டு ஒரு விசேஷமும் இல்லாதிருந்தால் உலகம் இதை மறந்து விடும். மீண்டும் நீ கன்னித் தன்மையை அடைவாய்.''

வடவை ஏதோ சொல்ல வாயெடுத்தது! பேச வர வில்லை ஆனாலும் சொல்ல வந்ததைச் சொல்லியே தீர வேண்டுமென்று தோன்றவே மிகவும் நாணத்தோடு, ''மஹரிஷே, மேற்கொண்டு ஒரு விசேஷமும் இல்லாமல் இருக்க முடியாது போல் இருக்கிறதே! நான் இப்போது ....''

''அப்படியா! தெரிந்து கொண்டேன். தேவலோகத் துக்கு மற்றோர் உச்சைசிரவம் கிடைக்கப் போகிறது. அதை இந்திர குமாரனுக்குக் கொடுத்து விடலாம்''

''தபோநிதி, என்னை இப்படித் தங்கள் வார்த்தை களால் சித்திரவதை செய்யக் கூடாது பூலோகத்திலுள்ள மனிதர்களுக்குக்கூடக் கர்ப்பிணியென்றால் இரக்கம் உண்டாகும். தாங்கள் என்னுடைய துக்கத்துக்குச் சமனம் கிடைக்கும் மார்க்கத்தைச் சொல்ல வேண்டும்.''

''சரி, உனக்குப் பிறக்கும் குழந்தை தெய்வ

வாகனமாக விளங்கட்டுமென்று ஆசீர்வதிக்கிறேன். போய் வருகிறேன்'' என்று மகதி யாழை மீட்டிக் கொண்டு புறப் பட்டார் நாரத மகாமுனிவர்.

கலக கோலாகல முனிவர் நேரே தம்முடைய இசைத் துணைவராகிய தும்புருவினிடம் வந்து, ''தும்புரு ஸ்வாமி, கேட்டீரா அதிசயத்தை! உச்சை சிரவத்துக்கும் வடவாக் கினிக்கும் நேர்ந்த சிநேகத்தினால் ஓர் அசுவம் உதிக்கப் போகிறது. உங்கள் துரகதப் பிரபஞ்சத்துக்கே பால சூரியனாக அக்குழந்தை திகழலாம். அந்தக் குழந்தை யாதொரு விக்கினமும் இன்றி உதயமாக வேண்டுமென்று ஆசீர்வாதம் செய்யும்'' என்று பரிகாசத் தொனியோடு சொன்னார்.

''இந்த விஷமப் பேச்சை விட்டுவிடுமென்று எவ்வளவு நாள் சொல்லியிருக்கிறேன்! உம்முடைய அபூர்வ கான கானம் இல்லாவிட்டால் உம்முடைய ஸஹவாஸத் தையே விட்டிருப்பேன். நீர் அன்று உச்சை சிரவத்தின் துச்சரிதத்தைச் சொன்னது முதல் என்னுடைய முகத்தை வெளியிலே காட்டுவதற்கும் வெட்கமாக இருக்கிறது. இந்திர ஸதஸில் வீணைக்குப் பின்னாலே முகத்தை மறைத்துக் கொண்டு பாடுகிறேன். இந்த அவமானம் பொறுக்க முடியவில்லை.''

''அவமானமா? தேவலோக வாசிகளுக்கு இது சம் பிரதாயமாய்ப் போன விஷயந்தானே? இப்போது அசுவ ஜாதிக்கு மற்றோர் இளங்குமரன் பெருஞ் செல்வமாக வரப் போகிறான்; அவனை உம்மிடம் கொண்டு வந்து விடச் சொல்கிறேன். உம்முடைய இனிமையான சங்கீதத்தை அப்பியாசம் செய்வித்து உமக்குச் சிஷ்யனாக வைத்துக் கொள்ளும்.

''நாரதரே, இந்த வெட்கக் கேட்டைப் பீடிகை, அத்தியாயங்கள், வருணனை இவைகளுடன் வளர்க்கிறீரே, போதும்; உபஸம்ஹாரம் பண்ணி விடுங்கள். என் கோபக் கனலில் நெய்யை விடாதீர்கள். இளங் குமரனாவது, பிசாசாவது! அப்படி ஒரு பழி பிறந்தால் அதன் குரல்

சர்வ விகாரமாய்க் கேட்பதற்கு சகிக்காததாய்ப் போகட்டும்; இதுதான் என் ஆசீர்வாதம்.''

''அடடா! என்ன காரியம் பண்ணி விட்டீர்? கோபம் பாபம் சண்டாளம். இதென்ன? அநியாயமாய் ஒரு குழந்தையை, அது ஒரு பாபமும் செய்யாமல் இருக்கும் போது சபித்து விட்டீரே! விகாரத் தொனியுடன் அந்தக் குழந்தை முழங்கினால் அது உம்முடைய அசுவ ஜாதிக்கே இழுக்கு ஆகாதா? நீர் கோபாவேசத்திலே இருக்கும் இந்த அவசரத்தில் பேசுவதனால் ஒரு நன்மையும் விளையாது; நான் போய் வருகிறேன்.''

நாரதர் உடனே சூரிய லோகத்தை அடைந்தார். அப்போதுதான் அஸ்தமித்து நான்கு நாழிகை ஆகி இருந்தன. சூரியனுடைய குதிரைகளை அருணன் அவிழ்த்து விட்டிருந்தான். அவை ஓய்ந்துபோய் ஓரிடத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தன. உச்சைசிரவம் செய்த காரியத்தை அவை முன்பே உணர்ந்து அதை ஏசிக்கொண்டு இருந்தன. தாமே அதற்குக் காரணமென்ற எண்ணமும், வேறு பல எண்ணங்களும் அவற்றின் மனத்தில் ஊடாடின.

நாரத முனிவரைக் கண்டவுடன் பணிந்து க்ஷேமலாபம் விசாரித்துவிட்டு, ''என்ன விசேஷம் ? அடியேங்களை நாடித் தேவரீர் எழுந்தருளிய காரியம் யாதோ ?' என்று விநயமாகக் கேட்டன.

''விசேஷம் இல்லாமலா வருவேன்? அசுவப் பிரபஞ்சத்திலே ஒரு புதுமை நிகழப் போகிறதே; உங்களுக்குத் தெரியாதோ?''

''பொழுது விடிந்தால் பொழுது போகுமட்டும் எங்கள் வேலையுண்டு; நாங்களுண்டு; மற்ற அக்கப் போர்களைக் கவனிக்க எங்களுக்கு அவகாசம் ஏது?'' என்றது ஒரு குதிரை.

''பூலோகத்தில் உத்தர மகாசமுத்திரத்தின் மத்தியில் வடவாமுகாக்கினி என்ற பெண் குதிரை இருக்கிறதே, நீங்கள் கண்டதுண்டோ ?''

''ஓரிரண்டு முறை எங்கள் கண்ணிலே பட்டதுண்டு;

ஆனால் கூர்ந்து கவனிக்கவில்லை. சில நாட்களாக அந்தப் பக்கத்திலிருந்து ஒரு தொனி, அழுகை போன்ற தொனி உண்டாகிறது; அதையெல்லாம் கவனிக்க எங்களுக்கு நேரம் ஏது?''

''அந்த வடவைக்கும் இந்திர லோகத்துக்கும் சம்பந்தம் உண்டாகி யிருக்கிறது.''

''ஏதோ சொல்லிக் கொண்டார்கள்; உச்சை சிரவத்திற்கும் வடவைத்தீக்கும் பிரேமை உண்டாயிற்றாம், உச்சை சிரவம் தன்னுடைய அநுக்கிரகத்துக்குப் பாத்திரமாக வடவையை வரித்ததாம். இதையெல்லாம் கவனிக்க எங்களுக்கு ஓய்வு ஏது, மகரிஷே!''

''அவர்களுடைய அநுராகம் முற்றி விளைந்து——''

''ஆமாம், முனிபுங்கவ; காற்றுவாக்கில் எங்கள் காதில் விழுந்தது. வடவை கூட இப்போது பூர்ண கர்ப்பிணியாக இருக்கிறதாம். இந்த விஷயம் பரம ரகசியமாம். உங்களுக்கு மாத்திரம் தெரியுமாம். இதையெல்லாம் தூண்டிக் துருவி ஆராய்வதற்கு எங்களுக்குப் போது ஏது ஸ்வாமி?''

''இவ்வளவுக்குள் அதற்குக் குழந்தை பிறந்திருக்க வேண்டும்.''

''நேற்றுச் சாயங்காலம் வரையில் பிறக்கவில்லை என்று யாரோ சொன்னார்கள். அதிசீக்கிரத்தில் உதயமாகுமென்றுதான் தெரிகிறது. இந்த விஷயத்திலே எங்களுக்கு என்ன அக்கறை? இதைப்பற்றி நாங்கள் தெரிந்து கொள்ள ஓய்வு எங்கே கிடைக்கிறது?''

''அசுவமுக சங்கீத விநோதராகிய தும்புருவுக்கு—''

''மகதியாழ் முனிவரே, அதுவும் கேள்விப்பட்டோம். அவருக்கு உச்சை சிரவத்தின்மேல் மிகுந்த கோபமாம். பிறக்கப் போகும் சிசுவின்மேல் கட்டுக்கடங்காத கோபமாம். ஏதோ காலும் அரையுமாக விஷயம் தெரிந்தது. எங்கள் வேலையே எங்களுக்குச் சரியாக இருக்கிறபோது பரிபூர்ணமாகத் தெரிந்து கொள்ளச் சந்தர்ப்பம் எங்கே?''

நாரத முனிவருக்கே சிரிப்பு வந்து விட்டது. ஆதிமுதல்

அந்தம் வரையில் அந்தக் குதிரைகள் தெரிந்து கொண்டு இருப்பதை அவர் உணர்ந்தார்.

''அது கிடக்கட்டும்; தேவராஜாவுக்கு வாகனம் உச்சை சிரவம்; தேவராஜாவின் குமாரனுக்கு அதனுடைய குமாரன் வாகனமாக வந்தாலும் வரலாம். ஆகையால் அந்த உச்சை சிரவ சிசுவுக்கு நீங்கள் கதி பழக்கி வைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!''

அந்த ஏழு குதிரைகளில் இதுவரைக்கும் பேசாமல் எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக்கொண்டு வந்த பெரிய குதிரைக்கு இந்த வார்த்தை எரிச்சலை உண்டாக்கியது. ஏழு குதிரைகளில் நடுநாயகமாக விளங்குவது அது. ''மகரிஷே, பழியின் ஸ்வரூபமாகத் தோன்றப் போகிற அந்தப் பிராணிக்குச் சாரியும் கதியுமா பழக்கித் தர வேண்டும்? போதும் போதும். அதன் முன்கால்கள் முன்னே சென்றால் பின்கால்கள் பின்னே செல்லவேண்டும். பழியினால் குன்றிப்போய் நிற்க வேண்டும்'' என்று அது வரையில் அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தைக் கொட்டியது.

''அடடா! என்ன வார்த்தை சொல்லுகிறாய்! சாபம் அல்லவோ கொடுத்து விட்டாய்! இங்கே நிற்பதில் பிரயோசனம் இல்லை; நான் போய் வருகிறேன்'' என்று நாரதர் திரும்பிப் பாராமல் புறப்பட்டு விட்டார். பஜனை பண்ணிக் கொண்டே சென்றவர், அமராவதியில் இந்திரன் அரண்மனையில் உச்சை சிரவம் இருக்கும் இடத்திற்குப் போனார். அப்போதுதான் உதயமாகி இருந்தது. உச்சை சிரவம் இரவெல்லாம் உறக்கமின்றி மனம் கலங்கி நின்று கொண்டிருந்தது. நாரதர் அதைக் கண்டவுடனே, ''ஹே அசுவ ராஜாவே, அழு; உடனே அழு; வைகுண்டத்துக்கு ஓடிப் போய் அழு; அப்பொழுதுதான் உன் மானம் நிற்கும். இப்பொழுதே போய் உன் உடன் பிறந்த ஸ்ரீதேவியின் காலில் விழுந்து ஏதாவது வழி கேள். உன் குழந்தை, வடவை வயிற்றிலே பிறக்கப் போகிற குட்டி, நன்றாக இருக்க வேண்டுமென்று ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு வா. இல்லா விட்டால் குதிரை முகம் படைத்த தேவர்

களுடைய சாபத்துக்கு ஆளாகி உன் சந்ததி எழில் குறைந்து பலமிழந்து உலகம் உள்ளளவும் நரக வாசத்தைப் போன்ற துக்கமய வாழ்க்கையிலே கிடந்து புழுங்கும்படி நேர்ந்து விடும். "அழு, உடனே அழு" என்று மூச்சு விடாமல் தடபுடல் படுத்தவே அந்தப் பேதைப் பரிமா ஒன்றும் தெரியாத மயக்கத்தில் ஆழ்ந்தது.

"என்ன மயங்குகிறாய்! அப்புறம் காலம் மீறி விட்ட தென்று வருத்தப்படும்படி நேரிடும். வடவைப் பெண்ணுக் காவது இரங்கு. தான் கருவுயிர்க்கப் போகும் புத்திரன் எல்லோராலும் வெறுத்து ஒதுக்கும்படி நேர்ந்தால் மானங் குலைந்து மாய்வாள். அந்தப் பழிவேறு உன்னை வந்து அடையும். ஆகையால் இப்பொழுதே போ. பாற்கடலில் அவதாரம் செய்த ஸ்ரீதேவியை அணுகி அழு; வாய் விட்டுக் கேள். அந்த தேவி மனமிரங்கி ஏதாவது வழி செய்வாள். போ. தாமஸம் செய்யாதே!"

"நான் என்ன செய்ய வேண்டும் மஹரிஷே?"

"என்னடா இது! தீப்பற்றி எரியும் போது நிதானமாக என்று கேட்கிற கதையாக இருக்கிறதே. உன் குழந்தைக்கு குரல் கர்ண கொடூரமாக இருக்க வேண்டுமென்ற சாபம் பிறந்திருக்கிறது. அதை மாற்றச் சொல். நான் வடவைக்கு அபயம் கொடுத்திருக்கிறேன்; பிறக்கும் குழந்தை தெய்வ வாகனமாவான் என்று ஆசீர்வாதம் செய்திருக்கிறேன். என் வாக்குப் பொய்க்கக் கூடாது. போ இப்பொழுதே. விசாரிக்க நேரமில்லை; பேசப் பொழுதில்லை; பிடர் பிடித்து தள்ளாத குறை ஒன்றுதான் பாக்கி. அப்படி அடித்தார் நாரதர். பேசாமல் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு புறப்பட்டது உச்சைசிரவம்.

4

வரம் பெறு படலம்

ஒருவர் கண்ணிலும் படாமலும் மூலையைப் பார்த்து ஒதுங்கி ஒதுங்கி இந்திரனது குதிரை பூனைபோலப்

பதுங்கி வைகுண்டத்தில் நுழைந்தது. அங்கே உள்ள விஷ்வக்ஸேனர், ஆதிசேஷன், நித்யஸூரிகள் முதலியவர்களுடைய கூட்டத்தைத் தாண்டி அந்தப்புறத்திற்குச் சென்று அங்கும் இங்கும் பார்வையைச் செலுத்தி உருட்டி விழித்து ஆராய்ந்தது. அப்பொழுதுதான் திருமகள் ஸ்நானம் செய்து அலங்கரித்துக் கொண்டு உள்ளே எழுந்தருளினாள். அவள் திருவடியில் விழுந்து எழுந்து, "என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று கதறியது.

"அட! உனக்கு என்ன வந்தது? இந்திரனுக்குப் பிரியமான உனக்கு என்ன துன்பம் வந்து விட்டது?" என்று லட்சுமிதேவி கேட்டாள்.

"தேவி, உன்னிடம் ஒளிப்பதிலே ஒன்றும் பயன் இல்லை. யாரிட்ட சாபமோ, என் பொல்லாத வினைப் பயனோ, நான் வடவையைக் காமுற்றேன். அதன் பலனாக அவளுக்கு ஒரு குழந்தை பிறக்கப் போகிறது. தேவலோகத்தினர் யாவரும் அது பிறப்பதற்கு முன்பே அதன் தலையில் ஏற்றுவதற்குப் பல சாபங்களைச் சுமையாக வைத்திருக்கிறார்களாம். என்னுடைய சந்ததி இவ்வளவு ஆதரவற்றுப் பழி சுமந்து நிற்பது எனக்கு இழிவல்லவா? எனக்கு இழிவு வந்தால் என் சகோதரியாகிய உனக்கும் பங்கு இல்லையா?"

"கேடு கெட்ட மிருகமே, தேவலோகத்துக்கு அடுக்காத செய்கையைச் செய்துவிட்டு வெட்கமும் மானமும் இல்லாமல் அதைச் சொல்லிக் கொள்ள இங்கே வந்து விட்டாயா? எல்லோரும் சாபம் கொடுக்காமல் என்ன செய்வார்கள்? நீ தான் பிறந்த இடத்தின் பெருமையையும் வாழும் இடத்தின் மதிப்பையும் சிறிதும் யோசியாமல் பெரிய தவறு செய்து விட்டாய். மற்றவர்களுக்கு அவை நன்றாகத் தெரியும். அதனால்தான் அவர்கள் உன்னைச் சபிக்காமல் உன் பழிப்பிண்டத்தைச் சபித்தார்கள். போ நாயே வெளியே; இங்கே வந்ததற்கு இந்தா, நானும் ஒரு சாபம் கொடுக்கிறேன். உன் அருமைக் குழந்தைக்குக் கொண்டு போய்ச் சேர். பாழாய்ப்போன வீட்டில் குட்டிச்சுவரின் கீழ்

உன் குழந்தை நிற்கட்டும். மனிதர் வாழும் இடம் அதற்குத் தக்கதல்ல. போ, என் கண்முன் நில்லாதே.''

உச்சைசிரவம் இடி விழுந்து நின்றது. அதன் உடம்பெல்லாம் நடுங்கியது. 'பெரிய இடத்தில் வாழ்க்கைப் பட்டால் பிறந்தகத்து உறவு மறந்து விடும்' என்பதை நிதரிசனமாகக் கண்டு அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக புறப்பட்டது. வாயில் வழியே போவதை விடப் புறக்கடை வழியே போவதுதான் மேல் என்று எண்ணிப் பின்வாசலைக் கடந்து சென்றது. தலை குனிந்தபடியே போய்க் கொண்டு இருந்த அதன் காதில், ''தம்பீ'' என்ற குரல் விழவே, தலை நிமிர்ந்து பார்த்தது. அங்கே ஒரு குப்பை மேட்டில் ஒய்யாரமாக வீற்றிருந்த ஜேஷ்டா தேவியைத் தரிசித்தது. அதற்கும் திருமகளுக்கும் மூத்த தமக்கை அவள். விம்மி அழுதபடியே அவள் காலில் விழுந்து, ''அக்கா, என் அக்கா, என் அக்கா'' என்று கதறிப் புலம்பியது. அந்த மூ(த்த) தேவியின் கேள்வி ஒன்றுக்கும் பதில் சொல்லாமல் நெடு நேரம் புலம்பித் தன் மனத்தில் உள்ள துக்கத்தை ஓரளவு கரைத்துக் கொண்ட உச்சைசிரவம் மெல்லத் தன் விருத்தாந்தத்தை எல்லாம் அக்காவுக்கு எடுத்துச் சொல்லியது

''சாபத்திலிருந்து விமோசனம் கிடைக்க வேண்டு மென்று ஸ்ரீதேவியை அணுகினேன். அவள் பின்னும் ஒரு சாபம் கொடுத்து அனுப்பிவிட்டாள். ஐயோ! ஒரு பாவத்தையும் அறியாத அக்குழந்தைக்கு எத்தனை சாபம்! நாரதர் கொடுத்த வாக்கும் வீணாகப் போகும் போல் இருக்கிறதே' இனி இந்த தேவலோகத்தில் கருணை யென்னும் சரக்கே இல்லாமல் போய்விடும்.''

எல்லாவற்றையும் ஆற அமரக் கேட்ட ஜேஷ்டா தேவி புன்னகை பூத்த திருமுகத்தோடு திருவாய் மலரலானாள்.

''என் அருமைத் தம்பி, இன்றே உன் விசனத்தை ஒழித்து விடு. இந்த தேவர்களெல்லாம் பொறாமைக் காரர்கள். கருணை என்பது இவர்களுக்கு ஒரு வியாபாரப் பண்டம். நான் பார்த்துக் கொள்கிறேன். தேவ லோகமே எதிர்த்து நின்றாலும் நான் கொடுக்கும் அபய

வார்த்தை பலன் தராமல் போகாது. தம்பி, மயங்காதே, உன்னுடைய செல்வக் குமாரன் நாரதர் திருவாக்கின் படியே ஒரு தெய்வத்தின் வாகனமாக விளங்குவான். நானே அத் தெய்வம். என் தம்பி மகன் எனக்கு வாகனமாக வாழ்வதைவிட வேறு பாக்கியம் என்ன இருக்கிறது? இந்தப் பொல்லாத தேவலோகம் என்னை என்ன சொல்லக் கிடக்கிறது? யாரோ ஒருவன் அவன் குரல் கர்ண கடோரமாக வேண்டும் என்று சபித்தான் என்கிறாய். இதோ நான் சொல்வதைக் கேள்; உலகத்தில் ஜனங்கள் அந்தத் தொனியைக் கேட்டு நல்ல நிமித்தமாக எண்ணி சந்தோஷமடைவார்கள். பரிசுத்தமான வஸ்திரங்கள் அந்தக் குமரன் திருமேனியில் இடம் பெறும். தீர்த்தக் கரையிலே அவன் உலவுவான். போதுமா வரங்கள்?''

''அக்கா, உன் கருணையை என்னவென்று சொல்வது!'' என்று ஆனந்தக் கண்ணீர் துளிக்கக் கூத்தாடியது இந்திர வாகனம்.

ஃ ஃ ஃ

இவ்வாறு பிறப்பதற்கு முன்னே கட்டிக் கொண்ட சாபங்களோடும் வரங்களோடும் தேவடவைத் தீமகளின் திரு வயிற்றை அலங்கரித்த கர்த்தப ராஜகுமாரன் ஒரு நல்ல நாளில் அவதாரம் செய்தான். அதேவனுடைய சந்ததியே இன்று நாம் காணும் வெள்ளி மூக்குக் குதிரை.

அவலக்ஷணத்தின் விலை

படே படே ஆசாமிகளெல்லாம் காலம் கெட்டுப் போயிற்று என்று முணுமுணுத்துக் கொண்டிருக்கும் இந்தக்

காலத்தில் 'நல்ல காலம்' ஓர் அவலக்ஷண்த்துக்குப் பிறந்தது என்றால் யார்தான் ஆச்சரியப் பட மாட்டார்கள்? நீங்கள் ஆச்சரியப் பட்டாலும் படாவிட்டாலும் எனக்கு என்னவோ பெரிய ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

என்னுடைய நண்பன் ஜ ய ரா ம ன் அவலக்ஷணத்தின் அவதாரம். த டி த்த உருவம். கோணலான மூஞ்சி. வாயின் இ ர ண் டு பக்கத்திலும் மூன்றங்குலம் நீ ண் ட பற்கள், சப்பட்டை மூக்கு. பெரிய பயங்கரமான கண்கள். இவ்வளவையும் அவனுடைய திருமேனியழகுக்குக் காரண மானவைகளாகச் சொல்லலாம். நல்ல கறுப்பு; 'ந ல் ல' என்று சொல்லி விட்டதனால் கிருஷ்ணர் ராமர் இவர்களைப் போன்ற கறுப்பென்று நினைத்து விடாதீர்கள். அவர்கள் எல்லாம் நிலக்கரியைப் போல் பளபளப்பான கறுப்பர்கள். ஜயராமன் வெ று ங் க ரி போல ம ழு ங் கி ன கறுப்பன். உடலுக்கும் அறிவுக்கும் சம்பந்தமே இல்லையென்பதை அவனிடம் காணலாம். சாதுர்யமாகப் பேசும் அவனுடைய பேச்சுக்களுடைய மதிப்பை அவனது அவலக்ஷண ஸ்வரூபம் உலகத்திற்குத் திரை போட்டு மறைத்தது.

ஃ ஃ ஃ

ஒரு நாள் சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்து கொண்டிருந் தேன். தபால்காரன் ஒரு பெரிய கடிதம் கொணர்ந்து கொடுத்தான். அதைப் பிரித்து வாசித்துப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! ஐந்து வருஷங்களுக்கு முன்பு எங்கேயோ ஓடி விட்ட என் நண்பன் ஜ ய ரா ம னி ன் கடிதம் அது! சென்னையிலிருந்து எழுதப் பட்டது. அதனை அப்படியே உங்களுக்குக் காட்டுகிறேன். முற்றும் படித்த பிறகு நான் ஆச்சரியப் படுவது பிசகென்று நீங்கள் சொன்னால், 'வேறு என்ன செய்ய வேண்டும்?' என்று உங்களை யோசனை கேட்கலாமென்று இருக்கிறேன்.

ஃ ஃ ஃ

அன்பார்ந்த நண்பனே!

இந்த ஐந்து வருஷங்களாக என்னைச் சந்திக்காமை

யால் ஒரு கால் என்னை மறந்திருக்கலாம். என்னுடைய அவலக்ஷணம் அவ்வளவு சீக்கிரம் மறப்பதற்குரியதென்று நான் நினைக்கவில்லை. நான் ஊரை விட்டு வந்து விட்ட பின்பு நீயும் பிறரும் என்னைப் பற்றிப் பலவாறாக நினைத்திருக்கலாம். என்னுடைய அவலக்ஷணம் எனக்கே அருவருப்பை உண்டாக்கி இந்த உலகத்திலிருந்தே மறைந்து விடச் செய்திருக்கும் என்பது போன்ற எண்ணங்கள் எழுவது சகஜந்தான்! ஆனால் கடவுள் புண்ணியத்தால் என்னுடைய அவலக்ஷணம் நீடூழி வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன். நீயும் 'ததாஸ்து' என்று சொல், ஏன் தெரியுமா? நான் இந்த உலகில் வாழ நிலையான காரணம் வேண்டுமென்றால் அது என் அவலக்ஷண உருவமேயாம்; இதில் சிறிதேனும் பொய்யில்லை.

என்ன! நான் சொல்வது ஒன்றும் உனக்கு விளங்கவில்லையல்லவா? நல்லது; இந்த அவலக்ஷணம் எனக்குப் பெரிய அதிருஷ்டத்தை உண்டாக்கியிருக்கிறது. நீ இதை நம்புவதற்கு இடம் இராது. ஒரு சமயம் அவலக்ஷணப் பரிசு ஒன்றை ஏற்படுத்தி உலகிலேயே மிகவும் அவலக்ஷணமுள்ளவர்களுக்கு அதனைக் கொடுப்பதாகச் சில கனவான்கள் முன்வந்தார்களென்றும். அது யாரோ ஒரு ஸ்திரீக்குக் கிடைத்ததென்றும் நீ கேட்டிருக்கலாம். அந்த மாதிரி ஒரு பரிசு ஆண்களுக்குள் அவலட்சண சிகாமணிக்குக் கொடுப்பதாக ஓர் இயக்கம் உண்டாயிருக்கலாமென்று நீ நினைக்கலாம். அந்த மாதிரி சமாசாரம் ஒன்றும் இல்லை.

நானே உழைத்துச் சம்பாதித்து வருகிறேன். கௌரவமான வேலை. என்னுடைய பெயரும் பிரசித்தப்பட்டு வருகிறது. 'ஓகோ! ஏதாவது பத்திரிகையின் ஆசிரியர் அல்லது பிரசங்கியாகப் போயிருக்கலாம்' என்று அவசரப்பட்டு எண்ணிவிடாதே. பத்திரிகாசிரியருக்குப் புகழ் கிடைப்பது அவ்வளவு சுலபமல்ல. பிரசங்கியாருக்குக் கிடைக்கும் புகழின் ஒரு பங்கு அவருடைய லட்சணத்திற்கும் ஆடம்பரத்திற்கும் சொந்தம். ஸ்திரீகள் செய்யும் பிரசங்கத்

திற்கும் கதைகளுக்கும் அதிகமான கூட்டம் கூடுவதும் மெடல்கள் விழுவதும் உருவத்திற்கும் பிரசங்கத்திற்கும நெருங்கிய சம்பந்தம் இருப்பதைக் காட்டவில்லையா? எனவே, நான் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தால் என்னுடைய அவலக்ஷணம் குறுக்கே நின்று ஒருவரையும் வரவொட்டாமல் கதவைச் சார்த்தித் தாழ்ப்பாள் போட்டுவிடுமே! என்னுடைய உத்தியோகம் இவைகளுக்கெல்லாம் மேலானது. என்னுடைய உயர்ந்த அவலட்சணமே அந்த உத்தியோகத்திற்கு உரிய யோக்கியதை.

செப்பிடு வித்தைக்காரன் ஜாலம் செய்வது போல் எழுதுவதாக எண்ண வேண்டாம். எனக்கு இப்பொழுது மாதம் ஐந்நூறு ரூபாய் வருகிறது. என் பெயரும் படமும் பத்திரிகைகளில் வருகின்றன. இந்த நிலை எப்படி எனக்கு வந்ததென்று அறிய விரும்புவாய்; சொல்லுகிறேன். கேள்:

நான் ஊரைவிட்டுப் புறப்பட்டவுடன் சென்னைக்கு வந்தேன். சென்னையில் என் உருவத்தோடு சஞ்சாரம் செய்ய நாணினேன். கையில் இருந்த பணம் செலவழிந்த பிற்பாடு பசி கொடுக்கும் சாட்டை அடியை என்னால் பொறுக்க முடியவில்லை. எங்கேயாவது ஒரு வேலையில் அமரலாம் என்றாலோ வேறு உடம்பு வேண்டும். ஏன் சென்னைக்கு வந்தோம் என்று எண்ணினேன். இப்படிப் பசியோடும் ஆலோசனையோடும் ஒரு தெரு வழியே நடந்து கொண்டிருந்தேன். 'பைத்தியக்காரன் கூடப் பத்துப் பேர்' என்றபடி என்னுடைய போட்டிபோட முடியாத அவலக்ஷண ரூப தரிசனம் செய்து கொண்டு பல பேர்கள் என்னைத் தொடர்ந்து வந்தார்கள். 'அழகைத்தான் பார்ப்பதுண்டு; அவலக்ஷணத்தை ஏன் இவர்கள் பார்க்கிறார்கள்?' என்று நினைத்தேன். எவ்வளவோ இடங்களில் அழகைப் பார்த்து இருந்தாலும் என்னைப் போன்ற அவலக்ஷண உருவத்தை எங்கும் பார்த்தே இருக்க மாட்டார்கள்; ஆதலினால் என்னுடைய அவலக்ஷணம் ஒரு புதுமையாக இருந்தது.

திடீரென்று ஓர் ஆள் என்னை அழைத்துக் கொண்டு ஒரு பெரிய கட்டிடத்திற்குள் சென்று கனவான் ஒருவரிடம் விட்டான்.

"நீர் எந்த ஊர்? இங்கே என்ன பண்ணுகிறீர்" என்றார் அவர்.

"நான் தஞ்சாவூர்ப் பக்கம். பட்டணம் பார்க்க வந்தேன். இப்பொழுது பசியோடு போராடுகிறேன்" என்றேன்.

அவர் என் அவலக்ஷண உருவத்தைப் பார்த்து வியந்து கொண்டிருந்தார். உடனே சிற்றுண்டிகள் கொண்டு வரச் செய்து சாப்பிடச் சொன்னார். சாப்பிட்டேன். அவர் என்னைத் தலை முதல் அடி வரையில் சாவதானமாக உற்று நோக்கினார். எதற்காக அவர் என்னை உபசரிக்கிறார் என்பது எனக்கு விளங்கவில்லை.

"ஐயா, என்னுடைய பசி தீர இவற்றை அளித்ததற்கு வந்தனம். முன்பின் அறியாத தாங்கள் இவ்வளவு அன்பு கூர்ந்து இந்தக் குரூபி-" என்று சொல்லுகையில் இரண்டு நாட்களாகச் சென்னையில் அலைந்த அலைச்சலும், 'ஏன் இந்த அவலக்ஷண உருவத்தோடு பிறந்தோம்' என்ற எண்ணமும் என்னை அறியாமல் துக்கத்தைக் கிளப்பி விடவே, ஓவென்று அழுது விட்டேன். அவர், "வருத்தப் பட வேண்டாம். என்னுடனே இரும்" என்று கூறிய குளிர்ந்த வார்த்தைகள் என் நெஞ்சைக் குளிர்வித்தன.

"ஐயா, என்னால் உமக்கு என்ன பிரயோசனம்? எழுதுதல் படித்தல் முதலிய காரியங்களை நான் செய்வேன். ஆனால் உங்கள் நண்பர்கள் என்னைக் கண்டால் அருவருக்கக் கூடும்."

"உமது உருவந்தான் எனக்குப் பயன்படப் போகிறது. என் நண்பர்களும் பிறரும் அதைத்தான் போற்றப் போகிறார்கள்."

"போதும் ஐயா! இனியும் ஏளனம் செய்ய வேண்டாம். நான் பிறந்தபொழுதே அவமதிப்பும் எனக்கு உடன் பிறந்த உரிமையாகி விட்டதால் நீங்கள் இப்படிக் கூறுவது புதிதல்ல. அநாவசியமாக உங்கள் நேரத்தை வீணாக்குகிறேன். எனக்கு விடை கொடுங்கள்."

"என்ன? நான் சொல்வதை நீர் நம்பவில்லையா;

பாவம்! உலகம் உம்மைப் பயமுறுத்தி விட்டது. இப்பொழுது விஷயத்தை விளக்குகிறேன், கேளும். நான் ஒரு சினிமாக் கம்பெனியின் சொந்தக்காரன். எங்கள் கம்பெனியில் பல வகையான நாடகங்கள் தயாராகின்றன. மிகவும் லட்சண மான நடிகர்கள் எங்கள் வசம் இருக்கிறார்கள். அவர் களுக்கெல்லாம் தக்க சம்பளம் கொடுத்து வருகிறோம். இந்தியாவிற் பிரசித்தி பெற்ற சினிமாக்களுள் எங்க ளுடையதே முதன்மையானது. ஆனாலும், இப்பொழுது எங்கே பார்த்தாலும் போட்டி பலமாக இருக்கிறது. நாம் ஒன்று செய்தால் அதே மாதிரி மற்றொருவன் ஒன்று செய்து போட்டி போடுகிறான். நாங்கள் அமைக்கும் கதை நிகழ்ச்சியின் போக்கும் அந்த அந்த நடிகர்களுக்கு ஏற்றவாறு கொடுக்கும் வேலையும் மேனாட்டாரும் மதிக்கத் தக்க புகழை எங்களுக்குக் கொடுத்திருக்கின்றன. வட நாட்டுக் கம்பெனிகளிற் சில எங்கள் முறையைப் பின்பற்றி வருகின்றன. அழகிய பெண்களும், ஆடவர்களும் தேசம் முழுவதும் நிரம்பி இருக்கிறார்கள். ஆகையால் ஊருக்கு ஒரு சினிமாக் கம்பெனி ஆரம்பித்தாலும் நடிகர்கள் கிடைப் பார்கள். உமக்கு நான் சொல்லிக் கொண்டு வருவது விளங்குகிறதா?''

''ஆகா! விளங்குகிறது.''

''ஆகையால், நாங்கள் எவ்வளவு அழகான நடிகர் களைச் சம்பாதித்தாலும் அவர்களை விட மேலானவர்கள் மற்ற கம்பெனிகளுக்குக் கிடைத்து விடுகிறார்கள். இந்தக் காரணத்தால், எங்களுடைய புகழுக்கு ஒன்றும் குறை இல்லாவிட்டாலும், மேலும்மேலும் புதிய புதிய நாடகங்களை அமைத்து உலகத்தாருடைய உயர்ந்த மதிப்பைப் பெற முடியவில்லை. பழைய புகழின் ஒளியில் ஆடி வருகிறோம். எனவே புதுமுறை ஒன்றைக் கைக்கொண்டால் அதனால் புதிய கீர்த்தியைச் சம்பாதிக்கலாம் என்று நெடுங்காலம் யோசித்தேன். 'ஸ்திரீ வேஷங்களை ஆண்களுக்கும் ஆண் வேஷத்தைப் பெண்களுக்கும் போட்டு நடிக்கச் செய்ய லாமோ?'' என்பது போன்ற எவ்வளவு பைத்தியக்கார

எண்ணங்களை நினைத்ததுண்டு. அவையெல்லாம் எங்கள் கம்பெனிக்குப் பென்ஷன் கொடுத்து மூலையில் உட்கார்த்தி விடுவதற்கு ஏற்றவையாக இருந்தன. லக்ஷணமானவர்களைக் கதாபாத்திரங்களாக அமைப்பதில்தானே போட்டி? ஏன் அவலக்ஷணமானவர்களைக் கதையில் முக்கியமான நடிகர்களாக வைத்துச் சில நாடகங்கள் நடத்தக் கூடாது? என்ற ஒரு நல்ல எண்ணம் தோன்றியது. உடனே அதற்காக 40 வயசுள்ள ஒருவரைத் தேடிப் பிடித்து அவருக்கு நடிக்கும் முறைகளைக் கற்றுக் கொடுத்து, மாதிரிக்காக ஒரு கதையைத் தயார் செய்தோம். எதிர் பார்த்ததற்கு அதிகமாக எங்களுக்கு அதிக மதிப்பை அந் நாடகம் உண்டாக்கியது. எங்களுடைய துரதிர்ஷ்டம்: அந்தப் பிரதம நடிகர் சென்ற மாதந்தான் திடீரென்று இறந்து விட்டார். இனி என்ன செய்வதென்று ஏங்கி கொண்டிருந்தோம். உம்மைக் கண்டவுடன் எனக்குப் போன உயிர் வந்தது போல் இருக்கிறது. ஸினிமாவில் நடிப்பது எவ்வளவோ சந்தோஷச் செயல்'' என்று மேலேயும் சொல்ல ஆரம்பித்தார்.

''அதைப் பற்றி அதிகமாகச் சொல்ல வேண்டாம், இந்த உடம்பை எப்படி வேண்டுமானாலும் உபாயாகிக் கலாம். உங்கள் உத்தரவிற்கு இரண்டில்லை'' என்று அவர் காலடியில் வீழ்ந்தேன்.

ஃ ஃ ஃ

நான் விரைவாக நடிக்கும் முறையைக் கற்றுக் கொள்வதும் உள்ளக் கருத்தை நன்றாய்ப் பாவனை செய்வதும் ஸினிமாக் கம்பெனிக்காரருக்குத் திருப்தியை விளைதன. அடுத்த மாதம் ஒரு கதையில் நான் கதாநாயகனாக நடித்தேன். ஒரு மந்திரியும் அரசனும் இளமையில் நண்பர்களாக இருந்த போது ஒருவருக்குப் பெண்ணும் மற்றொருவருக்குப் பிள்ளையுமாக பிறந்தால் இருவருக்கும் கல்யாணம் செய்வதென்று சத்தியம் செய்து கொண்டார்கள். மந்திரிக்கு ஒரு பிள்ளை பிறந்தான். ஆனால் அவன்

மிகக் குரூபியாக இருந்தான். அரசனுக்கு ஒரு குமாரி பிறந்தாள். அவள் நல்ல அழகி. மந்திரி குமாரன் குரூபியாக இருப்பதைக் கண்டு அரசன் தன் சத்தியத்தை நிறைவேற்றாமல் இருந்தான்; மந்திரி குமாரனுக்கும் அரச குமாரிக்கும் அந்த சத்தியத்தைப் பற்றிய வரலாறு தெரிந்தது. அரச குமாரி வாக்குப் பிசகக் கூடாதென்றும் தனக்குக் குரூபி கணவனாக ஆனாலும் அரசனுக்கு அசத்தியவான் என்னும் இழிவு வரக்கூடாதென்றும் எண்ணினாள். மந்திரி குமாரன் எப்படியும் அரச குமாரியை மணப்பதென்று உறுதி கொண்டான். பல வீரச் செயல்கள் செய்து அவளைக் கவர்ந்து சென்று மணந்து கொண்டான். ஆனாலும் அவளை மனைவியாக நடத்தாமல் மரியாதையாக இருந்து வந்தான். அவள் துக்கப் பட்டாள். ஒரு முனிவருடைய அனுக்கிரகத்தால் மந்திரி குமாரன் அழகிய உருவம் அடைகிறான். ஆனாலும் வேண்டிய பொழுது பழைய ரூபத்தைக் கொள்ளும் சக்தியையும் பெற்றான். தன் அழகிய வடிவத்தை மனைவிக்குக் காட்டாமல் இருந்து வந்தான. ஒரு நாள் அவள் அதனைக் கண்டு விட்டாள். அப்புறம் அனன் பழைய உருவத்தைக் கொள்வதே இல்லை — இதுதான் கதை.

இந்தக் கதையில் நான் யாராக நடித்திருப்பேன் என்பதைச் சொல்ல வேண்டாம். ஆசை என்னும் குணத்திற்கு இதுதான் முடியும். இது முடியாதென்று எண்ணுகிற சக்தியே இல்லை. மந்திரி குமாரன் அழகிய உருவத்தைப் பெற்றதைப் படம் பிடிக்கும்போது எனக்குப் பதிலாக வேறொரு நடிகர் வந்தார். நானே அப்படி மாறும் சக்தி உண்மையாகவே வந்துவிடக் கூடாதா என்று என் பேதை மனம் நினைந்து சில நிமிஷம் ஏங்கியது.

அந்த நாடகம், கம்பெனிக்காரர் நம்பினபடி மிகச்சிறந்த பெயரை உண்டாக்கிற்று. அதற்குமுன் எடுக்கப் பட்டவற்றிற்கும் அதற்கும் உள்ள வித்தியாசம் ஒன்றுதான். அது, நான் பிரதான நடிகனாய் இருந்தமையே. அந்தப் படம், சென்னையில் இருபது வாரங்களும், பம்பாயில் பதினைந்து

வாரங்களும், இன்னும் எங்கெங்கோ பல வாரங்களும் ஓடியது. மேல் நாட்டுக்குக்கூடப் போய் வந்தது.

என் நடிப்பை எல்லோரும் சிலாகித்தவண்ணமாக இருக்கிறார்கள். மிகவும் திறமையுள்ளவர்களாலும் பின்பற்ற முடியாத சிறப்புடையதென்று சொல்லிக் கொள்கிறார்கள். எல்லாவற்றையும்விட, என் அவலட்சணத்துடன் போட்டி போடுபவர் இந்த உலகத்தில் எங்கும் இல்லையென்பது எங்கள் கம்பெனியின் சிறப்புக்கு முக்கிய காரணம்.

மந்திரி மகனாக நடித்த கதைக்குப் பிறகு பூதமாகவும், ராட்சசனாகவும், பிசாசாகவும், வேதாளமாகவும் நடித்த கதைகளுக்கு அளவில்லை. கதாநாயகனாக நான் நடித்த கதைகள் பல. என்னுடைய பெயர் ஜே. ஆர். மன் என்று மாறிவிட்டது. மாஸ்டர் ஜே. ஆர். மன்னைப்பற்றி நாள் தவறாமல் பத்திரிகைகள் எழுதுகின்றன. அவனுக்காகப் புதிய கதையை ஜோடிக்க இரண்டு கதாசிரியர்கள் பேனாவும் கையுமாக இருக்கிறார்கள். என்னை இந்தத் துறையில் புகுத்திய அந்த மகாப்பிரபு இந்தக் கம்பெனியின் லாபத்தில் ஐந்தில் ஒரு பங்கை எனக்குக் கொடுக்கிறார். எனக்குத் தனிப் பங்களா; வேலையாள் முதலியவர்கள் உண்டு.

இந்தக் கூத்தில் ஒன்று கேட்டாயா! என் உருவத்தைக் கண்டு என்னைக் காதலிக்கும் பெண் இருக்கப் போவதில்லையென்பது நிச்சயம். ஆனால் இதுவரைக்கும் பத்துப் பேருக்குமேல் என்னைக் கல்யாணம் செய்து கொள்ளப் பெண்கள் வந்தார்கள். வெறும் பணத்திற்காக வேண்டுமானால் அவர்கள் கல்யாணம் செய்து கொள்ளலாமே ஒழிய என் லக்ஷணத்திற்கு அவர்கள் ஜோடியல்ல என்பது எனக்குத் தெரியும். நான் பிரமசாரியாகவே காலம் கழிக்க உத்தேசித்து விட்டேன்.

நான் சம்பாதிக்கும் பணமெல்லாம் என் அவலக்ஷணத்தால் வந்ததுதானே? அதற்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்! ஒரு பெருந் தொகையைச் சேர்த்து அவலட்சணமான ஸ்திரீ புருஷர்களுக்கு ஏதாவது ஒரு

வகையில் உதவுவதற்குரிய ஸ்தாபனம் ஒன்றை நிறுவலாம் என்பது என் உத்தேசம். அதற்குரிய யோசனை உனக்கு ஏதாவது தெரிந்தால் எழுத வேண்டும்.

என்னுடைய பல வேஷங்களின் படங்களைத் தனித் தபாலில் அனுப்பி யிருக்கிறேன்......

ருசி கண்ட பூனை

கமலம், நான் எவ்வளவோ தடவை சொல்லி வாய் வலியெடுத்ததுதான் பிரயோசனம். படிப்பில் உனக்குக் கொஞ்சங் கூடப் பிரியமில்லை. அந்தக்கதைப் புஸ்தகத்தை வாங்கிக் கொண்டு வந்து ஒரு மாசம் ஆகிறது. இன்னும் வாசித்து முடித்த பாடில்லை. என்னுடைய மனைவி வாசிக்க வேண்டுமென்று கௌரவமாக மட்டும் சொல்லி வாங்கி வந்து விட்டேன். இங்கே உனக்கு அடுப்பு ஊதுவதில் தான் பிரியம் இருக்கிறதே ஒழிய ஒழிந்த நேரங்களில் எதையாவது எடுத்து வாசிப்போம் என்ற எண்ணமே இருக்கிறதில்லை.

"என்னை நீங்கள் குற்றம் கூறுவதில் என்ன பிரயோசனம்? எனக்குப் படிப்பதில் பிரியம் இல்லையா? தினத்துக்கு ஒரு புஸ்தகம் வாசித்துத் தீர்த்து விட மாட்டேனா? இங்கே வருவதற்கு முன் எங்கள் அகத்தில் எவ்வளவோ புஸ்தகங்கள் வாசிக்கவில்லையா? என்ன செய்வேன்! அகத்து வேலையை எல்லாம் செய்துவிட்டு வீண் பொழுது போக்குவதில் எனக்குக் கொஞ்சங் கூடப் பிரியமில்லை. உங்களுக்கு நான் பதில் சொல்வேனா? அத்தைக்குப் பதில் சொல்வேனா? அவர்களுக்குப் புஸ்தகத்தின் ருசி கொஞ்சமாவது தெரியவில்லை. அந்த ரஸம் தெரிந்தால் என்னை

படிக்க வேண்டாமென்று தடுப்பார்களா? அவர்கள் மேலும் குற்றம் இல்லை. இப்பொழுது வேண்டுமானால் கொஞ்சம் படிக்கிறேன்.''

''ஆமாம். போதும் நீ படித்தது. கால் வலிக்கிறது. கொஞ்சம் காலைப் பிடி.''

ஃ ஃ ஃ

கமலம் என்ன செய்வாள் பாவம்! பிறந்தகத்தில் செல்வமாய் வளர்ந்த பெண். அறுபது நாழிகையும் புஸ்தகமும் கையுமாக இருப்பாள். அவள் வாசியாத தமிழ்க் கதைகள் இல்லை; பாராத தமிழ்ப் பத்திரிகை இல்லை. புத்தகம் வந்தவுடன் வேலைகளைச் செய்து ஓய்ந்த நேரங்களில் படிக்க ஆரம்பிப்பாள்; அவளுடைய மாமியார் வருவாள்: ''என்னடீ அது; இரண்டாம் வேளைக்கு தோசைக்கு நனைத்ததை மறந்து விட்டாயோ? அரைக்கிறது தானே அதை? அதற்குள்ளே என்ன வாசிக்க உட்கார்ந்து கொண்டாய்? உன் அகமுடையானுக்கு குமாஸ்தா வேலை பார்க்கப் போகிறாயோ? இல்லை, வாத்தியாரிச்சி வேலைக்குப் போகப் போகிறாயோ? தலைக்கு மேல் காரியம் இருக்கிறது; அதற்குள்ளே வாசிப்பு என்ன வேண்டி இருக்கிறது?'' என்பாள்.

''இல்லை, அத்தை, இன்னும் கொஞ்சம் ஊறினால் நன்றாய் அரைக்கலாமே என்று நினைத்தேன்.''

''இன்னும் என்ன ஊற வேண்டும்? காலையில் எட்டு மணிக்கே நனைத்தது இன்னும் ஊறாமல் கிடக்கிறதா? வாசித்து வாசித்து இந்த வாய்தான் பழகியிருக்கிறது. சோம்பலுக்குக் குறைச்சல் இல்லை.''

''இதோ அரைத்து விடுகிறேன்.''

ஒரு நாள் நடைபெறும் காட்சி இது.

ஃ ஃ ஃ

எல்லா வேலையும் குறைவில்லாமல் செய்து விட்டாள் கமலம். தோசைக்கு அரைத்தாயிற்று. புருஷன் துணிகளையெல்லாம் மடித்து வைத்தாயிற்று. அத்தைக்குப் பிரியமான மொந்தம் பழம் வாங்கி வைத்தாய் விட்டது. தன் புருஷன் இரண்டு வாரங்களுக்கு முன் வாங்கிக் கொண்டு வந்து வைத்த 'மங்கையர்க் கரசியின் காதல் முதலிய கதைகள்' என்ற புஸ்தகத்தை வாசிக்கலாமென்று உட்கார்ந்தாள். ஐந்தே நிமிஷம் இருக்கும். பக்கத்து வீட்டிற்கு வம்பளக்கப் போயிருந்த மாமியார் வந்து விட்டாள்.

''தெரியுமே எனக்கு! அந்தப் பாழும் புஸ்தகம் உன்னைக் குட்டிச் சுவராக்க வந்திருக்கிறதென்று அப்பொழுதே சொன்னேனே. தலையை வாரிக் கொள்ள வில்லை; நெற்றியைக் கழுவிக் கொள்ளவில்லை. அகமுடையான் வந்தால் முன்னாலே போய் மூதேவி மாதிரி நிற்கத் தெரிகிறது. பெண்களுக்கு வேண்டிய நாஸுக்கு வேண்டாமோ! இந்தப் புஸ்தகப் பிசாசு எப்பொழுதுதான் ஒழியுமோ தெரியவில்லை'' என்று சொல்லிக் கொண்டே வந்தாள் மாமியார்.

''உங்கள் பிள்ளைதான் இதை வாசித்துப் பார் என்று சொன்னார்.

''அவன் சொல்லுவான்; நீயும் வாசிப்பாய். பெண்களுக்கு ஒரு வரம்பு இல்லையோ? அவன் நாளைக்கு ஆபீஸுக்கு வந்து உத்தியோகம் பார்க்கச் சொல்கிறான். நீ போகிறதுதானே? நான் சொல்லுகிறது உனக்குக் காதில் ஏறுகிறதோ? அவன் சொல்கிறானென்று ஒரேயடியாக வாயை அடைக்கப் பார்க்கிறாய். அவன் நான் பெற்ற பிள்ளைதானே?''

விஷயம் ஆபாஸமாகப் போய்விடுமென்று கமலம் பயந்தாள். ஆகையால் தன் மாமியார் கண்முன் வாசிப்பதையே நிறுத்தி விட்டாள். கணவனிடம் அதிகமாக ஒன்றும் சொல்ல மாட்டாள். அவனை அன்பினால் சமா

தானம் செய்து கொள்ளலாம் என்ற தைரியம் அவளுக்கு இருந்தது. ஆனாலும் அடிக்கடி அவன் படிக்கும் படி வற்புறுத்தி வந்தபடியால் உண்மையை ஒருவாறு கூறி விட்டாள்.

நாராயணன் தர்மசங்கடத்தில் மாட்டிக் கொண்டான். அவனுடைய தாய் அவனிடத்தில் அளவற்ற பிரியம் கொண்டவள். கமலத்தினிடத்திலும் பிரியமுடையவள்தான்; ஆனால் அவள் புஸ்தகத்தைத் தொடுவதை மட்டும் பார்க்கச் சகிக்க மாட்டாள். தாயைக் கோபித்துக் கொள்ள நாராயண னுக்குப் பிரியம் இல்லை. மற்ற எல்லா விஷயங்களிலும் அவள் காட்டி வரும் அன்பை அவன் மறக்க வில்லை. தன் மனைவியின் கல்வி பயன்படாதொழிவதை எண்ணி வருந்தினான். என்ன செய்வது? ஒன்றும் தோன்ற வில்லை.

ஃ ஃ ஃ

சாயங்காலம் ஆறு மணி. கையில் தமிழ்ப் பத்திரிகை யுடன் வீட்டில் நுழைந்தான் நாராயணன். தினமும் இங்கிலீஷ் பத்திரிகை-'ஹிந்து' வாவது வேறு ஏதாவது வாங்கி வருவது வழக்கம்.

''ஏது இன்று தமிழ்ப் பத்திரிகை வாங்கி வந்தீர்கள்?'' என்று கேட்டாள் கமலம்.

''இனிமேல் தினமும் அதுதான் வாங்கப் போகிறேன்.''

''ஏது, புதிதாகத் தமிழபிமானம் வந்திருக்கிறதா?''

''இல்லை; உன்னை உத்தேசித்துத்தான் வாங்கி வந்தேன்; எல்லாம் பின்னால் தெரியும்.''

ஃ ஃ

''இன்றைக்கு என்ன 'பேப்பரில்' விசேஷம்?'' என்று கேட்டாள் நாராயணன் தாய்.

"இன்றைக்கா? கும்பகோணத்தில் ஒரு பெரிய திருட்டாம். அதைப்பற்றிய விவரம் வந்திருக்கிறது" என்றான் நாராயணன்.

"எங்கே, வாசி பார்க்கலாம்" என்றாள் தாய்.

நாராயணன் வாசித்தான். அவன் தாய் மிகவும் ஊக்கத்தோடு கேட்டு வந்தாள்.

நாராயணன் தமிழ்ப் பத்திரிகை வாங்கி வர ஆரம்பித்த பின்பு சாப்பிடும் போதும் மற்றச் சமயங்களிலும் தன் தாய்க்குப் புரிகின்ற விஷயங்களையும் உலகத்தில் நடக்கும் விஷயங்களையும் எடுத்துச் சொல்வான். கொஞ்சம் கொஞ்சமாகச் சொல்லி, பின்பு அந்தச் சமாசாரத்தைப் பற்றிய விவரம் பத்திரிகையில் இருந்தால் படித்துக் காண்பிப்பான்; புரியாத விஷயங்களை விளக்கிச் சொல்வான். இந்த வழக்கம் மூன்று மாசமாக நடக்கிறது. நாள் தளறினாலும் சமாசாரங்களைக் கேட்பதில் அவன் தாய் தவறுவதில்லை. நாராயணன் ஒரு சமாசாரத்தைப் பாதி வாசித்து விட்டு வேலை இருக்கிறதென்று போய் விடுவான். கமலம் பாக்கிப் பாதியைப் படித்துக் காட்டுவாள். இப்படித் தினம் பத்திரிகை வாசிப்பதில் இருந்து வாரப் பத்திரிகைகள் மாதப் பத்திரிகைகள் வாசிக்கும் வழக்கம் ஏற்பட்டது. கதைப் புஸ்தகங்கள் வாசித்துக் கேட்கும் அளவுக்கு வந்து விட்டாள் நாராயணன் தாய். இப்பொழுதெல்லாம் நாராயணன் தன் தாய் பக்கத்திலேயே வருவதில்லை, எல்லாம் கமலந்தான். தான் வாசிக்கா விட்டாலும் தன் மாமியாருக்காகவாவது வாசித்தாக வேண்டும்.

ஃ ஃ ஃ

"கமலம், என்ன பண்ணுகிறாய்?"

"அடைக்கு நனைக்கப் போகிறேன்."

"போதும், போதும்; ரவை உப்புமா பண்ணி விடலாம். அந்தப் புஸ்தகத்தில் பாக்கி இருக்கிறதை இன்றைக்கு வாசித்துக் காட்டி விடு."

"ரவை இல்லையே!"

"இல்லா விட்டால் போகிறது; அடைக்கு நனை, பரவாயில்லை. ஆனால் நீ அரைக்க வேண்டாம், நான் அரைத்துக் கொண்டே இருக்கிறேன். நீ கதையை வாசித்துக் கொண்டே இரு!"

இப்படியும் ஒரு காலம் வருமென்று கமலம் நினைத் திருப்பாளா? அவளுடைய மாமியார் ருசி காணாதபோது புஸ்தகத்தை வெறுத்தாள்; இப்பொழுது அவள் ருசிகண்ட பூனையல்லவா?

எமது சமீப வெளியீடுகள்

1.	பல்லிசாமியின் துப்பு	தேவன்	25 00
2.	சீனுப் பயல்	,,	24 00
3.	அப்பளக் கச்சேரி	,,	22 00
4.	மனித சுபாவம்	,,	22 00
5.	சின்னஞ்சிறு கதைகள்	,,	26 00
6.	ஜாங்கிரி சுந்தரம்	,,	21 00
7.	பணம்—பெண்—பாசம்	ஜராவர் சீதாராமன்	60 00
8.	மின்னல்—மழை—மோகினி	,,	56 00
9.	நானே நான்	,,	35 00
10.	காசே கடவுள் !	,,	17 00
11.	சொர்க்கத்தில் புயல்	,,	20 00
12.	துக்ளக்—கேள்வி—பதில்	'சோ'	15 00
13.	வந்தே மாதரம் (நாவல்)	,,	48 00
14.	எங்கே பிராமணன்?	,,	60 00
15.	ஹாஸ்யக் கதைகள்	எஸ். வி. வி.	28 00
16.	சிவராமன்	,,	57 00
17.	சபாஷ்! பார்வதி!	,,	15 00
18.	கந்த புராணக் கதைகள்	பி. ஸ்ரீ.	26 00
19.	நாரதர் கதை	,,	16 00
20.	நவராத்திரியின் கதைகள்	,,	14 00
21.	ஔவையார்	,,	10 00
22.	துள்ளித் திரிகின்ற காலத்திலே (மாண்டிசோரி முறையில்-குழந்தை வளர்ப்பு)	,,	20 00
23.	ராஜரிஷி விசுவாமித்திரர்	,,	19 00
24.	தசாவதாரக் கதைகள்	,,	21 00
25.	தமிழ்த்தாத்தா உ. வே. சா.	சுந்தரராகவன்	14 00
26.	பெரியவாளின் ஆன்மீக அனுபவங்கள் — 'பாரதி காவலர்' ராமமூர்த்தி		12 00

எமது சமீப வெளியீடுகள்

1.	பல்லிசாமியின் துப்பு	தேவன்	25 00
2.	சீனுப் பயல்	,,	24 00
3.	அப்பளக் கச்சேரி	,,	22 00
4.	மனித சுபாவம்	,,	22 00
5.	சின்னஞ்சிறு கதைகள்	,,	26 00
6.	ஜாங்கிரி சுந்தரம்	,,	21 00
7.	பணம்—பெண்—பாசம்	ஜரவர் சீதாராமன்	60 00
8.	மின்னல்—மழை—மோகினி	,,	56 00
9.	நானே நான்	,,	35 00
10.	காசே கடவுள் !	,,	17 00
11.	சொர்க்கத்தில் புயல்	,,	20 00
12.	துக்ளக்—கேள்வி—பதில்	'சோ'	15 00
13.	வந்தே மாதரம் (நாவல்)	,,	48 00
14.	எங்கே பிராமணன்?	,,	60 00
15.	ஹாஸ்யக் கதைகள்	எஸ். வி. வி.	28 00
16.	சிவராமன்	,,	57 00
17.	சபாஷ்! பார்வதி!	,,	15 00
18.	கந்த புராணக் கதைகள்	பி. ஸ்ரீ.	26 00
19.	நாரதர் கதை	,,	16 00
20.	நவராத்திரியின் கதைகள்	,,	14 00
21.	ஔவையார்	,,	10 00
22.	துள்ளித் திரிகின்ற காலத்திலே (மாண்டிசோரி முறையில்-குழந்தை வளர்ப்பு)	,,	20 00
23.	ராஜரிஷி விசுவாமித்திரர்	,,	19 00
24.	தசாவதாரக் கதைகள்	,,	21 00
25.	தமிழ்த்தாத்தா உ. வே. சா.	சுந்தரராகவன்	14 00
26.	பெரியவாளின் ஆன்மீக அனுபவங்கள் — 'பாரதி காவலர்' ராமமூர்த்தி		12 00

27.	ஸ்ரீ பெரியவாளின் பொன்மொழி ஐநூறு	12 00
28.	பன்னிரு ஆழ்வார்கள் — M. ராதாகிருஷ்ணபிள்ளை	16 00
29.	வடநாட்டுக் கோயில்கள் ,,	27 00
30.	ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திரர் பதில்கள் (I-II)	30 00
31.	தெய்வத்தின் அருள்வாக்கு	12 00
32.	ஸ்ரீ மீனாட்சி கலிவெண்பா (ச்யாமளா த்ரிசதி) — உரை 'அனந்தன்'	25 00
33.	இதயக் கோயில்-லக்ஷ்மி ராஜரத்னம் (கலைமகள் நாராயண சாமி ஐயர் பரிசு பெற்ற நாவல்)	45 00
34.	விடிவைத் தேடி - ஆண்டாள் பிரியதர்சினி	15 00
35.	தமிழிலக்கிய விநோதங்கள் — டாக்டர் ஜான் ஆசீர்வாதம்	16 00
36.	அண்டர் செக்ரடரி — பூர்ணம் விசுவநாதன்	18 00
37.	இந்துமத உபாக்கியானம் ,,	20 00
38.	ஸ்ரீ அரவிந்தர் யோகி கு. ப. ரா	13 00
39.	கி. வா. ஜ. பேசுகிறார்	அச்சில்
40.	சிரிக்க வைக்கிறார் கி. வா. ஜ (சிலேடைகள்)	,,
41.	கி. வா. ஜ. பதில்கள் - இலக்கியம்	,,
42.	,, - ஆன்மீகம்	,,
43.	,, - பொது	,,
44.	திகைக்க வைக்கிறார் கி. வா. ஜ.	,,

தமிழ் உலகிற்குப் புதுமையான புத்தகம்
என் ஸ்ரீநிவாசன் எழுதிய
"இந்த நாளில் அன்று"
(தகவல் கலைக்களஞ்சியம் - NEWS ENCYCLOPAEDIA)
நான்கு தொகுதிகளாக விரைவில் வெளிவரும்

அல்லயன்ஸ்